Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 14/00

දිනමුරසු වාරමලර් மே 12- 18, 2002

# வாரமலர்

# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 459




## திருமலையில் அமெரிக்கப் பட்டை முகாம்?

## ஒரு கைதியின் கதை

## ஆன்மீகம்

### கர்மத்தின் விதியும் விளைவும்



புண்ணியம், பாவம் என்ற விதி ஆன்மீகத் துறைக்குப் பொருந்தும். ஒவ்வொரு செயலுக்கும் அதேயளவு எதிர்மறையான மற்றும் பிரதிபலிப்பு உண்டு என்பதே இதன் சித்தாந்தம்.

"வினை விதைத்தவன் வினையறுப்பான், தினை விதைத்தவன் தினையறுப்பான்", "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்"என்பன தமிழ் பழமொழிகள். அதாவது நாம் ஒருவருக்கு நன்மை செய்தால் அதற்குப் பிரதிபலனாக எமக்கும் நன்மை உண்டாகும். இந்த விதிமுறையை மிக எளிதாக நாம் உணர்ந்துகொள்ளலாம். அதாவது எம் வாழ்வில் நடைபெறும் சகல சம்பவங்களின் உள்ரகசியம் எமக்குப் புலனாகும். சிலர் இந்த ஊழ்வினையைச் சரிவரப் புரிந்துகொள்ளாமையால் எமது பழைய ஊழ்வினைப்பயன் காரணமாக நாம் இன்று துக்கமடைகின்றோம். இது எமது விதி. எம்மால் ஒன்றும் செய்ய இயலாது என மனம் சோர்ந்து போகிறார்கள். இந்த ஊழ்வினைப் பயனை அனுபவிப்பதால் எமது பழைய கணக்குகள் முடிவுக்கு வருகின்றன என உணர்ந்து சகிப்புத்தன்மையுடன் சந்தோஷமடைய முடியும். ஆகையால், இப்போது முதல் எமது செயல்கள் அனைத்தும் சிரேஷ்ட கர்மங்களாக அமைய வேண்டும் எனச் செயற்படவேண்டும். விதியை மதியால் வெல்லலாம் என்று கவனம் செலுத்தி வந்தால் விதிக்கு நாம் அடிமையாகமாட்டோம்.

ஓம் சாந்தி. பி.கு.விக்கி, களுவாஞ்சிக்குடி.

### விசுவாசம் பலனளிக்கும்

ஆண்டவரே என் ஆயர். எனக்கேதும் குறையில்லை. பசும்புல்வெளிமீது எனை அவர் இளைப்பாறச் செய்வார். (சங் 23: 1-2)

சிந்தனை என்பது ஒரு பெரிய பட்டாளம். அதை நாம் நல்ல முறையில் பயன்படுத்தி வெற்றிபெற வேண்டுமானால், நம்பிக்கையும், விசுவாசமும் சற்றும் தளராதிருக்க வேண்டும். பல சந்தர்ப்பங்களில் நாம் எதிர்பாராத துக்கங்கள், தோல்விகள் ஏற்படும்போது ஆண்டவரை அப்படியே தூக்கி எறிந்துவிடுகின்றோம். இது மனித பலவீனத்தை மட்டுமல்ல எமது அற்ப விசுவாசத்தையும் வெளிப்படுத் துவதாகும்.

என் சொந்த வாழ்வில் ஏற்பட்ட தோல்விகள் ஏராளம். தோல்விகள் ஏற்பட்டபோதெல்லாம் மார்த்தாவினதும், மரியாவினதும் விசுவாசத்தினால் மரித்துப்போன அவர்களின் சகோதரன் லாசர் ஆண்டவரால் உயிர்ப்பு பெற்றதை நினைந்து என் விசுவாசத்தைப் பன்மடங்காக்கினேன். என் எதிரிகள் வெட்கித் தலைகுனிந்து போகுமளவிற்கு என் தோல்விகளை நிலையான வெற்றியாக மாற்றினார் எம் பரம தந்தை இயேசு ராஜா.

அன்புச் சகோதர, சகோதரிகளே! தோல்வியினால், வேதனையோடும், துக்கத்தோடும், கண்ணீரோடும் வாழ்கிறீர்களா? எழுந்திருங்கள்!உண்மையான நம்பிக்கையோடும், விசுவாசத்தோடும் அவர் பாதம் செல்லுங்கள். விசுவாசத்தினால் மரித்துப்போன லாசருக்கு உயிரளித்த என் பரம தந்தை நிச்சயம் உங்கள் தோல்விகளை வெற்றியாக மாற்றுவார். பசும்புல்வெளிமீது உங்களை அவர் இளைப்பாறச் செய்வார்.

ஜோசப் அருள்சாமி, திகனை.

### அடியானில் என்னைக் காண்பாய்!

மறுமைநாளன்று அல்லாஹ் தனது அடியானிடம் கேட்பான். "ஓ.. ஆதமுடைய மகனே! நான் நோயுற்றிருந்தேன். நீ வந்து விசாரிக்கவுமில்லை?" என்று. அப்பொழுது அந்த அடியான், "யாஅல்லாஹ்! நான் எப்படி வந்து உன்னை விசாரிப்பது?நீயோ அண்டசராசரங்கள் அனைத்திற்கும் அதிபதியாயிற்றே!" என்று கூறுவான். அப்பொழுது அல்லாஹ், "இன்ன அடியான் நோயுற்றிருந்தானே! உனக்கு அது தெரியாதா? நீ ஏன் அவனைப் பார்க்கச் செல்லவில்லை? நீ அவனைப் பார்க்கச் சென்றிருந்தால் நானும் அங்கிருப்பதை நீ கண்டிருப்பாய் என்பது உனக்குத் தெரியாதா?" என்று கேட்பான். பிறகு அல்லாஹ் இன்னொரு அடியானிடம், "ஓ.. ஆதமுடைய மகனே! நான் உன்னிடம் உணவு கேட்டேன். ஆனால், நீ தரவில்லை!" என்று கூறுவான். அதற்கு அந்த அடியான், "யாஅல்லாஹ்! நான் எப்படி உனக்கு உணவு தருவேன்? நீயோ அகிலம் அனைத்திற்கும் எஜமானாயிற்றே!" எனக் கூறுவான். அதற்கு அல்லாஹ், "இன்ன அடியான் உன்னிடம் உணவு கேட்டான். ஆனால், நீ கொடுக்கவில்லை. கொடுத்திருந்தால் என்னை அவனிடம் பார்த்திருப்பாய்! அதற்குரிய பலனையும் பெற்றிருப்பாய்" எனக் கூறுவான்.

(ஆதாரம்-முஸ்லிம் 538)

ஆகவே, நோயுற்றிருப்போரை நலம் விசாரிக்கவும், பசியினால் வாடி உணவு கேட்போருக்கு உணவு கொடுக்கவும் நாம் தவறவே கூடாது.

வை.எம்.தாஹிர்கரீம், கல்முனை-06.

## கவிதைப் போட்டி இல.456

பரிசுக்குரிய கவிதை

### இன்று...

காட்டுப் புலியே
நாட்டுக்குள் வந்து
நர்த்தனம் புரிகையில்-கிளியே
வீட்டுப் பூனை நான் -உன்
கூட்டுக்குள் வந்து
குசலம் விசாரிப்பதில் என்ன
தவறு?

பற்குணன் அம்பிகாபதி,
மன்னார்.

இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

### சுதந்திரம்


தன் சுதந்திரத்திற்காக
போராடும் மனிதன் இன்று
எம் இருவர் சுதந்திரத்தைப் பறித்து
சிறையில் அடைத்துவிட்டான்...!

ஜெ. ஆர்த்தி, நல்லூர்.

### விடுதலை எப்போது?

சிறையில் வாடும் கைதிகளை
விடுதலை செய்யவேண்டி
குரல் கொடுக்கின்றார்கள்!
கூண்டுக்குள் வாடும்
எங்கள் விடுதலைக்காக
எவர் குரல் கொடுப்பார்கள்?

கு. திருமால், மட்டக்களப்பு.



### குஷி

சமாதானக் கதவு
திறக்கப்பட்டதும்
கூண்டுக் கிளிக்கும்
குட்டிப் பூனைக்கும்
குஷியோ...!

மஸீனா நளீர்,
மூதூர்-06.

### ஒப்பந்தம்

நாட்டில் புலியும் சிங்கமும்
ஒப்பந்தம் எழுத
கூட்டில் பூனையும் கிளியும்
ஒப்பந்தம் எழுதுகின்றனவோ?

ஐ. நதர்சன், கம்பளை.

### மனித குலத்திற்கு முன்மாதிரியா?

மாறுபட்டு நின்ற மனித குலம்
ஒரு கூட்டில் இணைந்தமை போல்
வேறுபட்ட பிராணிகளே வேற்றுமையின்றி
ஒரு கூட்டில் இன்பமுடன்...

கி. உதயகுமார், வவுனியா.

### சமாதான ஒப்பந்தம்

குருவியே என்னைக்
கண்டு பயப்படாமல்
இருக்க உனக்கு
இந்தத் துணிவைத் தந்தது
சமாதான ஒப்பந்தமோ
எனக் கேட்கிறதோ
இந்தப் பூனை!

எஸ். பி. கணேஷ், தாண்டியடி.

### சிந்தனை

ஒற்றுமையாகி விட்டன- ஆனால்
உடன்படிக்கை செய்யவில்லை!
பகையினை மறந்துவிட்டன- ஆனால்
பாசாங்கு செய்யவில்லை!
பாழ்பட்ட மனிதரைப் பார்த்து- இவை
சிந்தனை கொள்கின்றன!

பி. சுதேஸ்,
மண்டூர்-01.

### ஓர் கை சேர்வோம்

புலியும் அரசும்
யுத்தம் நிறுத்தி
மகிழும் வகையில்
சாதனை நிகழ்த்தி
சமாதானப் பூ மலர
கரங்கள் இணைகையில்
கிளியும் பூனையுமான
நாம் மட்டும் எம்மாத்திரம்?
வீண் பகை விடுவோம்
ஓர் கை சேர்வோம்...!


ராஸிட் வாஹிட் குத்தூஸ்,பதுளை.

### ச(ா)வுக்கடி

பூனை கிளியுடன் பேட்டி
சர்க்கஸ் நாயகன் சவுக்கடியே
சமாதான முன்னெடுப்பும் பேச்சும்
சர்வதேச அழுத்தமும்
நெருக்கமுமே!

காஞ்சனா சத்தியமூர்த்தி,
புன்னாலைக்கட்டுவன்.

## கவிதைப் போட்டி இல.459



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 18.05.2002

கவிதைப் போட்டி இல.459
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### கேவலம்...

அனுசரணையின்றியே
கிளியும் பூனையும்
பகை மறந்து உறவாடும்போது
மனிதன் மனிதனோடு
உறவாட மட்டும்
நோர்வே வரவேண்டியுள்ளதோ?

அ. சந்தியாகோ, கண்டி.

### விந்தைமிகு சம்பவங்கள்

பாம்பின் நிழலில்
தேரை துயில் கொண்டால்...
பருந்தின் நிழலில்
கோழிக்குஞ்சு இளைப்பாறினால்...
வேங்கையும் வெள்ளாடும்
ஒரே நீரோடையில்
எதிரெதிரில் நீரருந்தினால்...
சிங்கமும் சிறுத்தையும்
சினேகம் கொண்டால்...
அஞ்சுகமும் பூனையாரும்- ஏன்
கொஞ்சிக் குலாவ முடியாது?

க. கமால்தீன், ஏறாவூர்.

### பேச்சுவார்த்தை

சிங்கமும் புலியும் தாய்லாந்தில்
பேச உள்ளதாம்
நாமேன் அயல் நாடு
செல்ல வேண்டும்?
நம் பிரச்சனையை
நம் நாட்டிலே
பேசித் தீர்ப்போம்!

தர்மலிங்கம் சந்திரமதி,
தம்பலகமம்.

## உங்கள் பக்கம்

### பாராட்டுக்குரியவரா இளஞ்செழியன்?

கொழும்புக் கம்பன் கழகம், நீதிபதி இளஞ்செழியனின் சேவையைப் பாராட்டி அவரைக் கௌரவித்திருந்தது. கடந்தவார தினமுரசிலும் அவர் பாராட்டப்பட்டிருந்தார்.

இவ்விரண்டு பாராட்டுக்களிலும் தவறு ஏற்பட்டிருப்பதாக நான் கருதுகின்றேன்.

கம்பன் கழகம் என்பது இலக்கியம் சம்பந்தமான அமைப்பு. அது இலக்கியத்துறையுடன் எந்தவகையிலும் சம்பந்தப்படாத ஒருவரை, சமூகசேவைக்கெனப் பாராட்டிக் கௌரவித்துள்ளது. இளஞ்செழியன் அப்படி என்ன சமூகசேவை செய்துவிட்டார்?

அவர் ஒரு நீதிபதி, தன் பணியைச் செய்கிறார். அரசாங்கத்துடன் சம்பந்தப்பட்ட விடயங்களில் மாத்திரம் மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதில் கூடுதல் ஆர்வம் காட்டும் அவர், வவுனியாவிலோ ஏனைய தமிழ்ப் பகுதிகளிலோ புலிகளின் அடாவடித்தனங்கள் எதனையும் கண்டுகொள்வதில்லை.

அரசாங்கத்திற்கு எதிராகத் தீர்ப்பு வழங்குகிறார் என்ற காரணத்திற்காக இளஞ்செழியன், கொழும்புக் கம்பன் கழகத்தினால் கௌரவிக்கப்பட்டிருப்பது, நீதித்துறைக்கு எப்படிப்போனாலும், கம்பனுக்குச் செய்த துரோகம் என்பதை ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

புலிகளின் சார்பில் நடக்கும் தவறுகளைக் கண்டிக்கும் நேர்மை நீதிபதி இளஞ்செழியனிடம் இருக்கும் என நான் கருதவில்லை. புலிகளின் நிதி வசூலிப்பைப்பற்றிப் பொலீஸார் அவரிடம் முறையிட்டபோது தலையில் கைவைத்தபடி "அவங்களை விடுங்கோ" என்று தட்டிக்கழித்திருக்கிறார். இப்படி நிலைமை இருக்க, அவர் தமிழ் சமூகத்திற்கு அருந்தொண்டாற்றி வருவதெனக் கூறப்படுவது எந்த வகையில் நியாயமாகும்? தொழில் ரீதியாகத் தன் கடமையைச் செய்தவருக்கு இந்தளவு பாராட்டுக்கள் அவசியந்தானா? அனைவருக்கும் சரிசமமாக நீதி வழங்கியிருந்தால் கூட கம்பன் கழகம் இந்தப் பாராட்டை வழங்கியதை நியாயப்படுத்த முடியாது.

எதுவுமில்லாத ஒருவருக்குக் கம்பனின் பெயரில் வழங்கப்பட்ட பாராட்டை என்னவென்று சொல்வது?

இளஞ்செழியனுக்கு மட்டும் பாராட்டென்றால் ஏனைய நீதிபதிகள் எல்லாம் சரியாக நீதி வழங்கவில்லை என்று அர்த்தமா?

மறுபுறம், தினமுரசு அவருக்கு வழங்கிய கௌரவம். கம்பன் கழகத்தின் அறியாமையை (அல்லது அறியாமை போன்ற அவர்களது நடிப்பை) யாவது புரிந்துகொள்ள முடியும். தினமுரசுக்குப் புத்தி எங்கே போனது? தினமுரசும் கும்பலோடு சேர்ந்து கோவிந்தா போடுகின்றதா?

(இக்கடிதத்தை நிராகரிப்பீர்களா? பிரசுரிப்பீர்களா? என்ற சந்தேகத்துடனேயே எழுதுகின்றேன்.)

சி. நாகேந்திரன், வவுனியா.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த. பெ. இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):-074-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@dialogsl.net
edmurasu@dialogsl.net

## வாசக[ர்] சாலை

என் அன்பிற்கினிய முரசு
ஆசிரியருக்கு வணக்கம்!

முரசு சிறிய மாணவர்கள் முதற்கொண்டு வயோதிபர்கள் வரை அனைவரையும் மகிழ்ச்சிப்படுத்தும்படி பல செய்திகளைத் தொடர்ந்து தருவதில் எமக்கு மட்டுமல்லாது அனைவருக்குமே மகிழ்ச்சிதான். ஆனால், முரசில் வெளியான "வாரம் ஒரு வார்த்தை" எனும் சிறப்புத் தத்துவப் பகுதியை மீண்டும் தொடர்ந்தால் இன்னும் மகிழ்வோம். நன்றி.

வி. ராமன்தேவர், மடுல்கல.

பாசமுரசே!

வாரந்தோறும் நீ சுமந்துகொண்டு வரும் சுவையான செய்திகள் "தேவ அமிர்தத்தை மிஞ்சிய" தேன்துளிகள். பார்ப்பவரைப் பாசம் வைத்து வாசிக்கச் செய்து, பறக்கச் செய்கிறது. முரசே நீ சிந்தும் ஒவ்வொரு துளியும் புதுமையான புரட்சியில் எழுதப்பட்டவைகள். நீ எனக்குப் பாச முரசு! உன் பணி கடலை விடப் பெரியது. வாழ்க நீ நீடூழி...

அ. மருத நாபா, மருதமுனை-01.

இனிய முரசே!

நீ சுமந்துவரும் அனைத்து விடயங்களும் அருமை என எல்லோரும் கூறுகின்ற வாய்ப்பாட்டை நானும் கூறுவதற்கு விரும்பவில்லை. ஆனாலும், உன் பக்கங்களைப் புரட்டிப் பார்த்து முடிந்ததும் அப்படித்தான் சொல்ல வேண்டும் போலிருக்கின்றது. சூரியன் சுடும் என்றும், சந்திரன் குளிரென்றும் தொன்றுதொட்டே சொல்லிவருகிறார்கள். அது நிஜம் தானே! அதேபோல், முரசை அருமை என்று சொன்னாலும் அது நிஜமானதே!

காலத்தை வென்று நிற்கும் முரசே, விரைவில் ஒரு தசாப்தத்தை நிறைவு செய்யப்போவதில் பெரும் மகிழ்ச்சி கொள்கின்றேன். நீ நடந்து வந்த பாதையில் எத்தனையோ வலிகளையும் இடையூறுகளையும் சந்தித்து இன்னும் நிமிர்ந்து நிற்கும் உன் தன்னம்பிக்கைக்கு முன் "நில் கவனி முன்னேறு" வில் தருகின்ற தன்னம்பிக்கைத் தொடர்கள் கூடக் கொஞ்சமும் பின்வாங்கவில்லையே! இலக்கை அடையும்வரை சளைக்காமல் முன்னேற வாழத்துகின்றேன்.

எஸ். ரஜீவ், வவுனியா.

அன்பின் முரசே!



என் இதயக் கதவுகளைத் திறந்து உன் பக்கம் எனை ஈர்த்தெடுத்து உன் பக்கங்கள் ஒவ்வொன்றையும் நிமிடத்திற்கு நிமிடம், மணித்தியாலத்திற்கு மணித்தியாலம் பார்க்க வைத்து எங்கெங்கோ முடங்கிக் கிடக்கும் செய்திகளைத் தெவிட்டாத தேன்மொழியில் விருந்தாக்கிப் படைத்து எம்மை அறிய வைத்த இதழே! தினமுரசே! உன் சேவை இதுபோல் என்றும் ஓயாது ஜெயம் பெற வாழ்த்தி என் இதயங் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எம். ரீ. எம். யூனூஸ், காத்தான்குடி-01.

என் விழி கவரும் வண்ணமுரசே!

மொழியில்லை என்னிடம் நின் அற்புதங்களை அப்படியே எடுத்துவிட. "எல்லா விஷயங்களும் எங்களுக்கு விஷயங்கள் அல்ல. முரசு எம் கரங்களில் தவழும் வியாழனைத் தவிர" என்று வள்ளுவர் பாணியில் குறள் அமைத்துவிடலாம் போலிருக்கிறது. அத்தனை கவர்ச்சி உன்னில். முரசே! பத்திரிகையில் எல்லா விதமான கருத்துக்களும் வெளிவரும்போதுதான் அதன் நடுநிலைமை பேணப்படும். வாசகர்களுக்கும் உண்மையான நிலைப்பாடு புரியும் என்பதை அனேகமான பத்திரிகைகள் மறந்துபோய் புயலில் அகப்பட்ட சருகுகளாய் ஏதோவெல்லாம் சரடு விட்டுக்கொண்டிருக்க, நீ மட்டும் எல்லாக் கோணங்களிலும் அலசி எழுதுவது வரவேற்கத்தக்கதே!

பாடசாலை செல்லும் சிறுவர் முதல் அந்திம காலத்தில் அப்பாடா வென்றிருக்கும் வயோதிபர் வரை கவரக்கூடிய விதத்தில் உன் இருபது பக்கங்களும் வெவ்வேறு ரசனையுடன் அமைந்திருப்பது வெகுஜோர். அதுதான் உன் வெற்றியின் ரகசியம் போலும்...

எஸ். சிவகுமார், நுகேகொடை.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தாலோ, உங்கள் முகவரிடம் திருப்பிக் கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

# ஏ-9 வீதி போக்குவரத்தில் தொடர்ந்து இழுபறி!

**யாழ்.** கண்டி நெடுஞ்சாலையான ஏ-9 பாதையில் பொது மக்கள் போக்குவரத்து சீராவதில் தொடர்ந்து இழுபறி நிலை காணப்பட்டு வருகிறது.

இதுவரையில் தனியார் வாகனங்கள் சில மாத்திரமே தினசரி போக்குவரத்துக்காக அனுமதிக்கப்படுகின்றன. அதுவும் பாதையின் இரு முனைகளிலும் தமது கட்டுப்பாட்டுகளை வைத்திருக்கும் புலிகளும் இராணுவத்தினரும் வீதி வழியாக பொதுமக்களை போக்குவரத்துக்கு அனுமதிப்பதில் பலத்த கெடுபிடிகளை மேற்கொண்டு வருவதாக புகார் தெரிவிக்கப்படுகின்றது.

முகமாலை சோதனைச் சாவடி மாலை 5 மணியுடன் மூடப்படுவதால் அதன் பின்னர் அந்த இடத்தை வந்தடையும் பொதுமக்கள் இரவு தங்குவதற்கும் உணவுக்கும் பலத்த சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரியவருகிறது.

இது இவ்வாறிருக்க தனியார் பஸ் போக்குவரத்தை அனுமதிப்பது குறித்து இறுதி முடிவை 8ம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் தெரியப்படுத்துவதாக புலிகள் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தினரிடம் கூறியிருந்தனர். ஆனால் புதன்கிழமை வரை அவ்வாறான எந்த அறிவித்தலும் கிடைக்கவில்லை என சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

ஒப்பந்தத்தின்படி மக்கள் மயப்படுத்தப்பட்ட பஸ் போக்குவரத்துக்கு புலிகள் அனுமதித்ததன் பின்னர், நோர்வே கண்காணிப்பாளர்கள் ஊடாக புலிகளின் அனுமதியைப் பெற்று தனியார் போக்குவரத்திற்கு அரசாங்கமே முறையான அனுமதியை வழங்க வேண்டும்.

இந்த விடயம் தொடர்ந்து இழுபறியில் இருந்து வருவதால் சாதாரண பொதுமக்கள் போக்குவரத்து நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றனர்.

தரைப்பாதையூடாக யாழ். செல்ல புலிகளும் படையினரும் விதித்திருக்கும் நிபந்தனைகளை நிறைவு செய்து அங்கு தற்போதைய நிலையில் அதிகமாக சென்று வருவது தென்னிலங்கையின் வர்த்தகர்களும் சுற்றுலாப் பயணிகளும்தான்.

ஒரு தசாப்தத்திற்கும் மேற்பட்ட காலத்திற்குப் பின்னர் திறக்கப்பட்ட ஏ-9 வீதியில் சதாரண பொதுமக்களின் போக்குவரத்திற்கு விதிக்கப்பட்டிருக்கும் தடைகள் மக்களால் விசனத்துடன் நோக்கப்படுகின்றது.

## அதிசயம் ஆனால் உண்மை!

**மு**ன்னறிவிப்பு எதுவுமின்றி பம்பலப்பிட்டியில் உள்ள உணவகம் ஒன்றுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் இந்தியப் பிரதமர் ஐ.கே. குஜ்ரால் உள்ளிட்ட இராஜ தந்திரிகள் பலர் விஜயம் செய்ததையடுத்து அங்கு உணவு அருந்திக்கொண்டிருந்தவர்கள் மத்தியில் பரபரப்பு ஏற்பட்டது.

திங்களன்று பிரதமர் விக்கிரசிங்க தனது மெய்ப்பாதுகாவலர்கள் மற்றும் சிலருடனும் மனித உரிமைகளுக்கான தெற்காசிய குழுவொன்றுடன் இலங்கை வந்திருக்கும் குஜ்ரால் மற்றும் அவரது மனைவி உட்பட சிலருக்கு இரவு விருந்தளிக்க பம்பலப்பிட்டி உணவகம் ஒன்றுக்கு முன்னறிவித்தல் இன்றிச் சென்றுள்ளார்.

நாட்டின் பிரதமர் சாதாரண பொது மகன் போன்று இவ்வாறு பொது உணவகங்களில் வந்து உணவருந்தும் சமூக அமைப்பொன்று இந்த நாட்டில் உருவாக வேண்டும் என்று அங்கு வந்திருந்த பலரும் பிரதமருக்கு வாழ்த்து தெரிவித்தனர். ■

## ஜனாதிபதியின் மேதின உரை
## ஒளி நாடா இராஜதந்திரிகளுக்கு!

**க**டந்த வாரம் நுவரெலியாவில் நடைபெற்ற ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியதாக தெரிவிக்கப்படும் சர்ச்சைக்குரிய கருத்துக்கள் அடங்கிய ஒளி நாடாக்களை வெளிநாட்டு தூதுவர்களுக்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நுவரெலியாவில் நடைபெற்ற கூட்டத்துக்கு மேலதிகமாக அப்புத்தளை நகரில் இடம்பெற்ற மேதினக் கூட்டத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணியில் இருந்து கட்சி மாறுபவர்களை தோல் உரிக்க வேண்டும் என்று திருமதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்ததாகக் கூறப்படுகின்றது.

இந்தக் கருத்துக்கு ஐ.தே.க. உடனடியாகவே கண்டனம் தெரிவித்திருந்தது. கண்டனத்துடன் நிறுத்திவிடாமல் அவரது உரை அடங்கிய ஒளி நாடாவை வெளிநாட்டு தூதுவர்களுக்கு வழங்கவும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கென அடுத்த சில தினங்களில் அமைச்சர்கள் சிலர் கொழும்பில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளைச் சந்திக்கவுள்ளனர். ■

## ட்ரான்ஸ் ஏசியா, ஒபரோய் ஹோட்டல்கள் விற்பனைக்கு!

**அ**ரசுக்கு அதிகளவு பங்குள்ள கொழும்பின் இரண்டு பிரபல ஹோட்டல்களான ட்ரான்ஸ் ஏஷியா மற்றும் ஒபரோய் ஹோட்டல்களை முற்று முழுதாக தனியாருக்கு விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்காக ஈ.ஏ.பி. எதிரிசிங்க நிறுவனம் உட்பட பல தனியார் நிறுவனங்கள் தமது டென்டர்களை சமர்ப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதவேளை கடந்த அரசாங்கத்தின் காலத்தில் எமிரேட்ஸ் நிறுவனத்திற்கு விற்கப்பட்ட எயார் லங்கா நிறுவன கொடுக்கல் வாங்கல்களில் மோசடிகள் இடம்பெற்றிருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் அந்த ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய முடிவு செய்துள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. ■

## இலங்கையர் இருவர் இந்தியக் கரையில்
## வெடிபொருட்களுடன் கைது!

**இ**லங்கைக்கு வெடிமருந்துகளைக் கடத்த முயன்ற இரு தமிழ் இளைஞர்களைத் தமிழ்நாட்டுப் பொலீஸார் கைது செய்தனர்.

கடந்த திங்கட்கிழமை இராமேஸ்வரத்தில் வைத்துக் கைது செய்யப்பட்ட இவர்கள் திருச்சிராப்பள்ளியிலுள்ள இலங்கை அகதிமுகாமொன்றில் வசித்து வந்துள்ளனர். இவர்களிடமிருந்து 270 ஜெலடீன் குச்சிகள், 20 மீற்றர் நீளமான வயர்கள், 70 வெடிக்க வைக்கும் கருவிகள் என்பன கைப்பற்றப்பட்டன. இந்த வெடிபொருட்களுடன் கடல் வழியாக இலங்கை செல்லவிருந்த வேளையில் இவர்களிருவரும் பொலீஸாரினால் இராமேஸ்வரத்தில் கைதானார்கள். ■

## புலிகளின் அவதானிப்புக் குழுக்கள்!

**த**மது நடவடிக்கைகளை அரச நிர்வாகத்தின் சகல மட்டங்களிலும் அமுலாக்குவதற்காகப் புலிகள் இப்போது வடக்கு கிழக்கிலுள்ள அரச, அரச சார்பற்ற அலுவலகங்களில் கண்காணிப்புக் குழுக்களை நியமித்து வருகின்றனர்.

மட்டக்களப்பில் ஏற்கனவே புலிகளினால் நியமிக்கப்பட்ட கண்காணிப்புக் குழுக்கள் செயற்படத் தொடங்கியிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரச அலுவலர்கள், அரச சார்பற்ற நிறுவனப் பணியாளர்கள், தொழிலாளர்கள் எனச் சகல தரப்பாரையும் தமது செயற்பாடுகளின் ஆதரவாளர்களாக வைத்துக்கொள்வதே புலிகள் அமைக்கும் கண்காணிப்புக் குழுக்களின் நோக்கமாகும் எனக் கூறப்படுகிறது. ■

## ஆயுதபாணிகளால் உடமைகள் அபகரிப்பு!

**கி**ழக்கில் இனந்தெரியாத ஆயுதக் குழுக்களால் முஸ்லிம்களின் உடமைகள் அபகரிக்கப்படுவது மீண்டும் தலைதூக்கியிருப்பதாகத் தெரியவருகிறது.

கடந்த ஏப்ரல் 17ம் திகதி வாகரை-மதுரங்கேணிக் குளத்தில் வைத்து இனந்தெரியாத ஆயுதபாணிகளால் மூன்று உழவு இயந்திரங்கள் இழுவைப் பெட்டிகளுடன் கடத்திச் செல்லப்பட்டுள்ளன. அவை இன்னமும் விடுவிக்கப்படவில்லை என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனிடையே, ஏப்ரல் 20ம் திகதி கடத்தப்பட்ட 10 மாட்டுவண்டிகள் மொத்தம் 50 ஆயிரம் ரூபா கப்பமாகச் செலுத்தப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளன.

கல்குடாக் கடலில் மீன்கள், மீன்பிடி உபகரணங்கள், படகில் கொண்டு செல்லும் எரிபொருட்கள் என்பனவும் அடிக்கடி அபகரிக்கப்படுவதாக மீனவர்கள் முறையிட்டுள்ளனர். ■

## "முஸ்லிம் எம்.பி.க்களின் ஒன்றியம் செயலற்றுப்போனது"
### அமைப்பின் செயலாளர் மயோன் முஸ்தபா

**பெ**ரும் சிரமத்தின் மத்தியில் ஒன்று சேர்க்கப்பட்ட முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஏக பிரதிநிதி என்ற கொள்கையினால் செயலற்றுப் போகும் நிலைக்கு வந்திருப்பதாக ஒன்றியத்தின் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான மயோன் முஸ்தபா கவலை தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை முஸ்லிம்களின் ஒட்டுமொத்தக் குரலாகவும், ஏக பிரதிநிதியாகவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மாத்திரமே விளங்குகின்றது என்று அவர்கள் கூறிக்கொள்வதே இந் நிலைமைக்குக் காரணமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இனப்பிரச்சனைக்கான சமாதானத் தீர்வு முயற்சிகளில் முஸ்லிம்கள் சார்பாக எந்த விடயமும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படவில்லை என்பதாலேயே முஸ்லிம்கள்பற்றிய பிரச்சனைகளுக்கு அழுத்தம் கொடுப்பதற்காக முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியம் உருவாக்கப்பட்டது.

அதன் பின்னரே முஸ்லிம்களின் பிரச்சனைகள்பற்றிப் பேசுவதற்குப் புலிகள் அழைப்புவிடுத்தனர். ஆனால், புலிகளிடம் சென்று பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியத்துடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமைப் பீடம் கலந்தாலோசிக்கவில்லை. குறைந்த பட்சம் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்திலிருந்து ஒன்றிரண்டு எம்.பி.க்களையாவது புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்திய குழுவில் சேர்த்திருக்கலாம். ஆனால், புலிகளுடன் இவர்கள் நடாத்திய இரகசிய பேச்சுவார்த்தைபற்றி எமது ஒன்றியத்திற்கோ, நாட்டு முஸ்லிம்களுக்கோ முழுமையாக எதுவும் தெரியாது என்றும் மயோன் முஸ்தபா தெரிவித்துள்ளார். ■

## பி.எஸ்.டி. மீளமைப்பு?

**ஜ**னாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்கும் சட்டமூலத்தைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு முன்னர் ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவைச் செயலிழக்கச் செய்யும் காரியங்களில் அரச தரப்பு தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது.

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் தலைவர் உட்பட ஏராளமான பாதுகாப்பு உறுப்பினர்கள் பல்வேறு குற்றச்சாட்டுக்களின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற விரும்பத்தகாத சம்பவங்களுடன் பி.எஸ்.டி உறுப்பினர்களுக்குத் தொடர்புகளிருப்பதால், அந்த அமைப்பை மீளமைக்க வேண்டிய தேவை இருப்பதாக உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் உளவியல் பலத்தைச் சிதறடித்து, திருமதி.சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சித்து வருவதாகப் பொதுஜன ஐக்கிய முன்னணி குற்றஞ்சாட்டி வருவது குறிப்பிடத்தக்கது. ■

## இளைஞர் பரிதாப மரணம்!

**கி**ளிநொச்சி, பூநகரியைப் பிறப்பிடமாகக் கொண்ட யோகஞானம் மார்க்கண்டு என்ற இளைஞர் டென்மார்க், ராம் நகரில் உதைபந்தாட்டம் விளையாடிக் கொண்டிருக்கையில் மைதானத்தில் விழுந்து அகால மரணமானார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவரின் மரணம் குறித்த காரணங்கள் அடங்கிய வைத்திய அறிக்கை இதுவரை கிடைக்கவில்லை. இவர் கடந்த நான்கு வருடங்களாக டென்மார்க்கில் வசித்துவருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. ■

## அரிசி, இறைச்சி இலஞ்சம் பெற்ற
## உயர் பொலிஸ் அதிகாரி கைது!

**க**ந்தளாய், மொரவெவ பொலிஸ் நிலையத்துக்கு ஆயுதங்களை அவசரமாகப் பெற்றுக் கொடுக்க, மொரவெவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடமிருந்து அரிசி, இறைச்சி வகைகள் என்பவற்றை இலஞ்சமாகப் பெற்றார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பிரதி பொலிஸ்மா அதிபர் ஒருவர் இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவின் உத்தரவின் பேரில் கைது செய்யப்பட்டார்.

1997ம் ஆண்டு நடைபெற்ற இந்த இலஞ்சம் பெற்ற சம்பவம் மீதான விசாரணை கடந்த திங்களன்று நடைபெற்றபோது அங்கு வாக்குமூலம் அளிப்பதற்காக வந்திருந்த அவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

பயங்கரவாத தடுப்புப் பிரிவில் பணியாற்றிய நிஹால் கருணாரட்ண என்ற இந்த பொலிஸ் அதிகாரி பல்வேறு இலஞ்சக் குற்றச்சாட்டுகளுக்கும் உள்ளானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# முரசம்

## பேச்சுக்கள் தாமதிக்கக்கூடாது!

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

இடைக்கால நிருவாகம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் தாமதமாகலாம் என்று கடந்த வாரம் லண்டன் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

அரச தரப்பு புரிந்துணர்வு உடன்படிக்கையின் அனைத்து ஷரத்துக்களையும் பூரணமாக நிறைவேற்றி முடிக்காமையே இதற்குக் காரணம் எனவும் அந்தப் பத்திரிகைச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

திங்களன்று கொழும்பில் செய்தியாளர்களுக்கு விளக்கமளித்த அரசாங்கத்தின் பேச்சாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி ஜூன் மாதத்தில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படும் என்று கூறினார்.

தற்போதைய நிலைவரத்தில் பேராசிரியர் பீரிஸின் கருத்து ஆறுதல் அளிப்பதாக உள்ளது.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட நாட்களில் இருந்த உறுதிப்பாடும் சமாதான ஆர்வமும் சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் மங்கி வருகிறதா என்ற சந்தேகம் எழுவதற்கான சம்பவங்கள் நிகழத் தொடங்கியுள்ளன!

போர் நிறுத்த மீறல்களும், பரஸ்பர குற்றச்சாட்டுகளும், காட்டமான அறிக்கைகளுமாக நிலைமை சற்று கொந்தளிப்பை நோக்கி நகர்வதாக உணர முடிகிறது.

பாரதூரமான விளைவுகளைத் தவிர்ப்பதற்கு இருக்கும் ஒரே வழி பேச்சுவார்த்தைகளைக் கூடிய விரைவில் ஆரம்பிப்பதுதான்.

பேச்சுக்கான திகதி பின் தள்ளிச் செல்வதால் இருதரப்பினருக்கும் இடையில் விரும்பத் தகாத சம்பவங்கள் அதிகரிக்க மேலும் வாய்ப்பு ஏற்படலாம்.

எனவே கூடிய விரைவில் பேச்சுக்களை ஆரம்பிக்க சர்வதேச சமூகம் இருதரப்பினரையும் வலியுறுத்த வேண்டும். மறுபுறம் வடக்கிலும், கிழக்கிலும் கடந்த சில தினங்களாக இடம்பெற்று வரும் சம்பவங்கள் தென்னிலங்கை சிங்கள மக்கள் மத்தியில் சமாதானம் குறித்த ஐயங்களை அதிகரிக்கச் செய்துள்ளது.

இத்தகைய சம்பவங்களால் சமாதானத்துக்கு எதிரான சக்திகளின் கைகள் வலுப்பெறவும் வாய்ப்புண்டு.

ஆதலால் பேச்சுக்களைத் தாமதித்துக் காலத்தை இழுத்தடிப்பதன் மூலம் மீண்டும் யுத்தத்திற்கு எவராயினும் வழிசமைத்து விடக்கூடாது.

ஜே.வி.பி. போன்ற சில சக்திகள் இளைஞர்களைத் தூண்டிவிட்டு நாட்டை மீண்டும் தீக்கிரையாக்க முயல்வதாக அரசாங்கம் குற்றஞ் சாட்டுகின்றது. புலிகளுடன் ஒப்பந்தம் செய்திருப்பதும், நாட்டை ஆட்சிசெய்வதும் ஜே.வி.பி. அல்ல.

அதனால் சமாதானத்தை 'இவர்தான் குழப்பினார்' என்று யாரை நோக்கியும் விரல் நீட்டக் காத்திருக்காமல் பேச்சுக்களை உடன் ஆரம்பிப்பதே இன்றைய காலத்தின் தேவை.

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# வாகரைப் படகு வெடிப்பு

## பின்தள்ளிச் செல்லும் பேச்சுவார்த்தைகள்

நரன்

அமெரிக்கத் தூதுவர் ஆர்ஷ்லி வில்ஸ் புலிகளுக்கும் அரசாங்கத்துக்குமிடையிலான யுத்த நிறுத்தம் ஒப்பந்தமாகியபின் முதன் முதலில் விட்ட அறிக்கையில் புலிகள் ஆயுதங்களைக் கடத்துவதாகத் தமக்கு அறிக்கை கிடைத்திருப்பதாகவும் யுத்த நிறுத்த ஒப்பந்தப்படி அவர்கள் நடக்க வேண்டுமென்றும் எச்சரித்திருந்தார்.

அப்போது அதற்குப் பதிலளிக்கும் வகையில் இலங்கைப் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, புலிகள் அவ்வாறு ஆயுதங்களைக் கடத்துவதாகத் தமக்கு அறிக்கைகள் எதுவும் கிடைக்கவில்லையெனவும் புலிகள் யுத்த நிறுத்தத்தை மீறவில்லையெனவும் புலிகளுக்காகப் பரிந்துரைத்திருந்தார்.

ஆனால் இப்போதோ, வாகரையில் கடற்படைக் கப்பல்கள் இடைமறித்த இரு படகுகளில் ஒன்று வெடித்துச் சிதறிய சம்பவத்தையடுத்து, புலிகள் ஆயுதங்களைக் கடத்தி வந்துள்ளனரென்றும், வள்ளத்தைத் தாமே வெடிக்க வைத்துள்ளனரென்றும், யுத்த நிறுத்தத்தை மீறியுள்ளனரென்றும் குற்றம் சாட்டி, கடற்படையை இதுதொடர்பாக முழுமையான விசாரணை மேற்கொள்ளும்படி உத்தரவிட்டிருக்கிறார் அதே பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன.

நிலைமை தலைகீழாக மாறிவிட்டது என்பது இதனால் புலனாகிறது.

முன்னர் அமெரிக்கக் குற்றச்சாட்டுக்கு தாமே புலிகளைக் காக்கப் பரிந்துரை செய்தவர் இப்போது தாமே அதே குற்றச்சாட்டை முன்வைத்து கண்காணிப்புக் குழுவிடம் அதை நிருபிக்க பகீரத முயற்சியெடுக்கிறார்.

இதேவேளை புலிகளோ, விடயம் அவ்வாறில்லை, கடற்படையினர் தாக்கியதில் மீன்பிடிப் படகொன்றுதான் வெடித்தது, சுற்றிவர மீன்பிடித்துக்கொண்டிருந்த பல மீனவர்கள் காயமடைந்துள்ளனர், இது கடற்படையின் அப்பட்டமான யுத்த நிறுத்த மீறல் எனக் கடுமையாகச் சாடி யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

தாக்கப்பட்ட படகிலிருந்து தப்பி வந்தவரென முஸ்லிம் ஒருவரை வைத்திய சாலையிலும் அனுமதித்துள்ளனர்.

அவரின் வாக்குமூலப்படி தாம் மீன்பிடித்துக்கொண்டிருந்த படகை கடற்படையினர் தாக்க, படகின் உரிமையாளர் அதிலேயே இறந்துவிட தான் தப்பி வந்து கரை சேர்ந்ததாகக் கூறுகிறார்.

ஆனால் கடற்படையினர் புலிகள் ஆயுதங்களைக் கடத்தி வந்தார்களென்று அடித்துக் கூறி வருவதுடன் தாம் ஆயுத வெடி பொருட்கங்களைக் கொண்ட பெட்டியொன்றையும் வெடிவிபத்து நடந்த கடற் பரப்பிலிருந்து கைப்பற்றி கண்காணிப்புக் குழுவுக்கு காண்பித்துள்ளதாகக் கூறுகின்றனர்.

கண்காணிப்புக் குழுவினரோ, தம்மிடம் கடற்படையினர் அவ்வாறான வெடி பொருட்கங்கள் கொண்ட பெட்டியொன்றை கடலிலிருந்து மீட்டதாகக் காண்பித்தது உண்மையே, ஆனால் அது கடற்படையின் படகினுள்தான் காண்பிக்கப்பட்டது. அதுபோல் வெற்றுப் பெட்டியொன்றும் கடலில் மிதப்பதும் தமக்குக் காண்பிக்கப் பட்டது, எனினும் இவற்றால் மட்டும் இப் பெட்டிகள் வெடித்த படகுகளிலிருந்துதான் மிதந்தனவெனத் தம்மால் தற்போது உறுதி செய்ய முடியாது. மேற்கொண்டு விசாரணை அறிக்கைகள் வந்த பின்னர்தான் கருத்துக் கூற முடியும் எனத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை வன்னியில் புலிகளின் அரசியல் பேச்சாளர் தமிழ்ச் செல்வன் கண்காணிப்புக் குழுவிடம் தமது படகெதுவும் இத்தகைய சம்பவமெதிலும் சேதமடையவில்லையெனத் தெரிவித்திருந்தார்.

அரசாங்கம் இச் சம்பவத்தை பாரதூரமான யத்த நிறுத்த மீறலாக எடுத்துக்காட்ட மேற்கொள்ளும் பாரிய பிரயத்தனங்களையடுத்து புலிகளும், கடற்படை யுத்த நிறுத்தத்தை முறிக்கும் ஆத்திரமூட்டல்களில் ஈடுபடுவதாகவும், இச் சம்பவம் அரசாங்கத் தரப்பில் மேற்கொள்ளப்பட்ட ஒரு பெரிய யுத்த நிறுத்த மீறலென மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து பத்திரிகைச் செய்திகள் வெளியிட்டுள்ளனர்.

சம்பவம் நிகழ்ந்தபோது சிறியதொரு தலைப்புடன் வெளிவந்த இச் செய்தி அது நிகழ்ந்து சுமார் ஒருவார காலமாகிய பின்னர் புலிகளின் கண்டனத்துடன் தலைப்புச் செய்தியாகியுள்ள நிலைமையானது பிரச்சினை வலுத்துச் செல்வதன் எடுத்துக் காட்டாக உள்ளது.

யுத்த நிறுத்த ஒப்பந்தப்படி புலிகளின் படகுகளைக் கடலில் இடை மறிக்கும் உரிமை கடற்படையினருக்கு இல்லையெனவும் கடலில் கடற்படையினர் சோதனையிடுவதானால் கண்காணிப்பு உறுப்பினர் ஒருவர் முன்னிலையில்தான் சோதனையிடலாமென்றும் சில வாதங்கள் முன் வைக்கப்படுகின்றன.

எவ்வாறெனினும் இப்போது புதிதாக ஒரு விடயம் முனைப்புப் பெற்று வருவது தெளிவாகப் புலப்படுகிறது.

யுத்த நிறுத்தத்தைப் பேணுவதிலும் ஒருவர் மீது ஒருவர் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் செயற்பாடுகளில் ஈடுபடுவதிலும் பார்க்கிலும் யுத்த நிறுத்த மீறல்கள் பற்றி மறுதரப்பின் மீதான குற்றச்சாட்டுகளை யார் கூடுதலாகப் பதிவு செய்வது என்ற ஒரு முனைப்பு வலுப்பெற்று வருகிறது.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுக்கள் செயற்படத் தொடங்கியதன் பின்னர்தான் இந்த வகையான ஒரு போக்கு தோற்றம் பெற்றுள்ளது.

அரசாங்கத்தைப் பொறுத்தவரை தாம் சமாதானத்துக்காகவே அர்ப்பணத்துடன் செயற்படுவதாகக் காட்டிக் கொண்டு தமது தரப்பிலிருந்து யுத்த நிறுத்தம் மீறப்பட மாட்டாது என்றவாறு சர்வ தேச நாடுகளை நம்ப வைத்துக்கொரண்டு, அதேவேளை புலிகள் உணராதவாறே புலிகள் பற்றி அவ நம்பிக்கையையும் எச்சரிக்கை உணர்வையும் சாதுரியமாக சர்வதேச நாடுகளிடம் பரப்பி வருகிறது.

புலிகள்தான் யுத்த நிறுத்தத்தை ஒவ்வொன்றாக மீறி வந்துகொண்டிருக்கிறார்கள் என்ற பதிவுகளை புலிகளை அதிகம் உசுப்பி விடாதவாறே அது மேற்கொண்டு வந்துள்ளது.

இதனால், முன்னர் அமெரிக்கத் தூதுவர் புலிகள் யுத்த நிறுத்தத்தை மீறுவதாகக் கண்டித்தபோது பாதுகாப்பு அமைச்சர் அதை மறுத்து புலிகளுக்காகப் பரிந்துரைத்ததானது தாம் புலிகள் தொடர்பான யுத்த நிறுத்த மீறல்களைப் பதிவு செய்யும்போது அவற்றை ஏற்க வைக்க வகைசெய்யும் ஒரு தந்திரமாக இருக்கலாமோவெனவும் தற்போது எண்ண வைக்கிறது.

யாழ்ப்பாணத்துக்கான ஏ9 வீதியைத் திறந்த போது புலிகள் அதில் யுத்த நிறுத்த ஒப்பந்தப்படி நடந்து கொள்ளவில்லையென அரசாங்கம் தனது யுத்த நிறுத்த மீறல் முறைப்பாட்டை மேற்கொண்டது.

புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் தமது பஸ் சேவையே நடத்தப்படுமெனவும் அரசாங்க சேவைகளை அனுமதிக்க முடியாதெனவும் மறுத்ததை அரசாங்கம் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்திருந்தது.

அத்தோடு இராணுவத்தினர் ஏ9 வீதி வழியாக பயணஞ்செயயும்போதும் புலிகளின் சோதனைகளுக்கு உட்படுத்தப் படவேண்டுமென்ற நிலைமையையிட்டும் அரசாங்கம் முறைப்பாடு செய்திருந்தது.

இவற்றையிட்டு புலிகள் அதிகம் அலட்டிக் கொள்ளாதிருக்கையில், அன்ரன் பாலசிங்கம் லண்டனுக்குத் திரும்பிய விமானம் திருகோணமலைக்கு மேலாகச் சென்றதென்பதை பாரதூரமான யுத்த நிறுத்த மீறலாக அரசாங்கம் மறுபடி ஒரு பெரிய முறைப்பாட்டை முன்வைத்தது.

அவ் விமானம் படையினரால் தாக்குதலுக்கு உள்ளாகியிருக்குமெனவும் அரசாங்கத்தின் கருணையாலும் துரித செயற்பாட்டாலும் தாக்கு தலைத் தவிர்க்கும் உத்தரவு வழங்கப்பட்டதாகவும் அது இச் சம்பவம் குறித்து ஆரவாரம் காட்டிக் கொண்டது.

இதேவேளை புலிகள் ஒப்பந்தப்படி அரசியல் வேலைகளுக்காக யாழ்ப்பாணத் தீவுப் பகுதிகளுக்குச் செல்வதற்குப் படையினர் அனுமதி மறுத்துள்ளார்கள்.

அப் பகுதி தீவிர கண்காணிப்பு வலயமென்ற அடிப்படையில் அவ்வனுமதி மறுப்பை மேற்கொண்டுள்ளார்கள்.

ஆனால் இக்காரணத்தை புலிகள் ஏற்கத் தயாராக இல்லை.


இவையாவும் ஒருபுறம் இருக்க, பேச்சுவார்த்தைக்கான புலிகளின் பிரதான முன் நிபந்தனை தம்மீதான தடையை அராசாங்கம் நீக்க வேண்டுமென்பதாகும்.

புலிகள் மீதான தடையை நீக்க அரசாங்கம் இதுவரை எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

அதுவும்கூட வெளிநாடுகளில் புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடைகளைப் பாதிக்காத வகையில், தடையை முற்றாக நீக்காமல், இடைநிறுத்தி வைக்கும் ஓர் ஏற்பாட்டையிட்டே அராசாங்கம் சிந்தித்து வருகிறது.

அவ்வாறான வகையில்தான் தடை நீக்கம் அமையுமானால் அது சந்தேக நபர் ஒருவரைப் பிணையில் செல்ல அனுமதித்ததுக்கு ஒப்பான நிலையிலேயே புலிகளின் செயற்பாடுகளை அனுமதிப்பதாக இருக்கும்.

இதற்கு புலிகள் உடன்படுவார்களெனவும் எதிர்பார்க்க முடியாது.



ஆனால், பாலசிங்கமோ, அப்படிப் படையினர் தாக்குதல் நடத்த விழைந்ததுதான் தவறு, அவர்களுக்குச் சந்தேகம் எழுந்திருந்தால் விமான ஓட்டியுடனேயே தொடர்பு கொண்டு அது என்ன விமானமென இலகுவாக அறிந்திருக்க முடியும் எனினும் இதைத் தான் பெரிது படுத்தப் போவதில்லையெனக் கூறியிருந்தார்.

எவ்வாறாயினும் அராசங்கம் அதனை ஒரு யுத்த நிறுத்த மீறலாக வெளிப்படுத்துவதிலேயே முனைப்பாக இருந்தது.

இதையடுத்து அண்மையில் திருகோணமலையில் புலிகளின் வள்ளமொன்றை இடைமறித்த கடற்படை அதில் ஆயுதங்கள் இருந்ததாகக் கூறி அதிலிருந்தவர்களைக் கைது செய்து நீதிபதி முன்னிலையில் விடுவித்தது.

இதுவும்கூட ஒரு யுத்த நிறுத்த மீறலாக அரசாங்கம் பதிவு செய்து கொண்டது.

இதேவேளை புலிகள் சிவிலியன்களைக் கடத்துவது கப்பம் வரி வாங்குவது போன்ற மனித உரிமை மீறல் நடவடிக்கைகளை வகைதொகையாக மேற்கொண்டு வருவதாக பத்திரிகைள் குற்றச் சாட்டுக்களைச் சுமத்தி வருகின்றன.

இவற்றையடுத்துத்தான் தற்போதைய வாகரைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இத்தகைய சூழ்நிலையில் ஏற்கெனவே உத்தேசிக்கப்பட்டிருந்தபடி தாய்லாந்துப் பேச்சுவார்த்தைகளை ஜூன் நடுப் பகுதியில் ஆரம்பிக்க முடியாததாகவே உள்ளது.

ஒருபுறம் இத்தகைய யுத்த நிறுத்த மீறல்கள் பற்றி அரசாங்கம் மேற்கொண்டு வரும் தொடர்ச்சியான முறைப்பாடுகளால் புலிகள் அடைந்துள்ள அதிருப்தி.

மறுபுறம் பேச்சுவார்த்தைக்கு முன்பாக அரசாங்கம் ஒப்பந்தத்தின்படி குறித்த தவணைகளுக்குள் நிறைவேற்ற வேண்டியவற்றை இன்னும் நிறைவேற்றாதுள்ளமை.

ஒப்பந்தப்படி அரசாங்கப் படையினர் பாடசாலைகள், கோயில்கள், பொது இடங்களிலிருந்து வாபஸ் பெற்று அவற்றை அவ்வவுடமையாளர்களிடம் கையளிக்க வேண்டும்.

ஆனால் அத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுமில்லை, அவை வெகு விரைவில் நிறைவேறும் அறிகுறிகளும் காணக் கிடைக்கவில்லை.

இவை இவ்வாறிருக்க, புலிகள் இப் பேச்சுவார்த்தையில் ஒரு இடைக்கால நிர்வாகத்தை எதிர்பார்த்திருக்கும் நிலையில், நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கெசன் அவ்வெதிர்ப்பார்ப்பையிட்டு அதிருப்தியான கருத்தொன்றை வெளியிட்டிருக்கிறார். அதாவது பேச்சுவார்த்தையில் இடைக்காலத் தீர்வுகளில் மட்டுமன்றி நிரந்தரத் தீர்வைக் காணுவதற்காக இருதரப்பும் அக்கறை செலுத்த வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

இத்தகைய நிலைமைகள் இன்னும் பரிபூரண சுமுக சூழ்நிலை எட்டப்படவில்லை என்பதையே சுட்டிக் காட்டுகின்றன.

இப்போது வாகரை படகு வெடிப்புச் சம்பவம் பூதாகரமான ஒரு பிரச்சினையாக உருவெடுத்து இரு தரப்புக்களையும் கௌரவப் பிரச்சினையில் மோத வைத்துள்ளது.

இதில் இக்கட்டான நிலைமைக்கு உள்ளாகியுள்ளவர்கள் கண்காணிப்புக் குழுவினர்தான்.

யார் யுத்த நிறுத்த மீறலைச் செய்தார்களென அவர்களே முடிவு சொல்ல வேண்டிய நிலையிலிருக்கிறார்கள்.

இதில் உள்ள மற்றொரு சிக்கல் யாதெனில் புலிகள்தான் மீறினார்கள் என அவர்கள் கூறினால் பிரச்சினை இன்னொரு கட்டத்துக்குப் படரும்.

அப்படியானால் புலிகள் ஆயுதங்களைக் கடத்துகிறார்களா, அவர்கள் சமாதானத்தில் நாட்டம் கொண்டவர்களாகக் காட்டிக்கொண்டு ஏன், யுத்தத்துக்குத் தயாரிப்புச் செய்கிறார்கள் என்று சிங்கள மற்றும் எதிர்க்கட்சித் தரப்பு பத்திரிகைகள் எழுதத் தொடங்கும்.

இதனால் நம்பிக்கைகளிலிருந்து பேசுகின்ற நிலைமைகள் மாறி நம்பிக்கையீனங்களிலிருந்து பேசுகின்ற நிலைமைகள் தோன்றிவிடும்.

இதேவேளை இத்தகைய தீர்ப்பினைக் குறித்து புலிகளுக்கு நோர்வேயின் மத்தியஸ்தத்திலும் கசப்புகள் முளைவிட ஆரம்பித்துவிடும்.

ஆதலால் புலிகளை மனங்கோணச் செய்யும் வகையில் இவ் விடயத்தில் கண்காணிப்பாளர்கள் தீர்ப்புக் கூற மாட்டார்களென்றே எதிர்பார்க்கலாம்.

எவ்வாறிருந்தாலும் பேச்சுவார்த்தைகள் ஜூன் நடுப்பகுதியில் நடைபெறும் என்பது கேள்விக் குறிதான்.

# திருமலையில் அமெரிக்கப் படை முகாம்?

ரஷ்ய-அமெரிக்க பனிப்போர் நிலவிய 1981ம் ஆண்டு காலப்பகுதியில் அமெரிக்கக் கூட்டுப்படைத் தலைமையகம் (The Organization of the Joint Chief of Staff) ஐக்கிய அமெரிக்காவின் போர் வியூகம் (United State Militery Posture) என்ற பெயரில் அறிக்கை ஒன்றை வெளியிட்டது. 1982ம் ஆண்டுக்கான அமெரிக்க அரசின் உலகளாவிய போர்த் திட்டங்கள் குறித்து அந்த அறிக்கையில் விபரிக்கப்பட்டிருந்தது. அறிக்கையின் 49ம் பக்கத்தில் 1980ம் ஆண்டில் இந்தியக் கடற்பரப்பில் இருந்த அமெரிக்க, ரஷ்ய கடற்படைகளுக்கு பயன்படுத்த வசதியான கடற்படை நிலைகள் அடையாளமிடப்பட்டிருந்தன. அதன்படி இந்திய உப கண்டத்திற்கு உட்பட்ட கடற்பரப்பில் அமெரிக்காவினால் பயன்படுத்தக்கூடிய 24 தளங்கள் அடையாளமிடப்பட்டிருந்தன, அதில் இலங்கையின் பிரதான துறைமுகமான திருகோணமலைத் துறைமுகமும் ஒன்றாகும்.

இதற்கிடையில் 1981ம் ஆண்டு ஒக்டோபர் 25ம் திகதி "வாஷிங்டன் போஸ்ட்" என்ற பத்திரிகை "விரைவில் திருகோணமலைத் துறைமுகம் அமெரிக்கப் படைகளுக்கு ஓய்வையும், விநோதத்தையும் அளிக்கும் இடமாக மாறும்" எனத் தெரிவித்திருந்தது.

இந்தச் செய்தி அதே ஆண்டு டிசம்பர் மாதம் கொழும்பிலிருந்து வெளிவந்த "தேச விமுக்தி" என்ற சிங்களப் பத்திரிகையில் பிரசுரமானதுடன், சரசை பாராளுமன்றம்வரை சென்றது. 1981ம் ஆண்டு டிசம்பர் மாதம் 2ம் திகதி பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தின்போது அத்தனகல்ல தொகுதி பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த லக்ஷ்மன் ஜயக்கொடி அமெரிக்க அரசின் போர் வியூகங்கள் குறித்த அறிக்கையைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். அப்போது பாதுகாப்பு அமைச்சராக இருந்த வேரபிட்டிய அவ்வறிக்கையைப் பார்வையிட்டதோடு நிறுத்திக்கொண்டார். விவாதத்தின்போது பிரதமரும், வெளிவிவகார அமைச்சருமே பதிலளித்து உரையாற்றினார்கள்.

எவ்வாறெனினும், அவ்வறிக்கையில் "தவறுதலாகவே" திருகோணமலைத் துறைமுகம் அடையாளமிடப்பட்டதாக அடுத்த சில தினங்களில் Far Eastern Economic Review என்ற சஞ்சிகையில் வெளியான கட்டுரையொன்றில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவம் நடைபெற்று 20 வருடங்களின் பின் மீண்டும் அதே மாதிரியான "தவறுகள்" ஆரம்பித்துள்ளதாகத் தெரிகிறது. இலங்கை விவகாரத்தில் அமெரிக்கா காட்டத் தொடங்கியிருக்கும் ஆர்வமும், சர்வதேச செய்தி நிறுவனங்களின் அறிக்கைகளும் நடக்கப்போவதை ஓரளவு கட்டியம் கூறுவதாகவுள்ளன.

அமெரிக்கா தனது நலனுக்காக உறுதியாகத் தடம் பதிக்கத் தயாராகிறது என்ற தகவல் கடந்த மார்ச் மாதம் 29ம் திகதி சிங்கப்பூரில் இருந்து வெளிவரும் The Straits Times பத்திரிகை முன்பக்கச் செய்தியாக வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.


அமெரிக்காவின் Stratfor என்ற உளவு நிறுவனத்தின் அறிக்கை ஒன்றை ஆதாரமாக வைத்து டெக்ஸ்ஸாஸ் மாநிலத்திலிருந்தே சிங்கப்பூர் பத்திரிகைக்கு அந்தச் செய்தி எழுதப்பட்டிருந்தது.


அந்தத் தகவலின் சாராம்சம், "ஆப்கானிஸ்தானை அடிப்படையாக வைத்து மத்திய ஆசியாவில் தனது மிலிட்டரி ஏகாதிபத்தியத்தை விஸ்தரிப்பதற்கு வசதியாகவும், புதுடில்லிமீது கூர்மையான கண்காணிப்பைச் செலுத்துவதற்கு ஏதுவாகவும், தந்திரோபாய ரீதியில் இலங்கைத் தீவின் அமைவிடம் குறித்து அமெரிக்காவின் கவனம் பதிந்துள்ளது.

உலகில் ஆழமான இயற்கைத் துறைமுகமாகக் கருதப்படும் திருகோணமலைத் துறைமுகத்தில் அமெரிக்கக் கப்பல்களுக்கு எரிபொருள் நிரப்பும் வசதியும், பராமரிக்கும் ஏற்பாடுகளும் இருப்பதால் அந்தத் துறைமுகம் பிராந்தியத்தில் முக்கியமானதென அமெரிக்கா கருதுகிறது"

இதனைத் தொடர்ந்து கடந்த மூன்று மாத காலத்திற்குள் நடந்து முடிந்த சம்பவங்களால் இலங்கையின் திசையில் வாஷிங்டனின் கவனம் மிக ஆழமாக ஊடுருவியிருப்பதை அவதானிக்க முடிகிறது.

அமெரிக்க அரசின் தெற்காசிய விவகாரங்களுக்கான பிரதி இராஜாங்க செயலாளர் கிறிஸ்டினா ரொக்கா மற்றும் அமெரிக்காவின் கடற்படை ஜெனரல் திமோத்தி கோம்லி ஆகியோரின் யாழ் விஜயம் என்பன அண்மைக் காலத்தில் நடந்து முடிந்த இரு முக்கிய நிகழ்வுகள். வெறுமனே இரு தரப்பு உறவுகளையும் விருத்திசெய்யும் விஜயங்களாக மட்டும் இவற்றைக் கருத யார் தயாராக இருந்தாலும், இந்தியா அதற்குத் தயாராக இருக்குமா? என்பது சந்தேகமே! இவற்றிற்கு மேலாக இப்போது அமெரிக்கப் போர்க் கப்பல்கள் இலங்கைக்கு ஒருநாள் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு ஆழம் பார்க்கத் தொடங்கியுள்ளன.





கடந்த வாரம் கொழும்புத் துறைமுகத்திற்கு வந்துபோன "யு.எஸ் ஹூபர்" என்ற கப்பல் அமெரிக்காவிடமிருக்கும் அதிநவீன யுத்தக் கப்பல்களில் ஒன்றாகும். வளைகுடாப் போரின்போது ஈராக்கிற்கு எதிரான தாக்குதலில் தீவிரமாக ஈடுபட்ட இந்தக் கப்பல் தற்போதைய ஆப்கானிஸ்தானுடனான போரில் பங்கு கொள்ளும் பொருட்டு அரேபியக் கடலில் தரித்து நின்று, அரேபியக் கடலுக்கும் மத்திய தரைக் கடலுக்கும் இடைப்பட்ட பிரதேசத்தைக் கண்காணித்து வருகின்றது. எனவே, அதற்கு இலங்கைத் தீவின் முக்கியத்துவம் புறந்தள்ளப்படக் கூடிய ஒன்றல்ல.

நோர்வேயின் அனுசரணையுடன் நடந்துவரும் சமாதான முயற்சிகளில் அமெரிக்கா காட்டும் அக்கறை தன்னலம் சார்ந்ததாக இருக்கும் என்பதை மறுப்பதற்கில்லை.

திடீர் திடீரென அமெரிக்கத் தூதரகம் அறிக்கைகளை வெளியிட்டுப் புலிகளைக் கண்டிக்கிறது. அறிவுரை கூறுகிறது. இலங்கை அரசைப் பாராட்டுகிறது. தற்போதைய சமாதான முயற்சிகளைக் குழப்பிய பழியைச் சுமக்கவிரும்பாததால், மௌனமாக அவதானித்து வருகின்ற இந்தியா, இலங்கையில் அமெரிக்காவின் தலையீடு தொடர்பில் ஒரு வரையறையை வைத்திருக்கும் என்பதை எதிர்பார்க்கலாம்.

நோர்வே விஷயத்தில் குறுக்கே நிற்காவிட்டாலும் இந்தியாவின் சந்தேகப் பார்வை ஆரம்பம் முதலே இருந்து வருகின்றது. பிராந்திய வல்லரசு என்ற தனது பிரதிமையை அழிக்க நோர்வேயைப் பயன்படுத்தி அமெரிக்கா காய் நகர்த்துகிறதா? என்ற ஐயப்பாடு இந்தியாவக்கு இல்லாமலில்லை. நோர்வேக்கும் அமெரிக்காவக்குமிடையில் உள்ள நெருக்கம் இந்தியாவின் சந்தேகத்தை வலுப்பெறச் செய்யும் ஒரு காரணி.

அமெரிக்காவின் உளவு நிறுவனமான சி.ஐ.ஏ யின் ஐரோப்பிய அலுவலகம் நோர்வேயின் தலைநகரான ஒஸ்லோவில் இருந்துதான் இயங்கி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

திருகோணமலைத் துறைமுகத்தை அமெரிக்கா ஏதாவது ஒரு வழியில் பெற்றுவிடக்கூடும் என்ற பயம் இந்தியாவிற்கு நெடுங்காலமாகவே இருந்துவருகிறது. இலங்கை இந்திய ஒப்பந்தத்தில்கூட திருகோணமலையிலுள்ள எண்ணெய்க் குதங்களை இந்திய நலனுக்குப் பாதகமான சக்திகளுக்கு வழங்கக்கூடாது என்ற கோட்பாட்டை இந்தியா தவறாமல் சேர்த்துக் கொண்டது.

தற்போது இந்த எண்ணெய்க் குதங்களை விற்கப்போவதாக இலங்கையரசு அறிவித்ததும் முதலாவதாகக் கேள்விப்பத்திரத்தைச் சமர்ப்பித்த நாடு இந்தியாதான். ஆனால், இவை எதனையும் தனது பிராந்திய மேலாதிக்கத்தின் தந்திரோபாயமாகக் காண்பிக்க விரும்பாமல் "பொருளாதார நலன்"என்ற போர்வைக்குள் இருந்துகொண்டே புதுடில்லி செயற்படுத்தி வருகின்றது.

எப்படியிருந்தாலும், தங்களுக்குத் திருகோணமலையால் எந்தப் பயனுமில்லை என்ற தொனியில் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதுவர் பேசிவருகிறார்.

பயங்கரவாதத்தைக் காரணம் காட்டி இறைமையுள்ள நாடுகளுக்குள் தனது படைகளை அனுப்பும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் முதலில் மறுப்பதும், பின்னர் நியாயப்படுத்துவதும்தான் அமெரிக்காவின் யுக்தி. மிக அண்மிய உதாரணமாக, பிலிப்பைன்ஸில் மோரோ, அபுசெய்யாப் கிளர்ச்சிக்காரர்களை ஒடுக்கத் தனது விசேட படையணியை அனுப்பியிருக்கும் அமெரிக்கா ஆரம்பத்தில் படை அனுப்புவது குறித்த சாசசை எழுந்தபோது திட்டவ [illegible]மாக மறுத்தே வந்துள்ளது.

இலங்கையில் அமெரிக்க இராணுவ தளம் அமையலாம என்ற சர்ச்சை எழுந்தபோது வழமைபோலவே உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க அதனைப் பாராளுமன்றத்தில் நிராகரித்திருந்தார்.

நிராகரிப்பு என்பது புதிய விடயமல்ல. அமெரிக்காவின் "பிலடெல்பியா இன்குவரி" பத்திரிகையை மேற்கோள் காட்டி 1996ம் ஆண்டு ஜூலை மாதம் 30ம் திகதி "டல்லாஸ் மோர்னிங்" செய்தித்தாள், அமெரிக்கப் படைகள் இலங்கையில் உள்ள இராணுவத்திற்குப் பயிற்சியளிப்பதாக எழுதியிருந்தது.

அப்போதைய வெளிநாட்டமைச்சர் லக்ஷமன் கதிர்காமர் அதனை மறுத்திருந்தார். ஆனால், தென்னிலங்கையின் வீரவில என்ற இடத்தில் "க்ரீன் பரட்ஸ்" கொமாண்டோக்கள் இலங்கைப் படையினருடன் சேர்ந்து கூட்டுப் பயிற்சிகளில் ஈடுபடுவதைப் பின்னர் அரசாங்கம் ஒப்புக்கொண்டது.

மறுப்பு என்பது சாதாரணமான விடயம்தான் மறுத்துரைப்பதால் எந்த விடயமும் இல்லாமலாகிவிடாது.

1981ம் ஆண்டு அமெரிக்கப் போர் வியூகத் திட்டத்தில் "தவறுதலாக" திருகோணமலைத் துறைமுகம் இடம்பெற்றபோது அங்கு ரிபப்ளிக்கன் கட்சி அரசாங்கம் பதவியிலிருந்தது. அதேபோல் இலங்கையில் வலதுசாரி ஐ.தே.க. அரசு பதவியிலிருந்தது. இப்போது மீண்டும் அமெரிக்காவில் ரிபப்ளிக்கன் ஆட்சி. இலங்கையிலும் ஐ.தே.க. அரசாட்சி.

இவையெல்லாவற்றையும்விட எந்தவொரு மூன்றாம் உலக நாட்டிலும் தன்னிஷ்டப்படி மூக்கை நுழைக்கத் தற்போது அமெரிக்காவிற்கு வாய்ப்புக்கள் அதிகமிருக்கின்றன. செப்டம்பர் 11ம் திகதி வாஷிங்டன் சர்வதேச வர்த்தக மையத் தாக்குதலின் பின் பயங்கரவாதத்தை அழிக்கவெனக் களத்தில் இறங்கியிருக்கும் அமெரிக்கா தனது நலனுக்கு வசதியாக அனைத்து நிலைகளிலும் "பயங்கரவாதத்தைத் தடுத்தல்" எனக் கூறிக்கொண்டு கால் பதிக்க வாய்ப்பிருக்கிறது. இது இலங்கை விடயத்திலும் பொருந்தாது என்று கூறுவதற்கில்லை. 1981ல் இருந்ததைவிட இப் போது நிலைமை பல வழிகளில் வாஷிங்டனுக்குச் சாதகமாகவே இருக்கின்றது.

சுதந்திர வர்த்தக உடன்படிக்கை செய்துகொள்வதைப்பற்றிச் சிந்திக்கும் அளவ இலங்கையரசுடன் அமெரிக்காவின் உறவுகள் நெருக்கமாகியுள்ளன. இத்தகைய பின்னணியில் திருகோணமலையை மையமாக வைத்து இலங்கை மண்ணில் அமெரிக்கா தனது இராணுவ ஏகாதிபத்தியத்தை நிலைநிறுத்த முயற்சிக்கலாம் என்பதை யாரும் நிராகரிக்க முடியாது.

பர்ஸான்

# வருகிறது இடைத் தேர்தல்கள்

சென்னையிலுள்ள சைதாப்பேட்டை; தலைநகருக்கு அருகேயுள்ள அச்சிறுபாக்கம் (ரிசேர்வ்) மற்றும் வேலூர் மாவட்டத்தில் அமைந்துள்ள வாணியம்பாடி ஆகிய மூன்று தொகுதிகளில்தான் தேர்தல்கள் நடைபெறவிருக்கின்றன.

சைதாப்பேட்டையில் தி.மு.க. வைச் சேர்ந்த வை.பெருமாள், அச்சிறுபாக்கத்தில் பாட்டாளி மக்கள் கட்சியின் செல்வராஜ் மற்றும் வாணியம்பாடியில் மூத்த முஸ்லிம் தலைவர் அப்துல் லத்தீ:ப் ஆகியோர் மரணமடைந்ததன் காரணமாகவே இப்போது இடைத் தேர்தல்கள் நடைபெறுகின்றன.

தி.மு.க. மற்றும் அஇஅதிமுக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஆகிய கட்சிகள் தங்கள் வேட்பாளர்களை அறிவித்துவிட்டன. வழக்கம்போல காங்கிரஸ்தான் குழப்பத்தில் சிக்கியிருக்கிறது.

வாணியம்பாடியில் தி.மு.க. சார்பாக புகழ்பெற்ற பாடகர் நாகூர் ஹனீபாவும், அ.இ.அ.தி.மு.க. சார்பாக வடிவேல் என்பவரும் போட்டியிடுகின்றனர். அச்சிறுபாக்கத்தில் அ.இ.அ.தி.மு.க. சார்பாக பூவராக மூர்த்தி போட்டியிடுகிறார். தி.மு.க. அணிசார்பில் பாட்டாளி மக்கள் கட்சி அங்கு போட்டியிடுகிறது. வேட்பாளர் பெயர் அறிவிக்கப்படவில்லை. சைதாப்பேட்டையில் அ.இ.அ.தி.மு.க. சார்பில் வில்லன் நடிகர் ராதாரவியும், தி.மு.க. சார்பாக சுப்பிரமணியமும் போட்டியிடுகின்றனர்.

வாணியம்பாடியும், அதற்கடுத்தாற்போல சைதாப்பேட்டையும் முக்கிய தொகுதிகளாகக் கருதப்படுகின்றன. வாணியம்பாடியில் முஸ்லிம்கள் அதிகம் வாழ்கின்றனர். ஐம்பது சதத்திற்கு அதிகமாக என்று சிலரும், இல்லையில்லை 45 சதம்தான் என்று சிலரும் கூறுகின்றனர். சரியான புள்ளிவிபரம் கிடைக்கவில்லை. ஆனால், நிச்சயமாக முஸ்லிம்கள் கணிசமான எண்ணிக்கையில் அங்கு வாழ்வதாலும், அவர்கள் பொதுவாக ஒரே மாதிரியாகச் சிந்தித்து ஏதாவதொரு கட்சிக்கே தங்கள் வாக்குகளை அளிப்பர் என்று கருதப்படுவதாலும், அங்கு முஸ்லிம் வேட்பாளர்கள் நிறுத்தப்படுவர்.

ஆனால், பல்வேறு காலகட்டங்களில் இந்துக்கள் அங்கே வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டிருக்கின்றனர் என்பதை மறுப்பதற்கில்லை. அதே நேரம் தனது அமைச்சரவையில் ஒரு முஸ்லிமைக்கூடச் சேர்த்துக் கொள்ளாததாலும், குஜராத் படுகொலைகளைப் பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளாததாலும், விமர்சனத்துக்குள்ளாகியிருக்கும் ஜெயலலிதா, இப்படி வாணியம்பாடியில் முஸ்லிம் அல்லாத ஒருவரை நிறுத்தியிருப்பது, அவர் பாரதீய ஜனதாவை நெருங்கவே இப்படியெல்லாம் செய்கிறாரோ என்ற ஊகங்களை எழுப்பியிருக்கிறது.

எதிர்க்கட்சிகளெல்லாம் முஸ்லிம்களை நிறுத்தினால், அந்த வாக்குகள் சிதறி, இந்துக்களின் வாக்குகளைப் பெற்று வென்றுவிடலாம் என ஜெயலலிதா கணக்குப் போடலாம்.

முஸ்லிம்களைப் பொறுத்தவரை அனைத்துத் திராவிடக் கட்சிகள் மீதும் வெறுப்புடன்தான் இருக்கிறார்கள்.

கலைஞர் தேசிய ஜனநாயகக் கூட்டணியைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு உதறித் தள்ளினாலும் விடப்போவதில்லை என்கிறார். முரசொலிமாறன் மத்தியில் அமைச்சராயிருப்பது அவ்வளவு அவசியம் அவருக்கு. யாகம் செய்யும் ஜெயலலிதாவைப்பற்றிக் கேட்கவேண்டிய அவசியமேயில்லை. இந்த நிலைமையில் முஸ்லிம்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்பது சுவாரசியமான ஊகமே!

காங்கிரஸிற்கு வாக்களிக்கலாம்தான். அங்கு காங்கிரஸுக்குச் சறுச் செல்வாக்கும் இருக்கிறது. இரு திராவிடக் கட்சிகளுடனும் இல்லாமல் தனித்து இருக்கும் இடதுசாரிக் கட்சிகள், இரு காங்கிரஸ்கள் ஒன்றிணைந்து பொது வேட்பாளர்களை மூன்று தொகுதிகளிலும் நிறுத்தும் திட்டமும் இருக்கிறது.

ஆனால், சிக்கலே மார்க்சிஸ்ட் கட்சிதான். நாங்கள் பாரதீய ஜனதாவுடனோ, காங்கிரஸுடனோ கூட்டு வைத்துக்கொள்ளக்கூடாதென அகில இந்திய அளவில் முடிவெடுததுவிட்டோம். அதை மீற முடியாது. தமிழ் மாநில காங்கிரஸ் வேண்டுமானால் வாணியம்பாடியில் போட்டியிடட்டும். நாங்கள் ஆதரிக்கிறோம் என்கிறது அக்கட்சி.

இதில் கூத்தென்னவென்றால், தாமாகவே கடையை மூடிவிட்டு காங்கிரஸில் கரையப்போகிறது. அவர்களுக்குப் போட்டியிடவே விருப்பமில்லை. மார்க்சிஸ்ட்டுகளின் தர்மசங்கடத்தை நீக்குவதற்காக அவர்கள் போட்டியிடவேண்டிய சூழல். ஆனால், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவ்வளவு எளிதில் விட்டுக் கொடுத்துவிடமாட்டார். அடுத்த சில நாட்களில் இது குறித்து நிலைமை தெளிவாகிவிடும்.

மார்க்சிஸ்ட்டுகள் சைதாப்பேட்டையில் போட்டியிடுகிறார்கள். அச்சிறுபாக்கத்தில் இந்திய கம்யூனிஸ்ட்டுகள் போட்டியிடக்கூடும். இப்படி மத சார்பற்ற கட்சிகள் எல்லாம் கடந்த ஆண்டு சட்டமன்றத் தேர்தல்களிலோ, உள்ளாட்சித் தேர்தல்களிலோ கூட்டணி அமைத்திருந்தால் பா.ஜ.க. வை ஊக்குவிக்கும் திராவிடக் கட்சிகளுக்கு ஒரு மாற்று ஒரளவாவது உருவாகியிருக்கும்.

ஆனால் எங்கே? ஆளாளுக்கு ஒரு பக்கம் இழுத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படித்தான் ஆரோக்கியமான அரசியல் சக்திகளெல்லாம் நாசமாகிக்கொண்டிருக்கின்றன. கலைஞர் கருணாநிதி ரொம்பவும் புத்திசாதுரியமாக பாடகர் நாகூர் ஹனீபாவை வாணியம்பாடியில் களத்தில் இறக்கியிருக்கிறார். 77 வயதான ஹனீபா கணீரென்ற குரலில் அற்புதமாகப் பாடி, மாநிலம் முழுவதும் பிரபலமானவர். அவரது இசை நிகழ்ச்சிகளில் முஸ்லிம்கள் அளவு இந்துக்களும் இருப்பார்கள். பல ஆண்டுகளாக தி.மு.க. மேடைகளில் பாடி வருபவர். எல்லாத் தரப்பினரின் நல்லெண்ணத்தையும் பெற்ற ஹனீபா வெற்றி பெறலாம்தான். ஆனால், இருக்குமிடம் சரியில்லையே! குஜராத் கலவரங்களைப்பற்றித் தனிப்பட்ட முறையில் கூட ஹனீபா கருத்தெதுவும் தெரிவித்ததில்லையே!

மூன்றாவது அணி அங்கே செல்வாக்குள்ள ஒருவரை நிறுத்தினால் அதற்கு வெற்றி வாய்ப்பு இருக்கிறது என்பது இன்றைய கணிப்பாகும்.

சைதாப்பேட்டையில் சகட்டுமேனிக்கு கருணாநிதியைத் தாக்கிப் பேசும் ராதாரவி போட்டியிடுகிறார். அவர் கடந்த ஆண்டு சட்டமன்றத் தேர்தல்களுக்கு முன்தான் நகைச்சுவை நடிகர் எஸ்.எஸ்.சந்திரனுடன் அ.இ.அ.தி.மு.க. வில் இணைந்தவர்.

பின்னவர் ரவியைவிட இன்னமும் நாராசநடையில் தி.மு.க. வைத் தாக்கிப் பேசுபவர். அவர் ஏற்கனவே மாநிலங்கள் அவையில் உறுப்பினராகிவிட்டார். இப்போது ரவி சைதாப்பேட்டையில் நிற்கிறார். தி.மு.க. வை விட்டு வெளியேறி, அ.இ.அ.தி.மு.க. வில் சங்கமமாகி, கருணாநிதியையும் அவரது குடும்பத்தாரையும் தரக்குறைவாகப் பேசுபவர்களுக்கு, புரட்சித் தலைவியின் வெகுமதி நிச்சயம் உண்டு என்பதே ரவியின் தேர்விற்குப் பின்னாலுள்ள செய்தி. ஆனால், சைதாப்பேட்டையில் ரவி கடுமையான போட்டியைச் சந்திக்கவேண்டியிருக்கும்.

இருமுறை கருணாநிதி வென்றிருக்கும் அத்தொகுதி தி.மு.க. வின் கோட்டை யாகவே கருதப்படுகிறது. மாக்சிஸ்ட்டுகள் வேறு போட்டியிட்டு கருணா நிதிக்கு எதிரான வாக்குகளைப் பிரிக்கிறார்கள். அச்சிறுபாக்கம் ஒரு ரிசேர்வ் தொகுதி. அதாவது தலித்துக்கள் மட்டுமே போட்டியிட முடி யும். தனது கட்சி வன்னியர் கட்சி என்றாலும் கூட, தலித்துக்கள் மத்தி யிலும் தனக்குச் செல்வாக்கு உண்டென்பதை நிரூபிக்க வேண்டி ராம தாஸ் இத்தகைய தொகுதிகளில் போட்டியிட விழைகிறார்.

கடந்தமுறைஅ.இ.அ.தி.மு.க. கூட்டணியில் இருந்து போட்டியிட்டு வெற்றி பெற்ற பாட்டாளி மக்கள் கட்சி இம்முறை தி.மு.க. வை நம்பிக் களத்தில் இறங்குகிறது.

பாரதீய ஜனதா–தி.மு.க. பூசல் அதிகரித்ததன் விளைவாக, தமிழகத்தில் தேசிய ஜனநாயகக் கூட்டணியே கிடையாது என்ற நிலை உருவான பின்னர் நடக்கும் தேர்தல்கள் இவை. மற்ற இரு தொகுதிகளில் எப்படியோ அச்சிறுபாக்கத்தில் பா.ம.க. வை ஆதரிக்கப்போவதாக மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகமும் பாரதீய ஜனதாவும் அறிவித்திருக்கின்றன. வெல்ல முடியுமா? பொறுத்திருந்து பார்ப்போம்.

எந்தக் கட்சி வென்றாலும் தோற்றாலும் ஆட்சி மாறப்போவதில்லை. ஆட்சிக்கு ஆபத்தில்லை என்றாலுங்கூட மக்கள் மனநிலை எப்படியிருக்கிறது என்பதை அறிய இடைத் தேர்தல் முடிவுகள் உதவும்.



## 1வது பிறந்தநாள் வாழ்த்து



செல்வி சாதனா தேவானந்தராஜா

11 05 2002

அச்சுவேலியைச் சேர்ந்தர்களும், தற்பொழுத ஜேர்மனியில் வசிப்பவர்களுமான தேவானந்தராஜா-சசிபேபி தம்பதிகளின் செல்வப் புதல்வி சாதனா தனது முதலாவது பிறந்தநாளை 11.05.2002, அன்று தனது மாமனார் இல்லத்தில் (நல்லூர்-யாழ்ப்பாணம்) வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரது அன்பு அப்பா, அம்மா மற்றும் அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமன்மார், மாமிமார், அண்ணாமார், அக்காமார், மைத்துனன்மார், மைத்துனிமார் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் சாதனாவை அச்சுவேலி காளியின் அருள் பெற்று, பல்கலையும் கற்று, பல்லாண்டு காலம் நலமுடன் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

*தகவல்: அப்பா- தி. தேவானந்தராஜா.*


**சிங்கப்பூரில் இலங்கையர்களுக்கான திருமண வைபவங்களுக்கான சேவை**

வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கான திருமண சேவை சிறந்த முறையில் சமய முறைப்படி ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். மற்றும் பதிவுத் திருமணம் தங்குமிட வசதி, தங்குமிடங்களில் சமைத்து சாப்பிடும் வசதி, போக்குவரத்து வசதிகள் அனைத்தும் சிறந்த முறையில் குறைந்த செலவில் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு: சிங்கப்பூர்
N.Thanga T.Prince,
No. 5, Starlight Road, Singapore- 217758,
Opposite Rangoon Road,
Tel : 2974924-2978619 H.P : 98501222

தொடர்பு: இலங்கை
P.Rajan
H.P: 072-840708, 348349.

THEIVEEGAM INTERNATIONAL SOCIAL AND SPRITUAL SERVICES

தெய்வீக மருத்துவம்

**டாக்டர் பாலு சோதிடர் S.A.M.P, J.P. (SL)**

National Theiveega Sakthy Foundation
International Interregious Traditional & Medical & Divine service
சர்வதேச சமூக மாந்திரிக மருத்துவ தெய்வீக சேவை
Government Approved Charity Regd No:- HA/4/BT/219
அகில இலங்கை சமாதான நீதவான்

கிரக தோஷம் காலப்பகையால் பிரிந்த, காதலர்கள் கணவன் மனைவி ஒன்று சேர, வெறுத்த உறவினர்கள், வேண் டியவர்கள் அன்பாக இருக்க, காதல் திருமணம் எல்லோருடைய சம்மதத்துடன் நிறைவேற மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனநோய், தாழ்வு மனப்பான்மை, கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித் தடை, குடும்ப வாழ்க்கையில் சந்தோஷமின்மை, வெளியில் சொல்ல வெட்கமான பிரச்சனைகள், தீயபழக்கம், மனிதத் தீமை, மருந்திடு போன்ற தீமைகளில் இருந்து விடுபட்டு சந்தோஷமாக வாழ பிரச்சனைகளுக்குரிய காரணத்தை காண்டம் இறைசக்தியால் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ பனித பராதன தீங்கற்ற மஹா மாந்திரிக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தி அளிக்கப்படுகிறது.

நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனையை எழுதினால் அல்லது தொலைபேசி ஃபக்ஸ் மூலம் தொடர்ப கொண்டு உடன் பயன் தரும் தெய்வீக மருத்துவப் பொருட்களை விசேட தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்கிறார்கள். (இரகசியம் பாதுகாக்கப்படும்)

THIEIVEEGAM SRILANKA
HEAD OFFICE
BATTICALOA SRILANKA.

தெய்வீகம் ஸ்ரீலங்கா
தலைமை அலுவலகம்
மட்டக்களப்பு ஸ்ரீலங்கா.


தொலைபேசி / ஃபக்ஸ்
உள்நாட்டவர்களுக்கு:- (065) 24825
வெளிநாட்டவர்களுக்கு:- 0094 78610098

கொழும்பில் நேரில் சந்திக்கலாம்
"வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்"
"DISPEL DARKNESS IN LIFE AND LET LIGHT SHINE"

**மலையாள மாந்திரீகம்**



பரம்பரை பரம்பரையாக 39 வருடகால தன்னிகரற்ற சேவை யாற்றும் மலையாள மாந்திரீக தெய்வீக சக்தியால் எண்ணியது எண்ணியவாறு மின்சார வேகம் போல நடைபெறுவது திண்ணம். அதற்கெடுத்துக்காட்டாக, மக்களின் வெற்றியின் பலனாக எமக்களித்த சான்றிதழ்களை நேரில் கண்டறிய வாருங்கள்!



சுவிஸ் அன்பரின் "கணவன்/மனைவி பிணக்கு தீரல் மடல்"
"மனித தெய்வமாகிய ஐயாவுக்கு, ஸ்ரீ துர்க்கையம்மனின் கிருபையாலும் தங்களது ஆசீர்வாதத்தாலும் சின்னாபின்னமான எமது குடும்பத்தை 7000 KM க்கு அப்பால் இருந்த வண்ணம் ஒற்றுமையாக்கிய மனித தெய்வமாகிய தங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்."

சுவிஸ் அன்பரின் மடல் "ஸ்ரீ துர்க்கையம்மனின் சக்தியால் பேசும் மழலை"
"மனித தெய்வமே! உங்கள் தெய்வீக சக்தியால் பேசாத எம் 3 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்த வெள்ளத்தில் மூழ்கவைத்த உங்களுக்கு எமது கோடானு கோடி நன்றிகள்."

ஜெர்மன் அன்பரின் மடல், "மகளின் திக்குவாய் குணமாகியது"
"அன்புத் தெய்வமாகிய ஐயாவுக்கு, பிறவியிலிருந்து திக்குவாயாக இருந்த எனது 9 வயது மகளை திக்குவாயிலிருந்து குணமாக்கிய உங்களுக்கு ஆனந்தக் கண்ணீரால் நன்றி கூறுகிறோம்!"

லண்டன் அன்பரின் மடல், "எண்ணியவள் என்னிடமே வந்து சேர்ந்தாள்"
"பெருமதிப்புக்குரிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து என்னை பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை, மீண்டும் என்னிடத்தில் வந்து சேரவைத்து என்னை சந்தோஷத்தில் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள்!"

கொழும்பு அன்பரின் மடல், "39 வயதில் அதிசயத் திருமணம்"
"பெருமதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, எமது 39 வயது மகளுக்கு இனிமேல் திருமணமே நடக்காது என்று எண்ணிய நாம், உங்களிடம் மகளுக்கு பரிகாரம் செய்ததால் அதிசயிக்கத்தக்க வகையில் வெளியூரிலிருந்து வரன் கிடைக்கச் செய்து மகளின் திருமணத்தை இனிதே நடந்தேறச் செய்தமைக்கு கோடானுகோடி நன்றிகள்!"

குருணாகல் அன்பரின் மடல், "நெடுநாளாக தடைப்பட்ட திருமணம் 16 நாளில் வெற்றி"
"தெய்வகடாட்சம் பொருந்திய ஐயா, எனது சகோதரிக்கு திருமணம் தடைப்பட்ட வண்ணம் இருந்ததால், உங்களிடம் பரிகார நிவர்த்தி பெற்ற பின் ஆச்சரியப்படத்தக்கவகையில் சகோதரியின் திருமண நடைபெற உதவிய உங்களை என்றுமே மறக்கமாட்டோம்."

பிரான்ஸ் அன்பரின் மடல், "குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பயணம் வெற்றி"
"அன்புக்கும் மதிப்பிற்குமுரிய ஐயா, வெளிநாடு செல்லமுடியாமல் மிகவும் கஷ்டப்பட்ட எனக்கு பிரயாணத்தடை நீக்கி பரிகாரம் செய்து குறித்த நாளில் பிரயாணத்தை கைகூட வைத்து என்னைப் பிரான்ஸிலிருந்து இக்கடிதத்தை நன்றியாக எழுதுகிறேன். என்றுமே உங்களை மறவேன்."

ஹட்டன் அன்பரின் மடல், "தீராத் தலைவலி தீர்ந்துவிட்டது"
"மதிப்பிற்குரிய ஐயாவுக்கு, நெடுநாளாக எனக்கிருந்த தீராத் தலைவலியைக் குணமாக்கி என்னை பெரும் கஷ்டத்திலிருந்து விடுவித்தமைக்கு கண்ணீரால் நன்றிகள்."

இத்தாலி அன்பரின் மடல், "சந்தேகத்தால் பிரிவுபட்ட காதல் வெற்றி"
"வணக்கத்துக்குரிய டாக்டர் ஐயா, வீண் சந்தேகத்தால் பிரிய நேர்ந்த நாம் மீண்டும் சந்தோஷமாக சேர்ந்தது உங்களால் தான். என்றென்றும் உங்களுக்கு நன்றிகள்."

பதுளை அன்பரின் மடல், "போதை அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டவர்"
"அன்புக்குரிய ஐயாவுக்கு, எனது கணவரை நீண்ட நாள் போதைப்பொருள் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு எமது குடும்பத்துக்கு புது ஒளியேற்றினீர்கள். நானும் எனது குடும்பத்தாரும் என்றென்றும் கண்ணீரால் நன்றியாக இருப்போம்"

கனடா அன்பரின் மடல், "ஜாதகத்தில் கூறியது பலிதம்"
"மரியாதைக்குரிய ஐயா, உங்களிடம் ஜாதகம் பார்க்க வந்தபோது வெளிநாடு செல்வதைப் பற்றியே அறியாதிருந்த எனக்கு, இத்தனையாம் திகதி வெளிநாடு செல்வாய் எனக்கூறியது பலிதத்தைக் கண்டு ஆச் சரியமும் சந்தோசமும் அடைந்தேன். என்றும் உங்களை மறவேன் என்றும் உங்கள் சேவை தொடரட்டும்."

நீர்கொழும்பு அன்பரின் மடல், "புத்தி பேதலித்திருந்தவர் என்ன கூறுகிறார்"
"மாட்சிமை பொருந்திய ஐயா, சூனியத்தின் பிடியில் சிக்குண்டு புத்திபேதலித்து பலரது ஏளனத்துக்கும் அவமரியாதைக்கும் உள்ளான என்னை பரிபூரண குணமாக்கி மீண்டும் மனிதனாக இயல்பாக வாழச் செய்தமைக்கு கண்ணீரால் என்றும் நன்றி கூறுகிறேன் ஐயா!"

யாழ்ப்பாண அன்பரின் மடல், "அதிசய அக்னி குண்டல பூஜை"
"மதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, என்னையும் எனது குடும்பத்தாரையும் மறவாது மாதந்தோறும் விசேஷமாக நடைபெறும் அக்னிகுண்டல பூஜையின் சக்தி பெற்ற விபூதியை அனுப்பி எம்மை துன்பத்திலிருந்து காத்து வருவதற்கு என்றுமே நன்றி கூறுகிறோம் ஐயா."

கொழும்பு அன்பரின் மடல், "அச்சொட்டான கைரேகை பலன்"
"மதிப்பிற்குரிய சாமிகங்காதரனுக்கு, எனது கைரேகையின் பலனைக் கொண்டு தெளிவான முறையில் கடந்த கால, நிகழ் கால, எதிர் கால பலன்களை கூறி என்னை ஆச்சரியப்பட வைத்ததுக்கு நன்றி. உங்களது சேவை தொடரட்டும்."

டென்மார்க் அன்பரின் மடல், "அதிசயிக்கத்தக்க முடி வளர்ச்சி"
"அன்புள்ளம் கொண்ட ஐயா! தலையில் முடியுதிர்வதைத் தடுத்து நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நலமுடன வாழ எனக்கு வழிகாட்டியமைக்கு என்றென்றும் தங்களுக்கும் துர்க்கையம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்."

இனியென்ன உங்கள் குறை?, திருமணம் நடக்கவில்லையென்ற அங்கலாய்ப்பா?
வெளிநாட்டு பிரயாணத்தடையா?, காதலில் தோல்விகண்டு விட்டீர்களா?
இன்னும் சகலவற்றுக்கும் உள்நாட்டவர்களும் வெளிநாட்டவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

குறிப்பு : இங்கு தீமையான வேலைக்கு இடமில்லை.

39 வருட மாந்திரீக துறையில் நிலையான சேவை புரியும் உலக மாந்திரீக சக்கரவர்த்தி கௌரவ பேராசிரியர் கருணாகர பூசணம் சொல்லின் செல்வன் டாக்டர் பி.கே. சாமி (J.D.G.A.N)JP

உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி
Dr.P.K.Saamy J.D.G.A. NL JP
Hon. Prof. (IUMA)
Sri Durgaadevi Manthirika Uchchada Peedam.

கொழும்பில்
No.162, Kotahena Street, Mayfield Road, Colombo 13, Sri Lanka.

நுவரெலியாவில்
33, Daily Fair Complex, Kandy Road, Nuwara-Eliya. 052-22508, 052-35097.

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பேசி
TEL : 00941 342463
FAX : 00941 344831

உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
01-342463, 431137,47065- Fax: 344831
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka. com/drpksami.

**மட்டக்களப்பு மாந்திரீகம்**

உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சி பெறுவதற்கு, மட்டக்களப்பு மாந்திரீக வசியம் செய்து கொள்வதற்கு பரம்பரை வைத்திய மனோதத்துவ நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன் தொடர்பு கொண்டு வெற்றி பெறுங்கள். இரகசியம் வெளியாகாது.

DR. A.P.S. KUTTY
50, THEATRE ROAD, NINTHAVUR-21, SRI LANKA. ☎ 067-50349

श्रीविष्णुसहस्रनामस्तोत्रम्


**MEDITATION YOGA POWER**

ஆயுர்வேதத்தில் சோதிடம் கூறும் மாந்திரீக மருத்துவம்
தூரதேச மந்திர உட்சாடன வசிய ஆஹர்ஸ்ண பிராண தியானயோக ஆண்மீக அலைகள் (Cosmic Vibration) மருத்துவம்




ஹிமயமலை மஹாரிஷிகளின் குருசிஷ்ய மஹாமாந்திரீக மருத்துவ நிபுணர் ஜேர்மன் ஹோமியோபதி சீன அக்குப்பங்சர் இந்திய சித்த ஆயர்வேத மருத்துவ மனோதத்துவ யோகசிகிச்சையாளர்
(டாக்டர் "மந்திரயோகி")
YOGI.DR. T. MYLVAGANAM
R.H.M.D.- D Acu-(இலங்கை) P.I.S.M (இந்தியா)
Registered by Ministry of Health S.L.M.C. NO.061

விதியினால், அல்லது சதியினால் பிரிந்த காதலர்கள், கணவன்-மனைவி குடும்பங்கள் எங்கிருந்தாலும் ஒன்று சேர, வெறுப்பவர்கள் வேண்டியவர்கள் வந்து உறவாக உதவிபெற, தகாத ஆண் பெண் உறவை போதைவஸ்தை மறப்பிக்க, தீயசக்திகளினால் ஏற்பட்ட தீராத உடல் நோய் மனநோய் பிரச்சனைகளைத் தீர்த்து, எத்துன்பங்களும் அணுகாமல் உடல், வீடு வளவு, வியாபார நிலையங்கள், வாகனங்களை காவல் செய்ய காதல் திருமணம் பெற்றோர்கள்தடையாக இருப்பவர்களின் சம்மதங்களுடன் நிறைவேற கல்வி, தொழில், வியாபாரம் வெளிநாட்டுப் பிரயாணம் வேறுகாரியத்தடைகள் ஏற்படாமல் நினைத்த செய்கின்ற போகின்ற காரியங்கள் வெற்றிபெற, வேறு நன்மையான காரியங்களுக்கு தீங்கில்லாத தெய்வீக மஹா மந்திர யந்திர வசிக வைத்தியங்கள் செய்து கொள்ள வரமுடியாதவர்கள் கடல் கடந்த வெளிநாட்டவர்கள் பதிவுத் தபால் பக்ஸ், தொலை பேசி மூலம் தொடர்புகொண்டு மனோதத்துவ மாந்திரீக ஆன்மீக மருத்துவ அறிவுரை களோடு எல்லா மதத்தினர்களுக்கும் ஏற்ற இஸ்ட்ட தெய்வ அனுக்கிரஹ மந்திர சித்தியோடும் யோகசக்தியோடு செய்யப்படும் புனித பரிகார பொருட்களை துரித விசேட தபாலில் பெற்றும் தூரதேச ஆகாய அஹர்ஸ்ண மந்திர உட்சாடன பிராண தியானயோக ஆண்மீக அலைகள் மருத்துவ முறைப்படியும் உடன் நிறைவேற்றிக் கொள்கிறார்கள். இதுவரையில் இப்புனித சேவையை அறியாத அவசியம் தேவைப்படும் வெளிநாட்டில் இருப்பவர்களின் நன்மைக்காக குருசக்தி நிலயத்தின் பிரதம குரு யோகி டாக்டரிடம் பலன்கள் பெற்ற பல்லாயிரக்கணக்கான அன்பர்களில் சுவிஸ் நாட்டில் இருக்கும் ஓர் அன்பரின் அனுசரணையுடன் இந்த உண்மைகள் வெளியிடப்படுகின்றன.



GURUSACKTHY CENTER
KALLADY – BATTICALOA(P.O)
(SRI LANKA)

குரு சக்தி நிலையம்
இராமகிருஷ்ணபுரம் றோட்
கல்லடி மட்டக்களப்பு P.O
ஸ்ரீலங்கா

ரெலிபோன் - பக்ஸ்
உள்நாட்டவர்களுக்கு 065-24872 காலை 8 இருந்து இரவு 9 மணி வரை
வெளிநாட்டவர்களுக்கு 0094652487 2 காலை 8 இருந்து இரவு11 மணி வரை
கடல் கடந்த வெளிநாட்டவர்களுக்கான விஷேட சேவை
Registered by Ministry of Hindu Religious & Cultural Afairs.

# நீறுபூத்த நெருப்பாக யுத்த நிறுத்தம்!

அலசுவது-இராஜதந்திரி

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரச படையினருக்குமிடையே நிலவுகின்ற யுத்த நிறுத்தம் சங்கடமான கட்டங்களையும் எதிர்நோக்க வேண்டிய நிலை கடந்த வாரங்களில் ஏற்பட்டிருந்தது.

ரனில்-பிரபா புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாவதற்கு இரு மாதங்கள் முன்பதாகக் கடந்த டிசம்பர் நத்தார் தினத்தில் எல்.ரி.ரி.ஈ அமைப்பு அறிவித்த யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்திருந்தது.

இதன் பின்னர் கடந்த பெப்ரவரியில் பிரதமர் ரணிலுக்கும் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தானதும், யுத்த நிறுத்தம் மேலும் வலுவுற்றது.

கடந்த பெப்ரவரியில் ரணில்-பிரபா ஒப்பந்தம் கைச்சாத்தாவதற்கு ஒருநாள் முன்பதாகவும் வடமராட்சியில் புலிகளுக்கும், கடற்படையினருக்குமிடையே முறுகல் நிலை தோன்றியிருந்தது.

இதில் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் படைவீரரின் கடற்ப்ட்கொன்று சேதமானதுடன் கடற்படையினர் தரப்பில் உயிரிழப்பும் ஏற்பட்டிருந்தது.

இருப்பினும் கூடுமானவரை அரச படைத் தரப்பும், புலிகளும் தம்மிடையே மோதல் நிலை ஏற்படுவதைத் தவிர்ப்பதிலேயே ஆர்வம் காட்டி வருகின்றனர்.

புலிகளுக்கும் அரச படையினருக்குமிடையே நிலவுகின்ற யுத்த நிறுத்தம் ஒரு நீறுபூத்த நெருப்பாகவே இருக்கின்றது.

இரு தரப்பும் யுத்தத்தை இடைநிறுத்தியுள்ளனரே தவிர, முற்றிலுமாகத் தமது இராணுவ நடவடிக்கைகளுக்கு முழுக்குப் போட்டுவிடவில்லை.

இந்நிலையில் தற்போது அமுலில் இருந்து வருகின்ற யுத்த நிறுத்தத்திற்கு முழுஅளவில் இருதரப்பும் மதிப்பளிக்கும் பட்சத்திலேயே அரசியல் பேச்சுவார்த்தைகளைத் தங்கு தடையின்றி மேற்கொள்ள முடியும்.

புலிகளுக்கும் அரச படையினருக்குமிடையே நிலவுகின்ற யுத்த நிறுத்தம் தரை, கடல், ஆகாயம் ஆகிய முப்பரப்பிலும் அமுலிலிருக்கின்றது.

எல்.ரி.ரி.ஈ அமைப்பின் கடற்புலிகள் பிரிவும் வடக்கு-கிழக்கின் கடற்பரப்பில் இயங்குகின்றது.

யுத்த நிறுத்தம் ஏற்படுவதற்கு முன்பதாகத் தரையில் மட்டுமல்லாது, வடக்கின் கடற்பரப்பில் கூட புலிகளுக்கும் அரச படையினருக்கு மிடையே அடிக்கடி மோதல்கள் ஏற்படுவது வழக்கமாகவே இருந்து வந்துள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கும், புலிகளுக்குமிடையே நிலவிய யுத்த நிறுத்தம் கூட 1995ம் ஆண்டு திருகோணமலை கடற்படைத் தளத்தில் நங்கூர மிடப்பட்டிருந்த இரு பீரங்கிப் படகுகள் தாக்கப்பட்டதையடுத்தே முறிவடைந்திருந்தது.

அதற்கு முன்னர் 1987ம் ஆண்டில் இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தானதையடுத்து வடபகுதிக் கடலில் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் சிலர் கைது செய்யப்பட்டுப் பின்னர் அவர்கள் அனைவரும் பலாலி இராணுவ முகாமில் தற்கொலை செய்ததைத் தொடர்ந்தே அன்று நிலவிய யுத்த நிறுத்தம் கூட முறிவடைந்திருந்தது.

எனவே, தரையில் மட்டுமல்லாது நீர்ப்பரப்பிலும் பிரச்சனைகளைப் பூதாகரமாக்கிவிடக்கூடிய சூழ்நிலைகள் பலமானவையாகவே இருக்கின்றன.

இது தவிர ஓரிரு வாரங்களுக்கு முன்னர் ஆகாயப் பரப்பில்கூட அசம்பாவிதமொன்று ஏற்படும் நிலை தோன்றியிருந்தது.

கிளிநொச்சி, இரணைமடுக்குளத்தின் நீர்ப்பரப்பிலிருந்து புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை ஏற்றிக் கொண்டு மாலைதீவு நோக்கிச் சென்ற சீ-பிளேன் விமானம் அச்சுறுத்தலுக்குள்ளாகும் சூழ்நிலை ஏற்பட்டிருந்தது.

லண்டனிலிருந்து மாலைதீவு வழியாக இலங்கையின் மேற்குக் கடற்பரப்பின் மேலாகப் பறந்து வந்தே கிளிநொச்சி, இரணைமடுக்குளத்தில் திரு.பாலசிங்கத்தை ஏற்றி வந்த விமானம் இறங்கியிருந்தது.

இதன் பின்னர் வன்னியிலிருந்து மீண்டும் திரு.பாலசிங்கம் லண்டன் சென்றபோது, இரணைமடுக்குளத்திலிருந்து மேலெழுந்த சீ-பிளேன் விமானம், இலங்கையின் கிழக்குக் கரை மேலாகப் பறந்தே மாலைதீவுக்குச் சென்றிருந்தது. இந்தக் கிழக்குக் கரையோரம் மேலான பயணமே அண்மையில் திரு.பாலசிங்கத்தின் விமானத்திற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருந்தது.

கிழக்குப் பிராந்தியம், இராணுவ ரீதியாக அழுத்தம் நிறைந்த பகுதியாகவே இருக்கின்றது. முப்படையினரதும் முகாம்கள், கடற்படை, விமானப்படைத் தளங்கள் என்பவை பரவலாகக் கிழக்குப் பிரதேசத்தில் இருக்கின்றன.

இந்நிலையில் இப்பிராந்தியத்தின் மீதாக எவ்வித அறிவித்தலுமின்றி திடீரெனப் பறந்த புலிகளின் ஆலோசகரை ஏற்றிய சீ-பிளேன் விமானம் படைத்தரப்பை எச்சரிக்கையடைய வைத்திருந்தது.

இந்த விமானம்பற்றிப் படை வட்டாரம் உடனடியாகக் கொழும்புடன் தொடர்புகொண்டதையடுத்தே அனர்த்தம் எதுவும் ஏற்படுவது தவிர்க்கப்பட்டிருந்தது.

கிழக்குப் பிராந்தியம் மீதாகப் பறப்பதற்கு அவ்விமானத்திலிருந்தோர் முன்னறிவித்தல் எதுவும் வழங்காது எடுத்த முடிவே படைத்தரப்பைப் பதற்றத்திற்குள்ளாக்கிவிட்டிருந்தது.

யுத்த சூழலிலிருந்து முழுவதும் விடுபடாத நிலையில் திடுதிப்பென சாகசங்கள் காட்டுவதுபோல எதனையும் புரிய நினைக்கும்போது தேவையற்ற பிரச்சனைகளும் தோன்றுவதர்கவே இருக்கும்.



எனவே, யுத்த நிறுத்தத்தைப் பேணும் விடயத்தில் ஒவ்வொரு நகர்வையும் மிக அவதானத்தோடும், பரஸ்பர புரிந்துணர்வுடனும் மேற்கொள்ள வேண்டியதே அவசியமாகின்றது.

கடந்த வாரம் கிழக்கில் வாகரைப் பிரதேசத்தில் இடம்பெற்ற சம்பவம் கூட புலிகளுக்கும் கடற்படையினருக்குமிடையே போதியளவு புரிந்துணர்வின்மையால் ஏற்பட்டதொன்றென்பதையே யுத்த நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் மூலமாக அறிய முடிகின்றது.

தரையில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே யுத்த நிறுத்தம் ஏற்பட்டது முதல் எவ்வித முறுகல் நிலையும் ஏற்படாதிருக்கின்றது. இரு தரப்புமே ப்ரஸ்பர புரிந்துணர்வுடன் நடந்துகொள்வதைக் காணமுடிகிறது.

ஆனால், கடற்பிராந்தியமே சர்ச்சைக்குரியதாக இருக்கும் நிலையில் யுத்த நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் தமது நடவடிக்கைகளைத் தரைக்கப்பால் நீர்ப்பரப்பிலும் உறுதியாக விஸ்தரிக்க வேண்டியதாகின்றது.

அரச தரப்பைப் பொறுத்தவரை ஜனாதிபதி சந்திரிகாவே முப்படைகளினதும் பிரதம தளபதி என்ற தரத்திலிருக்கின்றார்.

எனவே, யுத்த நிறுத்தத்தைப் பேணும் விடயத்தில் படைத்தரப்புக் குறித்த நடவடிக்கைகளைக் கையாளும் பொறுப்பு ஜனாதிபதியிடமும் நிறையவே இருக்கின்றது.

அரசியல் நடவடிக்கைகள் தொடர்பாக எழக்கூடிய தப்பெண்ணங்கள், கருத்து வேறுபாடுகள் என்பவை இராணுவ ரீதியான அணுகுமுறைகளில் பிரதிபலிக்காதிருப்பதை ஜனாதிபதியும், பிரதமரும் உறுதி செய்ய வேண்டியோராகின்றனர்.

இதேவேளை, நடந்து முடிந்த “மே தினம்” தென்னிலங்கையில் சமரச நடவடிக்கைகள் குறித்து நிலவும் அரசியல் சூழலையும் வெளிப்படுத்துவதாகவே இருந்தது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமது கட்சியின் மே தினக் கூட்டத்தில் உரை நிகழ்த்தியபோது, “தென்னிலங்கை அரசியல் வட்டாரத்தில் சமரச நடவடிக்கைகளுக்குப் பூரண ஒத்துழைப்பை வழங்கும் போக்குக் காணப்படவில்லை” எனக் கூறியிருந்தார்.

பிரதமர் ரணில் குறிப்பிட்டது போலவே ஜே.வி.பி, பொதுஜன ஐக்கிய முன்னணி ஆகியவை கொழும்பிலும், ஹப்புத்தளையிலும் நடாத்திய மேதினக் கூட்டங்களில் சமரச நடவடிக்கைகளைக் கடுமையாக விமர்சிக்கும் கருத்துக் கண்ணோட்டங்களே வெளிவந்திருந்தன.

இந்நிலையில் யுத்த நிறுத்தத்தைப் பலவீனப்படுத்தி, சமரச நடவடிக்கைகள் குறித்த அரசியல் அணுகுமுறைகளையும் தடம் புரள வைப்பதற்கான சக்திகள் விழிப்படைய ஆரம்பித்திருப்பதையே அண்மைக் காலங்களில் தலைகாட்ட ஆரம்பித்திருக்கும் நிகழ்வுகள் புலப்படுத்துபவையாக இருக்கின்றன.

வாகரையில் இடம்பெற்ற சம்பவம் யுத்த நிறுத்த சர்வதேசக் கண்காணிப்பாளர்களுக்குத் தோன்றிய முக்கிய சவாலாகவே இருக்கின்றது.

ஏற்கனவே யுத்த நிறுத்த மீறல்கள் குறித்துப் பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்திருந்தன. ஆனால், வாகரைச் சம்பவம் பாரதூர மானதாகவும், யுத்த நிறுத்த அமுலாக்கத்தின் எதிர்காலத்தைக் கேள்விக் குறியாக்குவதாகவும் இருக்கின்றது.

சமரசப் பேச்சுவார்த்தைகள் குறித்த அரசியல் நடவடிக்கைகளிலேயே தற்போது கூடுதல் அக்கறை காட்டப்படும்போது, இராணுவ ரீதியாக எழக்கூடிய பிரச்சனைகள் பற்றியும் பெருமளவு அக்கறை செலுத்த வேண்டியது அவசியமானதாகின்றது.

இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்சனையில் அரசியல், இராணுவ நிலைப்பாடுகள் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்று விளங்குகின்றன.

வாகரையில் இடம்பெற்ற முறுகல் நிலையை தற்போதைய சமாதான அணுகுமுறைகளுக்குத் தோன்றிய முதலாவது அச்சுறுத்தலாகக் கருதி முன்னெச்சரிக்கையோடு சர்வதேச யுத்த நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் செயற்படவேண்டியுள்ளது.

நீறுபூத்த நெருப்பாக விளங்கும் யுத்த நிறுத்தத்தை மீளவும் ஒரு கொடுந் தீயாக உருவாகாமல் தடுக்கும் விதத்திலேயே அனைத்து சக்திகளையும், அவற்றின் செயற்பாடுகளையும் பிரயோகிக்க வேண்டியிருக்கின்றது.

## அதிரடி அய்யாத்துரை



கட்சி தாவினால் தோலுரிக்கப் போறதா ஜனாதிபதி சொல்லியிருக்கிறாரெல்லே, இதில விஷேசமென்னவெண்டால் ஜனாதிபதியே கட்சி தாவிப் போய்த் திரும்பி வந்தவதானே எண்டு முணுமுணுக்கினம் சில உட்கட்சிக்காரர். அவ வந்து இடத்தப் பறிச்சதாலதான் தம்பியார் யு.என்.பிக்குத் தாவினவர். இப்ப தம்பியும் திரும்பத் தாவி வந்திட்டார். தாங்கள் தாவலாம், மற்றவை தாவினாத்தான் பொல்லாப்பெண்டது குருக்கள் ஏதோ செய்தால் குற்றமில்லையாமே அதுபோலவோ?


எதுக்கும் எம்பிக் குதிக்கற எங்கட சங்கரியார் மட்டும் ஜெயலலிதவின்ர கொடும்பாவி எரிப்பில சம்பந்தப்படாமல் நோகாமல் கொள்ளாமல் ரொம்பப் பவ்வியமாத்தான் பேசிறாராம். ஆள் இந்திய விசாவுக்கு வம்பு தேடாமல் சமயயோசிதமாத் தப்பிக் கொண்டிட் டார், தாங்கள்தான் உசார் மடையர் மாதிரி முந்தி விழுந்து கூச்சல் போட்டு நோண்டியாகிப் போட்டினமெண்டு தமிழ் நாட்டுப் பக்கம் தலைகாட்டப் பயந்தபடி பெருமூச்சு விடுகினமாம் சில கூட்டமைப்பு எம்பிக்கள். துணிஞ்சபின் மனமே துயரம் கொள்ளாதே....சோகம் கொள்ளாதேஏஏஏஏ!

வழக்கமா அரசாங்கமோ, பொலிஸோதான் தடை விதிக்கிறது. ஆனால் பாருங்கோ, மேதினக் கூட்டமொண்டில தொழிலாளர் தலைவரொருவர் பேசிறதுக்கு தொழிற்சங்கக் கூட்டமைப்பொண்டே தடைவிதிச்ச விந்தை இலங்கையில இந்த முறை நடந்திருக்கு. இவைதான் தொழிலாளர் உரிமைகளுக்கு குரல் குடுக்கப் போகினமாம்! எப்பவும் இனச் சமத்துவத்துக்கும் தொழிலாளர் வர்க்கதுக்குமாகக் குரல் குடுத்து வந்த எங்கட வாசுதேவநாணயக்காரவுக்குத்தான் இந்தத் தடை விழுந்திருக்குதெண்டது வியப்புக்குரியதில்லையுங்கோ, வேதனைக் குரியது! புலிகள் மீதான தடையையே நீக்கச் சொல்லிக் கேக்கேக்க இந்தத் தடைய யாரிட்ட முறையிடுறது? ஹோ.... லெனின், பார்டன் யுவர் கொம்ரேட்ஸ்!

யாழ்ப்பாணத்தில ராணுவத்துக்கு வேலைவெட்டி இல்லாமல் போனது சனத்துக்கு நிம்மதியெண்டாலும் ராணுவம் அப்பம் சுட்டு விக்கிற யாபாரத்தில இறங்கிற அளவுக்கு நிலைமை போயிட்டுதெண்டது கொஞ்சம் வேடிக்கையாத்தான் இருக்குதுங்கோ. சுட்டுச் சுட்டுப் பழகின கை எதையாவது சுடத்தானே செய்யும். இப்பிடியே சமாதானம் பிறந்திட்டுதெண்டால் அவையவைக்கும் தொழிலெண்டு ஒண்டப் பழகிக்கொள்ளத்தானே வேணும். குட் குட் கெரி ஓன்!

பாதையைத் திறந்து விட்ட உடன எங்கட பெரும் பான்மை இனச் சகோதரர்களெல்லாம் இப்ப திரண்டு திரண்டு பிக்னிக் போகினமாம் யாழ்ப்பாணம். போனவை உடன கேக்கிற பொருள் பனம் பானம்தானாம். பனையாரும் இப்ப ஒரு மிடுக்காத்தான் நிமிந்து நிக்கிறாராம். தெருக் கடைகள் கனக்க அங்க இப்ப புதிசா முளைச்சிருக்காம். அதில தொப்பி போட்டவையளும் நிண்டு யாபாரம் செய்யினமாம். பழைய நிலைமைக்கு முழுசாத் திரும்பாட்டாலும் இதெல்லாம் யாருக்கும் பழய ஞாபகங்களைக் கிளறிவிடத்தானே செய்யும்? அந்தநாள் ...ஞாபகம்..... நெஞ்சிலே.... வந்ததே.... நண்பனே நண்பனே நண்பனே!

எங்களின்ர மின்சார அமைச்சர் கரு சொன்ன தேதிக்கு முன்னரே கரண்ட் பிரச்சினையை தீர்த்துப் போட்டார். வருண பகவான் கை கொடுத்து அவரின்ர பதவியை காப்பாத்திட்டுது என்ற சந்தோஷம் ஒரு புறமிருக்க உந்த விஷயத்தில ஆளுங்கட்சிக்குள்ளையே பலருக்கு வயித்தெரிச்சல் எண்டு தகவல். கரண்டை சாட்டாக வைச்சு கருவை கருவறுக்கலாம் எண்டு காத்திருந்தவை அசடு வழியினமாம். உதுல பச்சைக்கட்சி தலைவரும் அடக்கம் எண்டதுதான் சோகத்திலும் சோகம்.




பட உதவி: சிவா மகிந்தன், கொழும்பு-03.

## கருணைக் கொலை செய்த மருத்துவரின் அனுபவம்!

கருணைக் கொலைக்கு சட்ட ரீதியிலான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுத்த முதல் நாடு நெதர்லாந்து. பிரித்தானியா அண்மையில் கடுமையாக நோய்வாய்ப்பட்ட ஒரு பெண்மணிக்கு அவரது கணவனின் உதவியுடன் உயிரைப் போக்கிக் கொள்ள அனுமதி வழங்கியது.

நெதர்லாந்தில் இயங்கும் கருணைக் கொலைக்கு ஆதரவான சங்கத்தின் தலைவரும் ஓய்வு பெற்ற மருத்துவருமான ரொபர்ட் ஜோன் கியர் என்பவர், தான் செய்த கருணைக் கொலைகள்பற்றியும் அவை நடைபெற்ற விதம்பற்றிய விபரத்தையும் இணையத் தளமொன்றுக்கு விபரித்திருக்கிறார்.

"நான் இரண்டு தடவைகள் நோயாளிகளுக்கு மரணிக்க உதவியிருக்கிறேன். அவை 1980களில் நிகழ்ந்தன. அப்போது கருணைக் கொலை பாரதூரமான குற்றமாகக் கருதப்பட்டது. ஏனைய மருத்துவர்களைப்போல் நானும் அவற்றை இயற்கை மரணம் எனக் கூறிச் சமாளித்துவிட்டேன்.

என் நோயாளிகள் இருவரும் கொடிய புற்றுநோயினால் பாதிக்கப்பட்டிருந்தார்கள். வேதனை அவர்களின் நிரந்தர விதியாக இருந்தது. இதில் முக்கியமான விடயம் என்னவெனில், இவர்களில் ஒருவர் நோயாளியைப் பராமரித்து வந்த தாதி. மற்றவர்களின் உதவியில் தங்கியிருப்பதை அந்தத் தாதியினால் ஜீரணிக்க முடியவில்லை. அவர் இறக்கும்போது 56 வயது.

முதலில் அந்தப் பெண்மணிக்கு மார்பகப் புற்றுநோய் ஏற்பட்டு, குணமாக்கப்பட்டது. ஆனால், இம்முறை அவருக்குக் கர்ப்பப்பை புற்றுநோய் பீடித்திருந்தது. அதனைக் குணப்படுத்த முடியாது என மருத்துவர்கள் கூறிவிடவே எனது உதவியுடன் உயிரைப் போக்கிக்கொள்ள அவர் முடிவெடுத்தார்.

பல மாதங்களாக நாம் மரணத்தைப்பற்றி விவாதித்தோம். தனது வாழ்வை முடித்துக்கொள்ள விரும்பும் சந்தர்ப்பம் குறித்து அவர் தெளிவுபடுத்தினார். படுக்கையிலிருந்து எழுந்து மலசலகூடம்வரை நடக்க முடியாத நிலை வந்ததும் தான் மரணிக்க விரும்புவதாக அப் பெண்மணி கூறினார். இவ்வாறு மூன்று, நான்கு கட்டங்களை அவர் தள்ளிப் போட்டார்.

அவரது கடைசி அறிவிப்பைச் சைகையால் எனக்குத் தெரிவித்தார். ஜன்னலுக்கு வெளியே சில மலர்களை அவதானித்த அவர், அந்த மலர்கள் எல்லாம் பூச்செண்டாக மாறித் தனது தலைக்கருகில் வர விரும்புவதாகக் கூறினார். மறுநாள் அவரது உதவியாளர் என்னுடன் தொடர்புகொண்டு குறிப்பிட்ட பெண்மணி மரணத்திற்குத் தயாராக இருப்பதாகச் சொன்னார்.

நான் சற்றுக் கலக்கமடைந்தேன். சில நிமிடங்களில் அவரது பாதிரியாரும் என்னுடன் கதைத்து "இப்போது நேரம் நெருங்கிவிட்டது" என அந்தப் பெண்மணி கூறுவதாகச் சொன்னார். நான், அவரது உதவியாளர், பாதிரியார் மூவருமாக அந்தப் பெண்மணியைச் சுற்றி நின்று, "குட்பாய்" கூறி விடைகொடுத்தோம்.

என்ன நடக்கப்போகிறது என்பதையும், அது தனக்கு அவசியம் எனவும் அந்தப் பெண்மணி அறிந்திருந்தார்.

நான் அவருக்கு அதிகமான தூக்க மாத்திரைகளைக் கொடுத்தேன். அவர் ஆழ்ந்த உறக்கத்திற்குப் போனதும் இதயத் துடிப்பை நிறுத்தும் மருந்தை ஊசிமூலம் செலுத்தினேன். ஒரு தடவை அதிர்ந்து அடங்கிப் போனது அவரது உடல்.

நண்பியை இழந்த கவலை எனக்கு ஏற்பட்டபோதும் ஒருவகை திருப்தியும் மனதிலேற்பட்டது. காரணம் இறுதியில் அவருக்கு வேண்டியதை நான் வழங்கிவிட்டேன். அதாவது அமைதியான மரணத்தை நான் பெற்றுக் கொடுத்தேன். அப்போது இப்படியான மரணங்கள் சட்டத்தில் பாரதூரமான குற்றமாகக் கருதப்பட்டது. ஆனால்,நான் அப்படியொரு குற்றத்தைச் செய்ததாக உணரவில்லை.

## வீட்டைவிட்டு வெளியே வரும் ஆங் சாங் சூகீ



மியன்மார் (பர்மா)இல் இராணுவ ஆட்சிதான் நடைபெற்று வருகின்றது. அங்குள்ள இராணுவ ஆட்சியாளர்களுக்குச் சிம்ம சொப்பனமாக இருந்து வருபவர் ஜனநாயக ஆதரவுப் பெண்மணியான ஆங் சாங் சூகீ. இவரை வெளியில் விட்டுவைத்தால் மக்களைத் தூண்டி அரசுக்கெதிராகத் திருப்பிவிடுவார் என்று பயந்த இராணுவம் அவரைப் பிடித்து வீட்டுக் காவலில் வைத்துவிட்டது.

ஆங் சாங் சூகீ வீட்டுக்குக் காவலில் வைக்கப்பட்டதும் சர்வதேச சமூகம் அவரது விடுதலைக்காகக் குரல் கொடுக்கவாரம்பித்தது. அழுத்தங்கள் அதிகரித்ததில் இப்போது சூகீயை விடுதலை செய்திருக்கிறது பர்மாவின் இராணுவ அரசு. அவர் மீதான சகல கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டு, நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட்டிருக்கிறார் சூகீ.

56 வயதான சூகீ 2000ம் ஆண்டு செப்டம்பர் மாதம் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார். அவரது தொலைபேசியும் துண்டிக்கப்பட்டது. தலைநகர் ரங்கூனுக்கு வெளியே செல்லக் கூடாது என அரசு விதித்திருந்த தடையை மீறி அவர் செயல்பட முயன்றதைத் தொடர்ந்து அவர் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.

சூகீயை நிபந்தனையின்றி விடுவிக்கக்கோரி மியன்மார் இராணுவ அரசை ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்தி வந்தது. சர்வதேச சமூகமும் அவரை விடுவிக்கக்கோரி தொடர்ந்து நிர்ப்பந்தித்து வந்தது. இராணுவ அரசுக்கு நெருக்குதல் தரும் வகையில் பொருளாதாரத் தடைகளும் விதிக்கப்பட்டன.

இந்நிலையில் சர்வதேச நிர்ப்பந்தங்களுக்கு அடிபணிந்து சூகீயை விடுவிக்க இராணுவ அரசு முன் வந்தது.

சூகீ 1988ல் ஜனநாயக ஆதரவு இயக்கத்தை ஆரம்பித்து இராணுவ அரசுக்கெதிராகப் போராட்டத்தை நடாத்தினார். நாட்டில் ஜனநாயக எழுச்சியலை வீசத் தொடங்கியதைக் கண்ட இராணுவ அரசு அதை ஒடுக்க முற்பட்டது. ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டனர். பலர் சிறையில் அடைக்கப்பட்டனர். அதைத் தொடர்ந்து 1989ம் ஆண்டு ஜூலை 19ம் திகதி சூகீ வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.

பிரித்தானியா மற்றும் அமெரிக்காவின் கைப்பாவையாக அவர் செயல்படுவதாக இராணுவ அரசு குற்றஞ்சாட்டியது.

இந்நிலையில் தேசிய ஜனநாயக லீக் கட்சியின் பொதுச் செயலாளராக சூகீ அறிவிக்கப்பட்டார். பின்னர் 1990ல் நடந்த தேர்தலில் சூகீயின் தேசிய ஜனநாயக லீக் கட்சி பெரும்பான்மை இடங்களில் வென்றது. ஆனால், இராணுவம் சூகீயிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்க மறுத்தது.


பின்னர் 1995ல் சூகீ விடுவிக்கப்பட்டார். ஆனால், தலைநகர் ரங்கூனை விட்டு வெளியில் செல்ல இராணுவ அரசு அவருக்குத் தடை விதித்திருந்தது. தடையை மீறிப் பக்கத்து நகரம் ஒன்றில் தமது ஆதரவாளர்களின் கூட்டத்தில் கலந்துகொள்ள சூகீ முற்பட்டதைத் தொடர்ந்து 2000ம் ஆண்டு செப்டம்பரில் அவர் மீண்டும் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.

## அழுகையில் ஆனந்தம்

படத்தைப் பார்த்ததும் என்ன தோன்றுகின்றது?

அழுகின்ற குழந்தை ஒன்றை அக்கறையான அப்பா தூக்கிப்போட்டு அதனைச் சந்தோஷப்படுத்த முயல்கின்றார் என்றுதானே நினைக்கிறீர்கள்! அதுதான் உண்மையென்றால், நாம் ஏன் இதனைப் பிரசுரிக்கப் போகின்றோம். இது வேறு சமாச்சாரம்.

விதம் விதமான போட்டிகளிலெல்லாம் அலுத்துப்போன மனித வர்க்கத்தின் அடுத்த கண்டுபிடிப்புத்தான் "குழந்தைகள் கத்தும் போட்டி." இந்த வினோதமான போட்டி குழந்தைகள் நலன் மற்றும் வளர்ச்சிக்காகப் பிரரார்த்திப்பதற்காக டோக்கியோவிலுள்ள சென்சோஜி ஆலயத்தில் நடைபெற்றது. 2001ம் ஆண்டில் பிறந்த 72 குழந்தைகள் இப்போட்டியில் கலந்து கொண்டனர். எந்தக் குழந்தை வேகமாகவும், சத்தமாகவும் கத்துகிறதோ அந்தக் குழந்தை வென்றதாக அறிவிக்கப்படும். எங்கள் கண்ணீரில் எவனோ ஒருவன் பிழைப்பு நடாத்துகின்றான். எவனோ குதூகலிக்கின்றான் என நொந்துபோனவர்களே... மனதைக் கொஞ்சம் தேற்றிக்கொள்ளுங்கள். தங்கள் மழலையின் கதறலைப் பார்த்து ரசிக்கும் மனிதர்கள் வாழும் உலகமடா இது.



## ரிலாக்ஸ்

தனக்குக் கடுமையான சளித் தொல்லை என சிகிச்சைக்கு வந்தவருக்கு மருத்துவர் சில மாத்திரைகளை எழுதிக் கொடுத்தார். அதைச் சாப்பிட்ட பிறகும் சளித்தொல்லை தீராததால், அடுத்த முறை ஊசி போட்டார். அதுவும் சரிவரவில்லை. மூன்றாம் முறையாக இதே பிரச்சனையாக வந்த நோயாளியிடம், போய் வெந்நீரில் குளித்துவிட்டு, ஜன்னல்களையெல்லாம் திறந்து வைத்துக் குளிரில் நில். எல்லாம் சரியாகிவிடும் என்றார்.

நோயாளி திடுக்கிட்டான். அப்படிச் செய்தால் நியூமோனியா வந்துவிடுமே என்றான்.

எனக்கும் அது தெரியும். நியூமோனியா வந்தால் நான் குணமாக்கி விடுவேன் என்றார் மருத்துவர்.

## இயற்கையின் சீற்றம்



மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோ குடியரசு அண்மையில் வரலாறு காணாத இயற்கை அனர்த்தத்தைச் சந்தித்தது. அந்த நாட்டின் சாபக்கேடாகப் பல்லாண்டு காலம் உறங்கிக் கிடந்த எரிமலை எவ்வித முன்னெச்சரிக்கையுமின்றி வெடித்துச் சிதறியது. "ஹோமா" என்ற நகரமே இந்த எரிமலையின் சீற்றத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டது. நகரத்தில் உள்ள பல கட்டடங்கள் எரிந்து சாம்பராயின. வீதியில் சென்றுகொண்டிருந்த வாகனங்களுக்கு என்ன நடந்தது என்பதை அறியமுடியாதவாறு எரிமலைக் குழம்பு மூடிக்கொண்டது. "ஹோமா" நகர வீதியில் செறிவான எரிமலைக் குழம்பு சுமார் 10 மணித்தியாலங்களுக்கு மேல் ஆறுபோல் ஓடியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆயிரக்கணக்கானவர்கள் பொசுங்கிச் சாம்பராயினர். மேலும், பல்லாயிரக்கணக்கானவர்கள் தமது வீடுவாசல்களை இழந்தனர். எரிமலை வெடிப்பு நிகழ்ந்ததும் நகரைவிட்டு வெளியேறிய மக்கள் மீண்டும் ஊருக்குள் திரும்புவதையும், வழியெல்லாம் இறுகிக் கல்லாய்ப்போன எரிமலைக் குழம்பையும்தான் இங்கு காண்கிறீர்கள். ■

## வீதியில் விளையாடும் கங்குலி



மும்பையில் ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த கங்குலி காலையில் உடற்பயிற்சிக்காக வீதியில் இறங்கி நடந்தபோது விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்களிடம் சிக்கிக்கொண்டார். தமது நாட்டுத் தேசிய கிரிக்கெட் அணித் தலைவருடன் விளையாட வேண்டுமென்ற ஆசையில் அவரைத் தங்களுடன் விளையாட அழைக்க, கங்குலியும் சம்மதித்தார். பீப்பாய் ஒன்றின் மேல் பழைய ரயர் ஒன்றை விக்கெட்டாக வைத்து சனநடமாட்டம் அதிகமாகவுள்ள மும்பை வீதியில் சௌரவ் கங்குலி துடுப்பெடுத்தாடுவதைத்தான் இங்கு காண்கிறீர்கள். இன்று இந்திய அணியின் தலைவராக இருந்தாலும் நானும் இப்படியெல்லாம் வீதியில் விளையாடித்தான் உயர்நிலையடைந்தேன் என்கிறார் கங்குலி. ■


## தகவல் பெட்டி

சவுதி அரேபியாவின் தலைநகரான ரியாத்திற்கும் தெஹ்ரானுக்கும் இடையிலுள்ள "சூப்பர் ஸ்பெஷாலிட்டி" சாலையில் க்ளிக் செய்யப்பட்ட காட்சி இது.

கீழேயிருக்கும் வீதியால் வாகனங்கள் செல்ல மேம்பாலத்தின் வழியாக ஒட்டகங்களின் அணிவகுப்பு இடம்பெறுகிறது.

சவுதி, ஈரான் எல்லைகளில் உள்ள பாலைவன வீதிகளைத் தாண்டி வரிசையாக ஒட்டகங்கள் செல்லும் காட்சிகள் அங்கு வழமையானவை! அதிவேக நெடுஞ்சாலைகள் பலவற்றில் ஒட்டகங்கள் பாதையைக் கடக்கும் என்பதால் வாகனங்களை மெதுவாகச் செலுத்தவும் என எச்சரிக்கப்பட்டிருக்கிறது. வேறுசில இடங்களில் ஒட்டகங்கள் பாலைவன மணல்வெளியிலிருந்து போக்குவரத்து வீதிக்கு நுழைய முடியாதவாறு தடுப்புக்கள் போடப்பட்டிருக்கின்றன. மேலேயுள்ள படத்தை வெண்டி காக்கர் என்ற புகைப்படக் கலைஞர் தனது கருவியில் "க்ளிக்"கினார்.

## ஒட்டகங்களின் அணிவகுப்பு



# ரம்பாவின் ஏமாற்றம்

ரம்பாவின் அண்ணனுக்கும் ரம்பாவிற்கும் பிரச்சனை. அண்ணனை வீட்டைவிட்டு விரட்டி விட்டார் என்றெல்லாம் செய்திகள். ஆனால், அண்ணனும் தங்கையும் பாசமலர் ரேஞ்சில்தான் இன்னமும் இருக்கிறார்கள். தங்கையின் சொந்தப் படம் பப்படம் ஆகிவிடக் கூடாது என்பதில் அண்ணன் காட்டும் அக்கறை மெய்சி லிர்க்க வைக்கிறது.

இவர்கள் தயாரிப்பில் உருவாகும் "த்ரீ ரோஸஸ்" படத்தில் ஏகப்பட்ட மாற்றங்களைச் செய்து மெருகேற்றி வரும் அண்ணன், படத்தில் பிரபல ஹீரோ ஒருவரை ஒரு பாட்டிற்கு ஆடவைத்தால் என்ன? என்று யோசனை சொல்ல, சரி என்று தலையாட்டிய ரம்பா தன் வெண்டைக்காய் விரல்களால டெலிபோனைச் சுற்றி ஒவ்வொரு ஹீரோவிடமும் ஒரு பாட்டுக்கு ஆடச் சொல்கிறார். விக்ரம் தொடங்கி சூர்யா வரைக்கும் நோ சொல்ல, என்ன செய்வது என்று அதே வெண்டைக்காயில் பூத்திருக்கும் நகம் கடிக்கிறார் ரம்பா. யாராச்சும் யெஸ் சொல்லுங்களேன்!

# மும்தாஜின் புகைப்பட கேலரி

மும்தாஜின் ரசிகர்களுக்காக மும்தாஜ் "போட்டோ கேலரி" என்ற பெயரில் சி.டி. யை வெளியிட்டுள்ளது போதி திருவளம் முந்நூற்றிற்கும் மேற்பட்ட அசத்தலான கவர்ச்சிப் படங்கள் அடங்கிய சி.டி.யில் மும்தாஜ் போட்டோ கேலரி என்ற தலைப்பில் புகைப்படங்கள் கொட்டிக் கிடக்கின்றன.

அத்தோடு கம்ப்யூட்டரில் பயன்படுத்தக் கூடிய பேப்பர், ஸ்கிரீன் ஸேவர் போன்ற அம்சங்களும் சி.டி. யில் உண்டு. மும்தாஜின் ரசிகர்கள் நினைத்த நேரத்தில் எல்லாம் அவரது அழகைக் காணும் வகையில் இந்த மும்தாஜ் போட்டோ கேலரி அமர்க்களமாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

இதன் சிறப்பம்சம்... இதுவரை பத்திரிகையில் வெளிவராத மும்தாஜின் பல புகைப்படங்கள் இதில் இடம்பெற்றிருப்பதுதான். அத்தனையும் கவர்ச்சிப் படங்கள்.

ஒரு நடிகைக்காகப் பிரத்தியேகமாக இப்படி ஒரு சி.டி. வெளியிட்டிருப்பது இந்தியாவிலேயே இதுதான் முதல் முறை. www.thiraiulagam.com இந்த இணையத்தளத்தினூடாக மும்தாஜின் சி.டி. விபரங்களை அறியலாம்.



முரளி-அப்பாஸ்
படம்: லவர்ஸ்

# சினேகாவின் உதட்டைக் கடிக்கப்போய் கன்னத்தில் வாங்கிக்கட்டிய ஷாம்!

இளம் ஹீரோக்களுக்கு நடுவே ஏகப்பட்ட போட்டிகள் நடந்து கொண்டிருக்கிற நேரத்தில் கொஞ்சம் நம்பிக்கையான இளைஞர் என்று சொல்லப்பட்டவர் '12பி' ஷாம். வைகசம் இரண்டு மூன்று படங்கள் வைத்திருக்கிறார். இரண்டாவது படம் இன்னும் ரிலீஸாகவில்லை. அதற்குள் கதையை மாத்து ஷாட் இப்படி வை என்று இயக்கு நர்களுக்கு

அட்வைஸ் பண்ணுகிறார் என்று கோடம்பாக்கத்தில் பொரிந்து தள்ள
கொண்டிருக்கிறார்கள். இதுவாவது பரவாயில்லை. லேட்டஸ்டாக அ
மீது சொல்லப்படுகிற கம்ளைண்ட், காரக்டரையே ஆட்டிப் பார்க்கிறா
இருப்பதுதான் கொடுமை!

என்னா வசந்த் இயக்கும் 'ஏய்! நீ ரொம்ப அழகா இருக்கே' படத்
தால பாடல் காட்சிக்காக வைசாக் போயிருக்கிறது யூனிட். மனைட காய
வெயில் நேரம். பாடலுக்கு நடுவே கடலலைக்குள் விழுந்து புரண்டு சினே
ஓடிவரு கிறமாதிரி காட்சி. காட்சியை விளக்கிவிட்டு சினேகா போட வேண்ட
காஸ்ட்யூமை எடுத்துக் கொடுக்கச் சொல்லியிருக்கிறார் இயக்குநர்.

காஸ்ட்யூமர் எடுத்துக் கொடுத்த ட்ரெஸ்ஸைப் பார்த்த சினேகா
அதிர்ச்சி. கொசுவலையைவிட மெல்லிய ஆடை அது. இதெல்லாம் ந
போடமாட்டேன் என்று அடம்பிடிக்க ஏக ரகளை. 'நான் யார் ெ
யுமா? இண்டஸ்ட்ரியிலேயே இருக்கமுடியாமப் பண்ணிடுவேன்' எ
வசந்த் கத்த... ஒரு வழியாக... இப்போதுள்ள கோட்டிகளை எ
துச் சொல்லிச் சம்மதிக்க வைத்திருக்கிறார்கள் யூனிட் ஆ
மறுபடியும் காட்சியை விளக்குகிறார். அப்படியே வ
ஓடிவர்றீங்க... பின்னாலேயே ஷாம் விரட்டிட்டு வா
ஆனால் கையில் சிக்காம பாவலா காட்றீங்க. எட்டிப் ப
சிடறார். 'சட்'னு கட்டிப்பிடிச்ச உதட்டில் மு
கொடுக்கிறார். ஓகேவா...!

சொல்லிவிட்டு 'காமிராமேன் ரெடியாய்யா' எ
கேட்கிறார். காமிரா ஓட ஆரம்பிக்கிறது. சினே
ஓடிவருகிறார். இயக்குநர் சொன்னபடி
டாக நடக்கிறதுகாட்சி. ஓகே என வசந்த்
கொடுக்கும்போது 'பளார்' என்றொரு ச
திரும்பிப் பார்த்தால் ஷாம் கன்னத்
தடவியபடி நின்றுகொண்டிருக்கிறா
உதட்டில் மென்மையான மு
கொடுக்கச் சொன்னால் சினே
இருந்த கோபத்தைப் பார்
உணர்ச்சி வசப்பட்டு உத
கடித்துவிட்டாராம். ஷ
சினேகா ஏக டென்ஷ
சத்தி. படத்தில் இந்தக் கா
வரக்கூடாது ம
சொல்லி சண்டை
திற்க... மறுபடி
ஓடவிட்டு கன்ன
முத்தமிட்
மாதிரி
மாக்கியி
கிறார்கள்

### பரிபோனது

'ஸ்ரீ' படத்தில் முதலில் நடிக்க இருந்தவர் நடிகர் மாதவன். இவர் வெங்கடேஸ்வராலயம் தயாரிப்பாளர்களிடம் ஒரு குவேசப என வளவு நேரம் எடுப்பீர்கள? படம் எத்தனை அடி எடுப்பீர்கள? எடுக்கும் சீன்களில் எவ்வளவு பயன்படுத்துவீர்கள். எவ்வளவு கட் செய்வீர்கள் என்றெல்லாம் கேள்வி கேட்டாராம். வெறுத்துப்போன தயாரிப்பாளர்கள் மாதவனைக் கழட்டி விட்டு சூர்யாவை புக் செய்து சூட்டிங் சென்றதாகத் தகவல்.

# பூமிகா யாரைக் காதலிக்கிறார்?

பூமிகா வருத்தத்தில் இருக்கிறார்! பின்னே, படத்திற்குப் படம் அவரைப் பற்றிய வதந்திகள் வந்துகொண்டேயிருந்தால் வருத்தப் படாமல் என்ன செய்வாராம்.

பூமிகாவிடம் உங்கள் காதல் சமாச்சாரம் என்னவாயிற்று என்று கேட்டால் கண்களில் கிளிசரின் போடாமலேயே கலங்கிவிடுகிறார். மூக்கை ஒரு கையால் சிந்தியவாறு, "இத பாருங்க சார், சூர்யா டைரக்ஷன்ல ஒரு படம் செய்தவுடன் அவருடன் எனக்குக் காதல்னு சொன்னாங்க! நான் அதைப் பொருட்படுத்தவேயில்லை. இப்போ ரோஜாக் கூட்டம் படத்தில ஸ்ரீகாந்துடன் நடித்தவுடன் எனக்கும் அவருக்கும் காதல்னு சொல்றாங்க. உண்மையில் எனக்கு யாருடனும், எப்போதும் காதல் இருந்ததில்லை. நான், நானாகவே இருக்கப் பிரியப்படுகின்றேன். இவையெல்லாம் என் வளர்ச்சியைப் பொறுக்க முடியாமல் சிலர் கிளப்பிவிடும் வதந்திகள். இதனால் நான் பாதிக்கப்பட மாட்டேன். முதலில் இவை குறித்துப் பயந்தாலும் கூட அப்புறம் இவற்றைக் கண்டுகொள்ளாமல் இருக்கப் பழகிக்கொண்டேன்" என்கிறார் பூமிகா.

நம்மிடம் காரமாகப் பேசிவிட்டதாக நினைத்தாரோ என்னவோ, தெலுங்கில் இப்போ சில படங்களில் நடிக்கிறேன். அதன் பிறகு தமிழில் மீண்டும் நடிப்பேன் எனத் தனது ரசிகர்களுக்கு ஆறுதல் கூறுகிறார்.



அருண்குமார்-கௌண்டம்
படம்: கண்ணால் பேசவா



சரத்
பட

# ராஜுசுந்தரத்தின் "எங்கிருந்தாலும் வாழ்க"

"எங்கிருந்தாலும் வாழ்க" என்று பாடத் தொடங்கிவிட்டார் ராஜுசுந்தரம். காதல் முறிவை இவ்வளவு சந்தோஷமாக ஏற்றுக் கொண்ட முதல் ஆண்பிள்ளை அனேகமாக ராஜுவாகத்தானிருக்கும்.

"சிம்ரனுக்கும் உங்களுக்கும் காதல் தொடர்கிறதா?" ராஜுவிடம் கேட்டதற்கு, "எல்லாத்தையும் தெரிஞ்சு வைச்சுக்கிட்டே கேக்கிறீங்களே" என்றார் வெகு இயல்பாக. "அப்படியென்றால் காதல் முறிந்துவிட்டது என்று எடுத்துக்கொள்ளலாமா?" என்று கேட்டதற்கு, மெல்லிய சிரிப்பொன்றைப் பதிலாகத் தந்து, சில நிமிட மௌனத்தின் பின் அவர் திட்டவட்டமாகச் சொன்னது, "அவர் ஒரு நடிகை... நான் ஒரு டான்ஸ் மாஸ்டர்! எனக்கும் அவருக்கும் உள்ள உறவு அவ்வளவே!" அட... கட் அண்ட் ரைட் சுந்தரம்!

# காதோடு

பிரகாசமாக ஒளி வீசும் மும்பை நடிகை
றார்கள் திரையுலகினர். நீண்ட இடைவெளிக்கு
படத்தில் நடிக்க அந்த நடிகையை அணுகின
இல்லை என்று போனை வைத்துவிட்டாராம்.
இந்த நிலைமை என்றால் நம் நிலைமை?
ஹீரோக்கள்.

உலக அழகியுடன் எல்லாம் நடித்த 'தமிழ்
என்ன பண நெருக்கடியோ? வெளியில் வட்டி
கிறாராம். புதிய வீடு கட்டியதில் ஏற்பட்ட பண
றார்கள்.

திரையுலக மறுபக்கம் 233
தமிழ்நாட்டிலிருந்து மயன்

## நட்சத்திரக் குடும்பத்தின் சேவை

இலங்கை தலைநகர் கொழும்பில் சமீபத்தில் நடிகர் திலகத்துக்குப் புகழாஞ்சலி நடத்தினார்கள். தமிழ் திரையுலகின் முன்னணி நட்சத்திரங்கள் பலரும் கலந்துகொண்ட இந்த விழாவுக்கென நட்சத்திரக் குடும்பத்தின் வாரிசுகள் மூவரும் கொழும்பு சென்றிருந்தனர். முன்னால் நிகழ்ச்சியில் பிள்ளைகள் மூவரும் மின்னாமல் ...டிப் பார்த்ததில் கொழும்பு ஹோட்டல்களில் பல பெரும் புள்ளிகளுக்கு விருந்து வைக்கவே நட்சத்திர வாரிசுகள் இலங்கை சென்றதாக அறியக் கிடைத்தது. அப்பா, அம்மாவின் ஆசீர்வாதத்துடன் ...க்கிய புள்ளிகளைக் குளிரவைப்பதில் பிரபலமான இந்த நட்சத்திர வாரிசுகள் இலங்கை வர்த்தகர்கள் சிலருக்குச் செய்த ஒரு நாள் சேவையில் அந்த வியாபாரிகள் மதி கலங்கிப்போய் ...ப்போது அடிக்கடி தமிழகம் சென்றுவருவதாகத் தகவல்.

கொழும்பில் கௌரவமான பாத்திரங்களாகத் தங்களை அடையாளப்படுத்திக்கொண்டிருக்கும் ஒரு நடுத்தர வயது ...பல வர்த்தகர் இரண்டு வாரங்களுக்கு முன்னர் சென்னை சென்று நட்சத்திரக் குடும்பத்தின் தாய்க்குலத்திற்குத் தகவல் அனுப்பினார். அவர் கேட்டது போலவே 'இரண்டாவது பிள்ளையை' அண்ணா நகரில் உள்ள ஹோட்டலுக்கு அனுப்பி வைத்தார் தாய்க்குலம். கொழும்பில் கிடைத்த அற்புதங்களை' மீண்டும் ரசிக்கும் ஆவலுடன் ஹோட்டல் அறையில் காத்திருந்தார் வர்த்தகர். கதவைத் தட்டிக் கொண்டு உள்ளே நுழைந்த 'இளம் சிட்டுவிற்கு' பங்கா...வின் வயதைக் கிரகித்ததும் சற்று சங்கடமாக இருந்து. ஆனால் 'சிட்டு' எதிர்பார்த்ததைவிட ஆள் படு ...டாக இருந்தார்.

இலங்கையில் காணக் கிடைக்காத எதுவும் இருக்கிறதா என்று 'நடிகையை' அக்குவேறு ஆணிவேறாகத் துளாவித் தேடியவர் தனது வித்தைகள் ...மொத்தத்தையும் காட்டத் தொடங்கினார் நடிகையும் ...ந்த விடயத்தில் சளைத்தவரல்ல. பல இளம் ...ஹீரோக்களையே தனது 'மாராப்பு சொர்க்கத்தில்' ...சகத் திளைக்க வைத்தவர். கொழும்பிலிருந்து ...யோனம் ஏறிச் சென்னை சென்றவர் தனது ...ர்வதேசப் பணைப் பெற்றுக் கொண்டு ...நாளே திரும்பிவிட்டார். அடிக்கடி ...லங்கை வந்து தன்னைக் கவனித்தால் ...ரளமாக அள்ளி இறைக்கத் தயாராக ...ருப்பதாக நடிகையிடம் கூறிவிட்டுத்தான் ...சன்றிருக்கிறார். வாரிசுகள் மீண்டும் ...ப்போது கொழும்புக்குப் பயணம்!


அம்சவிர்தன்-சுஸ்மா
படம்: மானசீகக் காதல்

## நடிகைகளின் தற்கொலையைத் தடுக்க புதிய சங்கம்!

தற்கொலை செய்துகொள்ளும் நடிகைகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகிக்கொண்டிருக்க, இவற்றைத் தடுத்து நிறுத்தும் நோக்கில் புது அமைப்புக்களை உருவாக்க முடிவு செய்திருக்கிறார்கள் சில முன்னாள் நடிகைகள். நடிகைகளுக்கு எதிராகப் பாலியல் குற்றங்களைச் செய்பவர்களை அழைத்துப் பஞ்சாயத்துச் செய்யவென்றே ஒரு அமைப்பை உருவாக்கும் ஐடியாவில் இருக்கிறார் பழைய நடிகை ஜெயசுதா. குஷ்பு, ரேவதி போன்ற நடிகைகளும் தனி அமைப்பொன்றை ஏற்படுத்தப் போகிறார்களாம்.

இந்த அமைப்பின் வேலை பலவீனமான இதயம் கொண்ட நடிகைகளை அழைத்துத் தைரியமூட்டுவது தான். இதுமட்டுமில்லாமல் நடிகர் சங்கம் சார்பில் மனநல மருத்துவர்கள், சமூகத்தின் முக்கிய பிரமுகர்கள் கொண்ட அமைப்பொன்றை ஏற்படுத்தி மாதமொரு முறை நடிகைகளுக்கு கவுன்ஸிலிங் நடைபெறவிருக்கிறதாம். எல்லாம் ஓகே! மாதத்திற்கொரு முறை நடக்கும் சங்கக் கூட்டத்திற்கே பல நடிக, நடிகைகள் வருவதில்லையே! அப்படியிருக்க இதுபோன்ற கவுன்ஸிலிங்கிற்குத் தவறாமல் வருவார்களா நடிகைகள்?

## தயாரிப்பாளராக பத்திரிகையாளர்

மும்பை தயாரிப்பாளர் விக்கிரம் சிங்கைத் தொடர்ந்து மம்முட்டி-ரவீனா டாண்டன் ஜோடியுடன் "மஜ்னு" புகழ் ரிங்கிகன்னாவும் ஜோடி சேரும் புதிய படத்தை மும்பை பத்திரிகையாளரான அனீஷ் தயாரிக்க உள்ளார்.

முகப்பில்
மாதவன்
பிரபு

## ...தினி சினி

★ இதுவரை தமிழில் மட்டுமே நடித்து வந்த சத்ய... இப்போது மலையாளப் படம் ஒன்றில் நடிக்கிறார். ...ஜோடு ஹீரோவாக சுரேஷ் கோபி நடிக்கிறார்.

★ ரஜனி நடித்த 'அன்புக்கு நான் அடிமை', ...கா' உட்பட பல படங்களில் நடித்தவர் கராத்தே ...ணி. இவரது மகன் ராஜகுமார் நடிகை ஐஸ்வர்யாவை ...ரண்டு வருடங்களாகக் காதலித்து இப்போது கைப் ...டித்திருக்கிறார். இவர் விஜயகாந்த் நடித்த 'தவசி' ...த்தில் நாஸர் மகனாக நடித்தவர். தற்போது 'கோவில் ...பட்டி வீரலட்சுமி' படத்தில் சிம்ரனுக்கு சகோதரனாக நடிக்கிறார். இவர் தயாரிப்பாளர் ஞானவேலின் உறவினர்.

★ கவிஞர் வாலி 'பாபா' படப்பிடிப்புத் தளத்துக்குச் சென்றபோது அனுமதி பேட்ஜ் இல்லாததால் உள்ளே விட மறுத்தனர். வாலி பயங்கர டென்ஷனாகி விட்டாராம்.

★ 'பொன்னியின் செல்வன்' தொடரில் நடிக்க இஷா கோபிகரை அணுகினார்கள். சம்பளமாகப் பெரிய தொகை கேட்க, ஆளைவிடு தாயே என்று வந்து விட்டனர்.

★ ஸ்ரீகாந்திடம் கால்ஷீட் கேட்டார் எஸ்.ஏ.சந்திரசேகரன். அவர் கால்ஷீட் கிடைக்காததால் அருண்குமாரை வைத்து படத்தை இயக்குகிறார்.

★ இன்னொரு ஹீரோவுடன் நடிப்பதில்லை என்ற முடிவில் இருந்த அப்பாஸ் 'த்ரீ ரோஸஸ்' படத்தில் லைலாவுக்கு ஜோடியாக நடிக்கிறார். ரம்பாவுக்கா இந்த காம்ப்ரமைஸ்!

★ சிறிய வேடம் என்றாலும் வரும் வாய்ப்பை நழுவவிடாமல் பார்த்துக்கொள்கிறார் சங்கவி.

★ பஞ்ச தந்திரம் படத்தில் ஐந்து ஹீரோக்களில் ஒருவராக நடிக்கும் ஸ்ரீமன் இனி ஹீரோவாக மட்டுமே நடிப்பேன் என்கிறார்.


...ர்-சிம்ரன்
...ட்புக்காக


அர்ஜுன்-மும்தாஜ்
சங்கவி

## அம்மு

ராஜி பிலிம்ஸ் என்னும் புதிய பட நிறுவனத்தினர், 'அம்மு' என்ற பெயரில் ஒரு புதிய படம் தயாரிக்கிறார்கள்.

இந்தப் படத்தின் கதைப்படி, கதாநாயகி அம்மு, மிக மிக அழகான பெண். அந்த கதா பாத்திரத்துக்குப் பொருத்தமான புதுமுக நடிகையைத் தேடி வந்தார்கள். படத்தின் திரைக்கதையை தயார் செய்துவிட்டு, தேவா இசையில் 5 பாடல்களையும் பதிவு செய்தார்கள்.

தயாரிப்பாளர் சிவகங்கை ஏ.காருப்பையாவும், டைரக்டர் வேல்முருகனும் 3 மாதங்களாக கதாநாயகி வேட்டை நடத்தினார்கள்.

கடைசியாக, பஞ்சாபைச் சேர்ந்த 'சிந்தூரி' என்ற 16 வயது அழகி சிக்கினார். சிந்தூரி 5.6 அடி உயரத்தில் பானுப்பிரியாவின் சாயலில் இருக்கிறார்.

## ...சொல்லுகிறோம்

...ரொம்பத்தான் திமிர் என்கி... ஆரம்பித்த இரண்டெழுத்து ... உச்ச நட்சத்திரம். கால்ஷீட் ...டக் கேட்காமல், அவருக்கே ... பழகுகிறார்கள் மற்ற...

... அவர். அவருக்கு இப்போது ...கோடி கடன் வாங்கியிருக் ...கபடிதான் காரணம் என்கி...

முன்னாள் கதாநாயகிகள் இருவருக்கும் இடையில் சக்களத்தி சண்டை உச்சத்தில் இருக்கிறதாம். காதல் கணவரைப் பிரிந்து இருக்கும் அந்த மூன்றெழுத்து முன்னாள் கதாநாயகி, இரண்டெழுத்து முன்னாள் நாயகியின் கணவரைத் தன் கைக்குள் போட்டுக்கொண்டதுதான் சண்டைக்குக் காரணம்! 'பாட்டி புகழ்' பழம் பெரும் நடிகை பஞ்சாயத்துப் பண்ணிவருகிறார் என்பது லேட்டஸ்ட் செய்தி.

## எதிர்பார்க்கிறேன்!

மலர்களில் கசியும் தேனின் மணத்திலும்
நிலவினில் தெரியும் கறையின் வடிவிலும்
காண்கின்றேன் என் காதலின் உருவத்தை!

முத்துக்கள் இரத்தினங்கள்
மூழ்கும் பந்த, பாசங்கள்
பணத்தில் இறக்கும் பகல்கள்
சந்திரனை மறைக்கும் -ஆனால்
என் காதலின் உருவம் மட்டும் அழியாது!

இமைகள் துடிக்கின்றன கண்கள்
அழுகின்றன
உதடுகள் சிரிக்கின்றன காடுகள்
அதிர்கின்றன
கடலலைகள் ஒன்று சேருகின்றன
பேரிடியாய் இதயத்தில் வீழ்கின்றன -
அதற்குள்
என் காதலைப் பாதுகாக்கின்றேன்!

விழிகள் புறத்தே திரும்புகின்றன
உயிரணுக்கள் அகத்தே துடிக்கின்றன
ஆத்மா சிறிது சிறிதாக அழிகின்றது -
ஆனால்
என் காதல் மட்டும் வளர்கின்றது!

தினம் குத்துகின்றாய் கண்களிலே
மருந்திடுகின்றாய் கால் பாதத்திலே
தினமும் துடிக்கிறேன், அழுகிறேன்
மரணத்தின் வாயிலில் நிற்கிறேன்
மாற்றங்கள் உனக்குள் வருமா சகியே -
அதையே
நான் எதிர்பார்க்கின்றேன்!

ரி. தனுஷன், மட்டக்களப்பு.

## காதலின் விடியல்...

"எழுந்திருடா!
உன்னை யாரோ...
தேடுகிறார்கள்"

சூரியனை மேலே
தூக்கிப் பிடித்துக்கொண்டு
கிழக்கு வானம்

"ஸ்... யாரிடமும் -என்னைக்
காட்டிக்கொடுத்திடாதே!"
எங்கோ
சந்து பொந்துகளில்
ஓடி ஒளியும்
இரவு

"விரைவாகக்
கடைக் கதவைத் திறவடி!
சூடாகக் கொஞ்சம்
தேனீர் குடிக்கலாம்!"
பூக்களைக்
கெஞ்சும் வண்டுகள்!

"உன் படுக்கையை
விட்டுப்போக -எனக்கு
இஷ்டமில்லையடி!"
புல்லிடம்
சிணுங்கும் பனித்துளி!

தாயின் வயிற்றுக்குள்
இருந்து கொண்டே...
தலைநீட்டும் குஞ்சாக...
மெதுவாய்
போர்வை விலக்கும்
நான்!

"எங்கே..!
இன்னும் என்னுடைய
பஸ்ஸைக் காணவில்லை"

உன் வீட்டு
வாயிலில் -என்
வருகைக்காக ஏங்கும்
நீ!

"எந்த பஸ்ஸில்
ஏறினாலும் போக்கிடம்
போனால் சரிதான்!"

எப்போதும் போல -நம்
காதலுக்கும் எதிரியாய்
குரல் கொடுக்கும் -உன்
அப்பா!

சம்பூர் எம். வதனரூபன்.

## நானும் விக்கிர மாதித்தன்



அன்பே!
நீ
மௌனம் எனும்
முருங்கை மரம்
ஏறிக்கொள்ளும்
போதெல்லாம்
நான்
விகாரமாதித்தன்
ஆகின்றேன்!

எஸ். பாரத்,
முரசுமோட்டை.

## தேன்கிண்ணம்

### சமாதானம் மலருமா இந்த மண்ணில்...

ஆயுதங்களின் வாயினால்
வெளியேறிய குண்டுகளால்
மனித வாழ்வுகளின் ஆயுள்கள்
நிர்ணயிக்கப்பட்ட இந்தப் பூமியில்.

அடையாள அட்டையும்
அரிக்கன் லாம்பும்
மனிதனை இரவில்
அப்பாவியென
அடையாளப்படுத்திய
இந்தப் பூமியில்...

குண்டடிபட்டு மண்டை சிதறி
மனிதர்கள் மறையும்
மரணங்கள் மலிந்திருந்த
இந்தப் பூமியில்...

பாதையில் மனிதக் குருதி
காலை நனைக்க
மனிதன் பிணம் போன்று
நடந்துபோன
இந்தப் பூமியில்...

மயானத்தில்
காகங்களும் நரிகளும்
மனித இறைச்சிக்காக
சண்டையிட்டதைக் கண்டு
கல்லறைகள் சிரித்த
இந்தப் பூமியில்...

மனித உதிரத்தின்
ருசியை உணர்ந்த
தெருவோர நாய்கள் கூட
மனிதரின் நிலைகண்டு
பரிதாபப்பட்ட
இந்தப் பூமியில்...

மண்டையோடுகளும்
எலும்புக்கூடுகளும்
மரணத்தை அடையாளப்படுத்த
தடயமாகக் கிடைத்த
இந்தப் பூமியில்...

கருவிலிருந்து வெளியேறிய
சிசுக்கள் கூட
தாக்குதலின்கொடுமையால்
கருகி மாண்ட
இந்தப் பூமியில்...

மனித மனங்களில்
நம்பிக்கையை உண்டாக்கிய
அந்தச் சமாதானம்
இந்த மண்ணில் மலர்ந்து
இவர்களின் இந்த
அவலங்களுக்கு முடிவு தருமா?

ரீ. குணவர்தன,
களுவாஞ்சிக்குடி.

### காதலைக் கைதியாக்காதே!

நண்பர்களாய் நாம்
கொண்ட நட்பு
இன்று மலர் தூவி
நம் மனதில் காதலை
வரவேற்றது எப்படி?

உன் காதலை நீ
உன் மனதில்
எத்தனை காலமாய்
சிறைவைத்திருந்தாய்?
காதலைக் கைதியாக்கி
ஏன் கொடுமைசெய்தாய்?

உன் காதலை
உன் தூதுவன்
என்னிடம் கூற
ஒரு கணம்
நான் அதிர்ந்தது
உண்மைதான்!

மறுகணம் உன்மீது
நான் கொண்ட
பாசத்தின் வேசம்
மாறிக் காதலாக
உன்னைக் காதலனாக
என் மனம்
ஏற்றுக்கொண்டது...

ஆனாலும், நான்
உனைப் போல்
என் காதலைக்
கூறிவிடத் தூதெதுவும்
தேடவில்லை...

உன்னையே
எதிர்பார்க்கிறேன்
என் முதற் காதலைக்
கூறிவிட...
உன் போல் என்னால்
நம் காதலைக்
கைதியாக்கிக் கொடுமை
செய்ய முடியாது!
சீக்கிரமே வந்துவிடு
நம் காதல்
விடுதலை பெற...

வதனா,
மட்டக்களப்பு.

### உயிரெழுத்துக்களில் என்னவன்!

அகரமான உன் பெயரில்
அன்பு கொண்டேன்!
ஆக்கமான உன் சிந்தனையில்
ஆசை வைத்தேன்!
இனிமையான உன் குரலில்
இன்பம் கொண்டேன்!
ஈகையான உன் குணத்தில்
ஈரம் கண்டேன்!
உறுதியான உன் கொள்கையில்
உண்மை கண்டேன்!
ஊக்கமான உன் உழைப்பில்
ஊராண்மை கண்டேன்!
எச்சம் நிறைந்த உன் வாழ்வில்
எளிமை கண்டேன்!
ஏழ்மையான உன் வாழ்வில்
ஏற்றம் கண்டேன்!
ஐயமற்ற உன் நடத்தையில்
ஐக்கியம் கொண்டேன்!
ஒப்பற்ற உன் எண்ணத்தில்
ஒழுக்கம் கண்டேன்!
ஓங்கும் உன் சுருதியில்
ஓர்மம் கண்டேன்!
ஔவியமான உன் பேச்சில்
ஔடதம் கண்டேன்!

எப். ஹுமைறா,
திவரும்பொல.

### சமாதானம்

பாலைவனமாக மாற்றப்பட்ட
பூமியின் மடிதனில்
மீண்டும் ஒரு தளிர்
துளிர்விடுகின்றது!

அக்கினிக் குழம்பைச்
சுவாசித்த எமக்கு - இன்று
வசந்தத்தினால்
சுவாசம் மலர்கின்றது!

ஆயிரம் கனவுகள்
சுமந்து வந்த வெண்புறா
கண்ணிமைக்கையில்
கண் மறைந்த
கானல்நீர்க் கதைகள்
இனியும் வேண்டாம்!

வல்லூறுகளும்
குள்ளநரிகளின் ஓலமும்
வட்டம் அடித்த
அண்டவெளியில் - இன்று
வானவில்லின் சிரிப்பையும்
வெண்புறாக்களின்
சுதந்திரச் சிறகடிப்பையும்
பார்க்கிறோம்

சித்திரைப் பெண்ணே
நீ கொண்டு வந்த
சமாதானச் செடிகளை
ஈழநாடெங்கும் நாட்டிவிடு
மலர்கள் சொரியட்டும்

இழந்துவிட்டோம்
எல்லாவற்றையும்
இனியும் இழப்பதற்கு
எம்மிடம் எதுவுமில்லை

ஈழதேசத்திற்கும்
பாரதநாட்டிற்கும்
பாலம் அமைக்க
முயல்பவர்களே!
நல்லூர்
கண்ணம்மா வீட்டினதும்
நாத்தாண்டிய
சுனந்தா வீட்டினதும்
ஜன்னல்களைத்
திறந்துவிடுங்கள்!

நா. தாசன்,
கோளாவில்.

### முரண்பாடு

நீண்டகாலமாய் உன்
நெஞ்சம் பிளந்து கிடப்பதை
யார் அறிவர்?


சுவர்க்கத்தின் நிலவுகளில்
புனிதமானவர்களில்...
நீயும் ஒருத்தி

ஆனால் நானோ துருப்பிடித்த
கூடாரத்தில் வாழும்
அபாக்கியமானவர்களில்
நானும் ஒருவன்


இது பற்றி சிந்தித்து சிந்தித்து
எனது நெஞ்சம் பிழந்து
கிடப்பதை
நீ அறிவாயா.

கவிவேந்தன்.

## பேனா நண்பர்கள்



பெயர்:
வை. பேரின்பநாயகம்
வயது: 20
முகவரி: இல. 134,
நாவல வீதி,
நுகேகொடை.
பொழுது போக்கு:
பத்திரிகை, வானொலி.



பெயர்:
அப்துல் நஸீர்
வயது: --
முகவரி: இல. 300
திருஞான சம்பந்தர் வீதி,
திருகோணமலை.
பொழுது போக்கு:
வழமையானவை.



பெயர்: தர்ஷன்
வயது: 20
முகவரி:
6 RUE DU CHEMIN DU FER
93800 EPINAY SUR SEINE
FRANCE.
பொழுது போக்கு:
பேனா நட்பு, கவிதை.

## கவனி நில் முன்னேறு

நம்முடைய வாழ்க்கையில் முடியாது என்பது இல்லை. திறமை, அறிவு, ஆற்றல், அனுபவம் ஆகியவை எல்லாம் நம்மிடம் இருக்கும்போது எப்படி முடியாமல் போகும்? ஒவ்வொரு செயலையும் வெற்றியுடன் முடிக்க முடியும் என்பதனால்தான் மட்டும் முடியாதா என்ன? கட்டாயம் முடியும்!

நாம் ஒவ்வொரு காரியத்தையும் முடிக்க முடியும் என்பதனால்தான் மனிதனாகப் பிறந்திருக்கிறோம். இதனால்தான் அலெக்ஸாண்டர் உலகத்தையே ஒரு நாடாக்க முடியும் என்று போருக்குப் புறப்பட்டார்.

முடியும் என்பதுதான் வாழ்க்கையின் அத்திவாரம். எந்தக் கட்டடத்தையும் அத்திவாரம் இல்லாமல் கட்ட முடியாது. மனிதனே உயிரினங்களில் சிறந்தவன். அந்தச் சிறப்பைத் தருவது முடியும் என்ற திறன்தான் என்கிறார் அரிஸ்டோட்டல்.

நிச்சயம் நம்மிடம் ஆற்றல் உண்டு.

### முயற்சியே வாழ்வின் மூச்சு!

அன்பால் உலகத்தை வென்றுவிட முடியும் என்று வாழ்ந்த இயேசு உலகத்தை வென்று விட்டாரே! அகிம்சையால் சுதந்திரம் பெற்றுவிட இயலும் என்று சொன்ன காந்திஜீ அதனைப் பெற்றுவிட்டாரே!

அடிமை முறையை ஒழித்தே தீருவது என்று சபதம் போட்ட லிங்கன் அதனை அறவே ஒழித்துவிட்டாரே! சகோதரத்துவத்தை உலகில் ஏற்படுத்திக் காட்ட முடியும் என்று ஒரே நிலையில் நின்ற முகமது நபி அதனை நிலைநாட்டினாரே!

இவையெல்லாம் எதனைக் காட்டுகின்றது? உலகில் வாழ்ந்தவர்கள் என்பதைத் தானே! எல்லோருமே முடியும் என்ற உறுதியுடன் செயலாற்றினார்கள். இவர்களால் மட்டும் முடியும் போது நம்மால் எப்படி முடியாமல் போகும்?

அன்று மட்டுமல்ல! அவ்வளவு ஏன்? இன்று எம்முடன் வாழ்ந்து கொண்டிருப்பவர்களும் முடியும் என்ற வெற்றிப் பாதையில் நடந்து கொண்டிருக்கும்பொழுது, நம்மால் அதனைச் சரியானபடி பயன்படுத்தினால் எங்கும், எதிலும் எப்பொழுதும் வெற்றிபெற முடியும். முடியாது என்பது நமக்கு அல்ல! இறந்துபோனவர்களுக்காகக் கூறப்பட்ட வார்த்தை அது.

நாம் உயிருடன் உன்னதமாக உலாவிக்கொண்டிருக்கும்போது முடியாது என்று கூறக்கூடாது. நம்மால் நன்றாகப் பேசவும், படிக்கவும், சாப்பிடவும், சிந்திக்கவும், செயலாற்றவும் முடியும்.

நம்மாலும் நன்றாக வாழமுடியும் என்ற உறுதிதான் உயர்வைத் தரும்.

இது சாதாரண காரியம் போலத் தோன்றினாலும் அதனுள் அடங்கியுள்ள அர்த்தங்கள் அனேகம். மிகவும் சிறிய விதை பெரிய ஆலமரமாக வளர்ந்து விழுதுகளை விட்டு ஓங்காரமாக நிற்பதுபோல், முடியும் என்ற உறுதியை உள்ளத்தில் விதைத்து விட்டால் வெற்றிகரமான ஆலவிருட்சமாக வளர்ந்து பலருக்கும் பயனாக அமையும்.

## கவிதை நெஞ்சங்களுக்கு!

தமிழகத்தில் அம்பத்தூர் தொழிற்பேட்டையில் கடைச்சல் இயந்திரத் தொழிலாளியாகப் பணி புரியும் ஆ. சுப்பிரமணியன் தேர்ந்த ஒரு கவிஞர். இவ்வாரச் சிறப்புக் கவிதையாக அவரது மூன்று கவிதைகள்.

### பசியுடன் சில வினாக்கள்

பசியுடன் படுத்துக்
கொள்வோம்
என அழுகுரலிடும்
அன்பானவளே

கறையான்கள் அரித்துச்
சேதப்படுத்திய
பழைய புல்லாங்குழலின் சுரம்
பாடுமோ
நம் துயரம்-

துஷ்டி வீட்டின் பெண்களுக்கு
வயிறுகள் கூடத்
தேம்பியழும்...
அந்தப் பசியை-
எந்தப் பசியில்
சேர்த்துக்கொள்ள.

அன்றை அன்றைக்கான உணவை
தருவதாய் வேண்டுதலின்
கடைசிக் குரலும்
ஈன ஸ்தாயியில்
உதிர்ந்தாயிற்று.

"கனவான்களே..."
காதில் விழலியோ
எங்கள் முறையீடும்-

ஆனாலும்,
வயிறுகள் அற்றுப்
பிறந்த குழந்தைக்கு
பசியைப் போதிக்க-
எங்களுக்கும் தெரியவில்லை

பால் வற்றிப்போன
மார்பகங்களில்
கண்ணீர் வடியும்
காலத்துக்கு என்ன பெயரிட?

### புலரியின் மௌனம்

ஒருநாள்
உயிர்த்துத் துளிர்த்தேன்

கருணையற்ற
என் நிழலும்
வெக்கையாக

நின்று யோசிக்கையில்
பூமியின் வயிறு
அகழியாக்கி
புதைத்தது என்னை-

எப்படியும்
மீளுதல் ஒரு மூச்சாய்
உட்கொண்டு
எழுந்தேன்

மூளைக்குள் புகுந்த
சூரியன்
புழுவாய் குடைய

சலனங்கள்
கோலிகளாய் உருட்டி
விழுந்தோம்
தோற்புகளின் பள்ளத்தில்

அலறிய நான்
இருள் மையத்துள்
அச்சாய் பொருந்திக்கொள்ள
மௌனமாய் வியாபித்தது
இரவின் துயர்க்கோடு

உறக்கம் கலைந்த
புலரியோ
மனித எந்திரத்தில் நசுங்கி
தன் உரு
அழிந்து போயிற்று
புலராமல்

### சிறப்புக் கவிதை

### உள்ளும் வெளியும்

ஒவ்வொருவரிலும்
ஒருவர் கலப்பது அரிதாயிற்று

வெறுமனே கூடி
மகிழ்ந்து
துக்கித்து
பிரிந்து செல்கையில்
நாவுகள் உச்சரிக்கின்றன
"நடிப்பின்
வாழ்க்கை
அதிசயம் எல்லாமும்" என

கடலினுள்
நதி கலக்கும்
சூட்சுமம்தான்
மனிதர் அறிவரோ

ஒவ்வொருவரிலும்
சோர்வு அலைக்கழித்து
எங்கோ
ஓர் மூலையில்
"தான்" என ஒதுங்கையில்

நிழலாய்க் கரைந்து
இளைப்பாற...
சூரியன் புன்னகைக்கும்

புணர்ச்சி இயக்கமாய்
கூடிக் கலந்து
கலந்து பிரிந்து
ஒன்றும் இல்லாததாய் ஆகி

ஒன்றில்
இன்னொன்று உருக்கொள்ள
நம் ஜீவன்களின் துடிப்பில்
விதிகளின் காய்கள் நகர்த்தி
நகர்ந்தோம்

நீங்களும்
நாங்களும்
நாம்களாய் விரிந்தும்

எல்லையற்றதோர் பிருமாண்டம்
ஒவ்வொருவரிலும் சுருங்க...
சூன்ய மையத்துள் இறுகினோம்

கருவறையின்
நம் அழுகை
உருண்டு திரண்டு
யுகங்களின் பந்தாய்
சுருட்டி எறிந்தோம்

எப்படிக் கலந்தோம்
எப்படிப் பிரிந்தோம்
என அறியாது.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## உயிருக்குள் உயிரைச் சுமந்துகொண்டு...



- கர்ப்பிணிகள், வேகமாக வளரும் கருவின் வளர்ச்சியின் தேவைக்குத் தகுந்தபடி அதிக உணவை உட்கொள்ள வேண்டும்.
- வழக்கமாக வீட்டில் உண்ணும் உணவையே சாப்பிடலாம் என்றாலும் பலவிதமான சத்துக்களும் அடங்கிய உணவாக இருக்க வேண்டியது அவசியம்.
- உயிருக்குள் உயிரை வளர்க்கிறோம் என்பதற்காக இரண்டு உயிருக்கும் சேர்த்துச் சாப்பிட வேண்டும் என்ற கட்டாயமில்லை. எவ்வளவு அதிகமாகச் சாப்பிடுகிறோம் என்பது முக்கியமில்லை. எவ்வளவு சத்துள்ள உணவு என்பதே முக்கியம்.
- ஒரே நேரத்தில் அதிகமாகச் சாப்பிட முடியவில்லை என்றாலும், சிறுகச் சிறுகப் பன்முறை உண்டு உயிர்ச்சத்துக்கள் அனைத்தையும் பெறவேண்டும்.
- முதல் மூன்று மாதங்களில் தொல்லை தரும் மசக்கை, அதிகாலையில் வெறும் வயிற்றில்தான் தன் களியாட்டத்தை ஆரம்பிக்கும். ஆதலால் படுக்கையிலிருந்து எழுந்திருக்கும் முன்னரே இட்லி, மெதுரொட்டி, பால், பிஸ்கட் போன்ற ஏதாவது மிருதுவான சிற்றுண்டியைச் சிறிய அளவிலேனும் உண்டு, கொஞ்ச நேரம் ஓய்வெடுத்த தன் பின் எழுந்தால் நல்லது.
- நாமுண்ணும் உணவில் மா, புரதம், கொழுப்பு, ஊட்டச்சத்துக்கள் மற்றும் பலவகை கனிமச்சத்துக்கள் என ஐந்து வகைகளாகப் பிரித்திருக்கிறார்கள்.
- அரிசி, கோதுமை, கம்பு, சோளம் ஆகிய தானியங்களில் அதிகமாக உள்ளது மாச்சத்தே!
- கடலை, பருப்பு, பட்டாணி போன்ற தானியங்களிலும், உருளைக் கிழங்கு, மரவள்ளிக்கிழங்கு, சீனிக் கிழங்கு போன்ற கிழங்கு வகைகளிலும் வாழைப்பழம், மாம்பழம் போன்ற பழங்களிலும் மாப்பொருள் உள்ளது.
- செல் வளர்ச்சிக்குப் புரதச் சத்தும் இன்றியமையாதது. உடலில் இரசாயன வேலைப்பாடுகளுக்குக் காரணமாகவிருக்கும் புரதப் பொருள் முக்கியம். மீன், கல்லீரல், இறைச்சி, முட்டை ஆகிய உணவுப் பொருட்களிலிருந்து கிடைக்கும் புரதத்தை விலங்குப் புரதம் என்பார்கள்.
- சோயா பீன்ஸ், வேர்க்கடலை, முந்திரிப்பருப்பு, பயறுவகைகள், பருப்பு, கடலை முதலியவற்றிலிருக்கும் புரதத்தைத் தாவர புரதம் என்பார்கள். இவ்விரண்டு புரதத்திலும் விலங்குப் புரதம் முதல் தரமானது. தாவரப் புரதத்தைவிடச் சிறந்தது. எளிதில் ஜீரணமாகும். குழந்தைகள், கர்ப்பிணிகள், பாலுட்டும் தாய்மார்கள் ஆகியோர் உணவில் அதிகம் சேர்த்துக் கொள்வது நல்லது.


## செல்வாஸின் சல்வார் பரிசுப் போட்டி



நவநாகரீக மங்கையர்
தரமான சல்வார்களுக்கு
தலைநகரில் நாடும் ஒரே இடம்

SELVAS

No. 4, Nelson Place (Near H.N.B)
Wellawatta, Colombo-06. Tel: 552328

மகளிர் மட்டும் : மகளிர் மட்டும்

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே சல்வார் பரிசு வழங்கப்படும்.
★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்** R

பெயர்:.............................
முகவரி:.............................
.............................
தொழில்:.............................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப்படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 18- 05-2002

அனுப்பவேண்டிய முகவரி:- 'செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## இந்த வாரம் யாருக்கு சல்வார்? கெகிராவ வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் சல்வார் பரிசுபெறும் வாசகி இவர்தான்

ஆர். லெட்சுமி,
யகல்ல வீதி, 2ம் ஒழுங்கை, கெகிராவ.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


"அவன் பணம்கூட வேண்டாம். ஆளைவிட்டா சரி. இனிமே அவன் சங்கதியே வேண்டாம். கெட்ட சொப்பனம் போல நினைச்சு, தொலைச்சு தலைமுழுகிட்டு, அபிராமி அந்தாதி சொல்லிட்டு, காலைச் சுத்தின சனியனைக் கழட்டி எறியறாப்பல எறி!"

"அனிதாவை நாம அழைச்சுண்டு போய்டலாம் சுகந்தி. ஜில்பாய்குரில இப்ப குளுகுளுன்னு இருக்கும்" என்ற ராஜாராமன், "என்ன சுகந்தி?" என்று கேட்டார்.

சுகந்தி "ஆமாம், அதான் சரி!" என்றாள்.

அனிதா அவளை வெற்றுப் பார்வை பார்க்க... "ஜில்பாய்குரிக்கு வரயா... நாளைக்கு அத்திம்பேர் ரிசர்வேஷன் பண்ணப் போறார்"

"வரேன்" என்று தலையாட்டினாள் அனிதா.

"அவளுக்கும் ஒரு சேஞ்ச் வேணுமோல்லியோ?" என்றார் ராஜாராமன்.

"அங்கெல்லாம் வெள்ளம்னு போட்டிருந்தான் பேப்பர்ல!"" என்றான் சீதா.

சித்த எல்லோரும் சும்மாருங்கோ. அவளைப் போட்டுக் குழப்பாதீங்கோ..." என்று மகாதேவன் அதட்ட... அறையில் தனியா விடப்பட்டாள்.

சாயங்காலம் மல்லிகாவும், விஸ்வநாதனும் வந்திருந்தார்கள். சீதாராமன் இல்லாததால் அனிதாவை வந்து சந்தித்தார்கள். வைரவனின் விவகாரத்தைப் பற்றி விஸ்வநாதன் ஏதும் பேசவேயில்லை. டி.டி.கே சாலையில் இருக்கும் சபாவில் அவன் ஒரு மணி நேரம் கிதார் வாசிக்கப் போவதாகவும், அதற்கு அனிதா வந்தால் தான் மிகவும் சந்தோஷப்படுவேன் என்றும் சொன்னான்.

மல்லிகா மிகவும் வற்புறுத்த, சும்மா இருட்டில் உட்கார்ந்திருந்து அலுத்ததால் அனிதா வரச் சம்மதித்தாள்.

ஏர்கண்டிஷன் செய்யப்பட்ட ஹாலில் சுமார் முந்நூறு பேர் காத்திருந்தார்கள். விஸ்வநாதன் சின்ன ஸ்டூல் போட்டு அதில் உட்கார்ந்து கொண்டு, கிதாரை முழங்காலால் தாங்கி கர்னாடக சங்கீதம் வாசித்தான். அவ்வப்போது "காட்" நிரல்களுடன் கொஞ்சம் வீணை போலவும் மிகவும் சுருதியுடன் இணைந்து காதுக்கு இனிமையாக, அனிதாவுக்குச் சமீபகாலமாகக் குழப்பத்தின் மத்தியில் ஒரே ஒரு நிம்மதித் தீவாக இருந்தது.

கச்சேரி முடிந்ததும் வெளியில் உட்கார்ந்து கொண்டு, வானத்தின் கீழ் அடுப்பு போட்ட இடத்தில் சுடச்சுட மசால் தோசை ஆர்டர் செய்தாள் மல்லிகா.

"கச்சேரி உனக்குப் பிடிச்சிருந்ததா அனிதா?"

"நல்லா வாசிக்கிறார். ஆனா, நான் இருக்கிற மூடுல ரசிக்க முடியலை மல்லிகா!"

"அனிதா, எனக்கு உன் மன சஞ்சலம் தெரியும். நிம்மதி தரத்தான் இந்தக் கச்சேரிக்கு அழைச்சிட்டு வந்தேன் அனிதா. விசுவும் நானும் ஒரு வாரம் கன்ஸர்ட் டூர் மாதிரிப் போறோம் ஒரு ஜாஸ் க்ரூப்போட! நீயும் வர்றியா?"

"இல்லை மல்லிகா. எனக்கு அதெல்லாம் தெரியாது."

"சும்மா ஒரு சேஞ்சுக்கு..."

இதற்குள் விஸ்வநாதன் அவர்களுடன் வந்து சேர்ந்து கொள்ள...

"எப்படி... கச்சேரி புடிச்சிருந்ததா? ரொம்பத் தூரப் பார்வை பார்த்துக்கிட்டிருந்தீங்க" என்றான் விஸ்வநாதன்.

"அவளுக்கு மூடு சரியில்லை!" என்றாள் மல்லிகா.

"அந்த விஷயத்தை இவங்க கிட்ட சொல்லிட்டியா மல்ஸ்?"

"இல்லை!" என்ற மல்லிகா, "எக்ஸ்கியூஸ் மீ" என்று சொல்லிவிட்டு, எழுந்து சென்றாள். அது இயல்பாக இருந்தாலும், அவர்கள் இருவரையும் விட்டு வைக்கும் நோக்குடன் அவள் விலகியிருப்பது புரிந்தது.

"நான் உங்ககிட்ட ஒண்ணு கேக்கணும்" என்றாள் அனிதா. அதே சமயம்...

"நான் உங்க கிட்ட ஒண்ணு கேக்கணும்" என்றான் விஸ்வநாதன்.

விஸ்வநாதன், அனிதா இருவரும் ஒரே தருணத்தில் ஒரே கேள்வியைக் கேட்க, அனிதா சங்கடப்பட்டு விஸ்வநாதன் முதலில் பெசக் காத்திருந்தாள்.

"நான் கேக்க வந்தது இது தான் அனிதா... உங்களுக்கு என் உதவி ஏதாவது தேவையிருக்கான்னுதான்!"

"என் குழப்பத்திலிருந்து – சங்கடத்திலிருந்து– எப்படி நான் விடுபட முடியும்னே தெரியலை!"

"சொல்லுங்க" – விஸ்வநாதன்.

"எங்களுக்குக் கலயாணமாகி ஒரு மாசம் கூட ஆகலை. இதுக்குள்ளே இத்தனை பெரிய சிக்கல். பார்க்கப் போனா நான்– கதைலல்லாம்வரா மாதிரி ஜெயில் வாசல்ல காத்திருக்கணும்.... அவருக்கு ஆறுதல் சொல்லணும்... முதல்ல அவரை எங்க வெச்சிருக்கானே எனக்குத் தெரியலை. அவர் செய்த குற்றம் என்னன்னே புரியலை... அதை நீங்க கண்டுபிடிச்சுச் சொல்லமுடியுமா?"

"முயற்சி பண்றேன். சி.பி.ஐ கஸ்டடியில வெச்சிருக்காங்க. அவ்வளவு தான் பேப்பர்ல போட்டிருக்கு"

"சி.பி.ஐ கஸ்டடின்னா என்னன்னே தெரியாத ஜடம் நான்!"

"வைரவன் சம்பந்தப்பட்ட குற்றங்களை விசாரிச்சு அவர் மேல கேஸ் போட சி.பி.ஐ அதிகாரிங்க டயம் கேட்டிருக்காங்க... அவங்களுக்கும் சாட்சி விவரங்களை ஜோடிக்க அவகாசம் தேவைப்படுது!"

"வைரவன் எங்க இருப்பார் இப்ப?"

"கொஞ்சம் டயம் கொடுத்தா அவரை எந்த ஜெயில்ல வெச்சிருக்காங்கன்னு என்னால கண்டு பிடிச்சுச் சொல்லமுடியும்"

"ப்ளீஸ்..."

"அவரைப் பார்க்கணுமா?"

"இல்லை... அவர் என்னை வந்து பார்த்தாச்சு"

"என்ன சொன்னார்?"

"நடந்ததுக்கெல்லாம் வருத்தப்பட்டு, "உனக்கு இப்ப விடுதலை... யு ஆர் ஃப்ரீன்னு சொல்லிட்டுப் போயிட்டார்."

"ஃப்ரீன்னா அர்த்தம் தெரியாம சொல்லியிருக்கார்னு தோணுது!"

"ஏன்?"

"அனிதா... வைரவன் சொல்ற மாதிரி யாரையும் கல்யாணம் பண்ணிக்க உங்களுக்கு இப்ப அனுமதி இருந்தாலும், அந்தக் கல்யாணம் எப்படியிருக்கும். பிற்காலத்தில எத்தனை மனஸ்தாபங்கள் வரும்ங்கறதை யோசிச்சுப் பார்க்கணும்"

"என்னைக் கல்யாணம் பண்ணிக்க ரெண்டு பேர் தயாரா இருக்கா!"

"மூணுபேர்..." என்றான் விஸ்வநாதன்.

"மைகாட்...! நீங்களுமா? என்ன இது... எனக்கு எல்லாமே லேட்டாக் கிடைக்குது. அனுதாபம், காதல் எல்லாம்..."

"அனிதா... உங்க தோற்றத்தில ஏதோ ஒண்ணு இருக்கு. அது என்னன்னு வர்ணிக்க முடியலை. ஏதோ ஆண்ட்ரொஜென், எஸ்ட்ரொஜன் போன்ற ஹார்மோன் பொருத்தம்னு சொல்லலாம். அதும்படி, உங்களைப் பார்த்தவுடனே உங்க கடந்த காலம் என்ன மாதிரியா இருந்தாலும் பரவாயில்லை...






நவீன எழுத்துலக வேந்தன் சுஜாதா

உங்களைக் கல்யாணம் செய்யலாம் போல வற்புறுத்தறது! வைரவன் உங்களைக் கல்யாணம் செய்து கொண்ட வேகத்தைப் பத்தி சீதாராமன் சொல்லியிருக்கார்.... ஆச்சரியமே இல்லை.... அப்படிப்பட்ட அழகுன்னு சொல்லமாட்டேன். ஆனா, அப்படிப்பட்ட பர்ஸனாலிட்டி உங்களுக்கு!"

"இந்தச் சமயத்தில் இந்த வார்த்தைகள்லாம் அர்த்தமில்லாமப் போயிடுத்து!"


"இல்லை அனிதா... தீர்மானம் உங்களுது... ரெண்டு தீர்மானம்! முதல் தீர்மானம், வைரவனுடைய வேண்டுகோளை ஏத்துக்கறது.... அதாவது, முதல் கல்யாணம் என்கிற போலி வாழ்க்கையை விட்டு வெளியவர்றது. இரண்டாவது, கல்யாணம் பண்ணிக்க தீர்மானிக்கறது.. என்னைக் கேட்டா, சீதாராமன் உங்களுக்குப் பொருத்தமில்லை. அவனுக்கு என் தங்கை மல்லிகா தான் சரி! அவங்களோட வாழ்க்கையே பாங்க் பரீட்சை, க்ரெடிட் டெபிட் தான். அப்புறம், அந்த சுரேஷ்– உங்களை அமெரிக்கா மாமியாக்கிடுவான். ஹவுஸ்கோட் போட்டுக்கிட்டு, டிவி பார்த்துக்கிட்டு... இங்க பண்ற சமாசாரங்களைத் தான் அங்க பண்ணுவீங்க. ஆனா, விஸ்வநாதன்– அதாவது அடியேன். என்னோட வாழ்க்கை உங்களுக்கு சுவாரயஸ்யமா இருக்கும். எனக்கு சங்கீதம் தெரியும். பாடுவேன்... கவிதை எழுதுவேன்... உதவாக்கரையா எத்தனை சமாசாரங்கள் வெங்காய உப்புமா செய்வது உள்பட தெரிஞ்சு வெச்சுக்கிட்டு இருக்கேன் தெரியுமா?"

அனிதா லேசாகச் சிரித்தாள்.

[அனிதா வருவாள்...]



> கவிதை மிக நல்ல தேனும் -அக்
> கதைகள் பொய்யென்று தெளிவுறக் கண்டோம்
> புவிதனில் வாழ்நெறி காட்டி -நன்மை
> போதிக்கும் கட்டுக் கதைகள் அவைதாம்.
> -சுப்பிரமணிய பாரதியார்-



## பாப்பா முரசு சிறுகதை

# நட்பின் பலம்

ஒரே வீட்டில் செல்லமாக வளர்க்கப்பட்டாலும் அந்த நாய்க்கும் ஆட்டுக்கும் சுமுகநிலையில்லை. வீட்டு எஜமான் ஆட்டுக்கு இரை போடும் போது நாய் "உர்"ரென்று உற்றுப் பார்க்கும். நாயைத் தடவிவிடும்போது ஆடு கோபமாகக் கால்களால் தரையைப் பிராண்டும்.

வீட்டு எஜமானுக்கு இரண்டு பிராணிகளுக்கும் உள்ள இந்த முறுகல்நிலை தெரியவே செய்யும். ஆனால், அவர் இதுபற்றிக் கண்டுகொள்வதில்லை. "உங்கள் சண்டையில் நான் என்ன செய்ய முடியும்?" என்கிற மாதிரி போய்விடுவார்.

ஒரு நாள் இந்தச் சண்டை உச்சக் கட்டத்தை அடைந்தது. அன்று ஆட்டுக்கு வரவேண்டிய புல் வரவில்லை. நாய்க்கு அன்று விருந்துக்கு மேல் விருந்து. உறவினர்கள் வந்ததில் மீதமிருந்த உணவுப் பொருட்கள் அத்தனையும் நாய்த் தட்டுக்கு வந்ததில் நாய்க்குப் பெருமை பிடிபடவில்லை. அது ஆட்டைப் பார்த்து, "ஆஹா! இன்று எனக்கு நல்ல வேட்டை..." என்றது.

ஆட்டுக்குச் சரியான பசி.அதோடு நாய் வேறு இப்படிச் சொன்னதில் கோபம் தலைக்கேறிவிட்டது. இதனால் ஆடு ஆவேசமாகக் கயிற்றை அறுத்துக்கொண்டு நாய் மீது பாய்ந்தது.

நாய் இந்தத் திடீர்த் தாக்குதலை எதிர்பார்க்கவில்லை. ஆடு முட்டிய வேகத்தில் தலையிலடிபட்டுக் கீழே விழுந்தது நாய்.

ஆனால், விழுந்த வேகத்தில் சிலிர்த்துக்கொண்டு ஆவேசமாக எழுந்தது நாய்.மறுபடி தாக்கத் தயாராக இருந்த ஆட்டைக் கோபத்துடன் பார்த்த நாய், "நண்பனே... ஆத்திரம் அறிவைக் கெடுத்துவிடும். என் பசிநேரத்தில் உன்னிடம் கிண்டல் செய்தது தவறுதான். அதற்காக என்னை இப்படி நீ தாக்கும் அளவுக்குப் பெரிய குற்றம் அல்ல அது" என்றது.

ஆட்டுக்குச் "சொரேர்" என்றது. நாம் தாக்கியும் நம்மைத் திருப்பித் தாக்காத நண்பனிடம் எத்தனை மோசமாக நடந்துகொண்டோம் என்று வெட்கப்பட்டது ஆடு. அந்த வேகத்தில், "என்னை மன்னித்துவிடு நண்பா... உணர்ச்சிவசப்பட்டுவிட்டேன்" என்றது.

அதற்குள் வீட்டு எஜமான் அங்கு வந்தார். நடந்ததைப் புரிந்துகொண்டார். ஆட்டை மறுபடி தொழுவத்தில் கட்டினார். வேகமாகப் புல்கொண்டு வந்து போட வேலையாளுக்கு உத்தரவிட்டார்.

இரண்டு நாட்கள் ஓடிற்று. ஆட்டுக்கு நாயின் பொறுமை மனதைக் குத்திக்கொண்டேயிருந்தது. எனவே நாயிடம் பேசக்கூட அது கூச்சப்பட்டது.

ஆனால், நாய் இயல்பாக இருந்தது. "நண்பா... தவறு என்பதை ஒருவன் புரிந்துகொள்ளும்போதே புனிதனாகிவிடுகிறான்.நீ உனது தவறைத்தான் உணர்ந்து விட்டாயே. பிறகென்ன... சகஜமாகிவிடு. நடந்ததை மற" என்றது நாய்.

ஆட்டால் அப்படி சகஜமாக இருக்க முடியவில்லை. ஒரு வாரம் ஓடிற்று. அன்று நள்ளிரவு தாண்டிய நேரத்தில் இரண்டு திருடர்கள் தொழுவத்தில் நுழைந்தார்கள். அவர்கள் ஏற்படுத்திய சின்ன சலசலப்பில் விழித்துக்கொண்டது ஆடு.

வந்தவர்கள் நாயைக் குறிவைத்து மெல்ல நகர்ந்தார்கள். ஆட்டுக்குப் புரிந்துபோயிற்று. வந்தவர்கள் நாயைத் தாக்கப் போகிறார்கள்.

ஒருவேளை நாயைத் தாக்கிய பிறகு தன்னைக் கடத்திச் செல்வது அவர்களது திட்டமாக இருக்கலாம். உஷாரான ஆடு நாயைக் காப்பாற்றும் விதத்தில், "மே... மே..." என்று கத்தியது. இதனால், ஆத்திரமடைந்த இருவரில் ஒருவன் கையிலிருந்த தடியை வேகமாக ஆட்டை நோக்கி வீசினான்.

இந்த களேபரத்தில் நாய் விழித்துக்கொண்டது. நடந்ததை ஒருநொடியில் புரிந்துகொண்ட நாய், இருவரில் ஒருவனைக் குறிவைத்துத் தாக்கியது. அவன் "ஐயோ அம்மா" என்று அலறிக்கொண்டு ஓட ஆரம்பித்தான்.

ஆடு மட்டும் சும்மாயிருக்குமா? அது கயிற்றை அறுத்துக்கொண்டு இன்னொருவன் மீது பாய்ந்தது. கொம்பால் முட்டித் தள்ளியது.

திடீர் சந்தடி சலசலப்பில் எஜமான் விழித்துக்கொண்டார். தோட்டத்தில் திருடர்கள் புகுந்திருப்பது புரிந்ததும், "திருடன்...திருடன்" என்று கத்திக்கொண்டே கையில் தடியுடன் ஓடிவந்தார்.

ஆனால், சுதாகரித்துக்கொண்ட திருடர்கள் ஓட்டம் பிடித்தனர். எஜமான் திருப்தியுடன் வீட்டுக்குள் நுழைந்து தூங்கப் போனார்.

"நன்றி நண்பா" என்றது நாய்.

"எதற்கு?" கேட்டது ஆடு.

"என் உயிரைக் காப்பாற்றியதற்கு"

"நான் எங்கே உன்னைக் காப்பாற்றினேன்? என்னைத்தான் காப்பாற்றினேன்."

"புரியவில்லை."

"புரியும்படியாகவே சொல்கிறேன் நண்பா... வந்தவர்களுக்கு நான்தான் தேவை. என்னைக் கொண்டுபோக நீ தடையாக இருப்பாய். அதனால் உன்னைத் தாக்கிவிட்டு என்னைத் தூக்கிச் செல்வது அவர்களது திட்டம், உன்னைத்தானே தாக்க வருகிறார்கள் என்று நான் சும்மா இருந்தால், அடுத்த ஆபத்து எனக்குத்தானே!"

"அப்போ நாம் இருவரும் ஒற்றுமையாய் இருந்தால் எந்த ஆபத்தும் நம்மை நெருங்காது இல்லையா?"

"ஆமாம்! ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு"

மறுநாள் காலையில் ஆட்டின் மடியில் நாய் படுத்துக் கிடப்பது கண்டு வீட்டு எஜமான் ஆச்சரியப்பட்டார்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **18.05.2002.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **445**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 443

**பரிசுக்குரியவர்:**
**வர்ஷான்**
கிங்ஸ்ரன் சர்வதேசக் கல்லூரி, முகத்துவாரம், கொழும்பு-15.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| **ச.நிவேதிதா**<br>சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம். | **எஸ்.மாஸ் சாபிஸ்**<br>ஜமாலியா வீதி, திருகோணமலை. |
| **வை.நிதர்ஷன்**<br>பம்புகுளிய, கொச்சிக்கடை. | **கே.எம்.எம்.கியாஸ்**<br>முஸ்லிம் மகா வித்தியாலயம்,இரத்தினபுரி. |
| **ஜெர்மினா வெல்ற்**<br>புனித அந்தோனியார் வீதி, திருகோணமலை. | **வி.ராகுலன்**<br>பரமன் ஐயனார் கோவில் வீதி, அரையம்பதி-01. |
| **பிரகாஷ் மோனிஷா**<br>இலண்டில் தோட்டம், மஸ்கெலியா. | **ஆர்.கமலினி**<br>தமிழ் மகா வித்தியாலயம், வெலிமடை. |
| **எஸ்.கே.ஜனகன்**<br>நலன்புரி நிலையம், நெளுக்குளம், வவுனியா. | **எஸ்.கே.சன்ஜீதா**<br>சன்ஜிதா வத்த, நுரைச்சோலை. |

## விடுகதைகளும் விடைகளும்

01. பட்டை பட்டை நறுக்கி, பதினாறு பட்டை நறுக்கி, முத்துப் பட்டை நறுக்கி, முன்னே வருவாள் ஒருத்தி. அவள் யார்?

02. என் வீட்டுத் தோட்டத்தில் ஒரு அழகான மஞ்சள் குருவி ஊஞ்சலாடுகிறது, அது என்ன?

03. அமாவாசைத் திருடன் எந்த அடர் வெளிச்சத்திலும் அகப்படவே மாட்டான், அவன் யார்?

04. அவன் கறுப்புச் சட்டையாகத்தான் காட்சி கொடுப்பான், காவலுக்கு மிகவும் கெட்டிக்காரன், அவன் யார்?

05. மூடாத தொட்டியில் நீர் எடுக்கும்போது வந்துகொண்டே உள்ளது, அந்தத் தொட்டியின் பெயரென்ன?

06. அம்மா புடைவையை யாராலும் மடிக்க முடியாது, அதுபோல், அப்பா பணத்தை எவராலும் எண்ண முடியாது, அது என்ன?

07. அர்த்த ராத்திரியில் ஆட்டம், அஞ்சாறு பேர் வந்தால் ஓட்டம், அது என்ன?

08. அனைவருக்கும் அடங்காதது, ஆதவனுக்கு மட்டும் அடங்கும், அது என்ன?

09. தன்னை நம்பாத ஒருவன், கூடவே வந்துகொண்டிருக்கிறான், அவன் யார்?

10. வெட்டி வெட்டி எரியும் எங்கள் வீட்டு விளக்கு, அது என்ன?

**விடைகள்**

01. வாழைப்பூ 02. எலுமிச்சம்பழம்
03. நிலவு 04. புட்டு
05. கிணறு
06. வானம்-நட்சத்திரம்
07. மழை 08. குளிர்
09. நிழல் 10. மின்னல்

## கழிவின் பயன்கள்

நிலக்கரியின் கழிவு பார்ப்பதற்கு அருவருப்பானதாக இருக்கும். எனினும் அதைச் சுத்திகரித்தால் வர்த்தக ரீதியிலான பல இரசாயனப் பொருட்கள் கிடைக்கும். இவற்றில் குறிப்பிடத்தக்கவை, உயிர்காக்கும் மருந்துகள், சாயப் பொடிகள், வெடி மருந்துப் பொருட்கள்.




ரொட்டி, ஜாம், ஊறுகாய் போன்றவற்றில் காணப்படும் பச்சை நிறப் பூஞ்சணங்கள் அந்த உணவுப் பொருட்களைக் கெடுத்துவிடும் என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால், இந்தப் பூஞ்சணங்களிலிருந்து பல நோய் எதிர்ப்பு மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. இதில் மிகவும் முக்கியமானது பென்சிலின் மருந்து.

இப்படி நாம் வேண்டாவெறுப்பாக ஒதுக்கும் பொருட்களே நமக்கு உதவியாக அமைவதால் மீதேன் வாயு வாகன எரி பொருளாகவும், கழிவுநீர், தொழிற்சாலைக் கழிவுகளிலிருந்து எடுக்கும் ஈஸ்ட்டுகள் உணவாகவும் பயன்படும் நாள் வெகுதொலைவில் இல்லை. தவிர பூச்சிகள்கூடப் புரதச் சத்துக்காக மனிதனின் உணவுப் பட்டியலில் இடம்பெறலாம்.




## இந்த வாரப் புதிர்


படத்தில் காட்டப்பட்டுள்ள கட்டடத்தில் ஒரு முனையிலிருந்து மறுமுனைக்கு வரவேண்டும். வந்து சேரும்போது வருகிற வழியில் கடந்த எண்களின் கூட்டுத்தொகை 100 ஆக இருக்க வேண்டும். முயன்று பாருங்கள். முடியாதவர்கள் தடுக்கி விழாமல் வரும் வாரம்வரை பொறுத்திருங்கள்.




## அறிவுத்தேடல்




படம்: 1



படம்: 2

**சென்றவாரப் புதிருக்கான விடை**

படம் -1ல் காட்டப்பட்டுள்ளவாறு x அடையாளம் இடப்பட்ட குச்சியை இடம்மாற்றிப் படம் -2ல் காட்டியவாறு வைக்கும்போது கணிதச் சமன்பாடு சரியானதாக அமையும்.

# சபலம்

இப்போதே மணி ஐந்தைத் தாண்டிவிட்டது. இன்னும் ப்ரியாவைக் காணவில்லை. ஆங்கில வகுப்பில் என்ன நடந்ததோ தெரியவில்லையே? இண்டைக்கெண்டு பார்த்து எனக் கிந்தத் தலையிடியும் வந்துதொலைத்து விட்டது. என்னைப் பற்றி ஏதாவது கதைத்திருப்பார்களோ? சீச்சீ... நானென்ன அவ்வளவு பெரியாளா? என்னைப் பற்றிக் கதைக்க!

"கமலினி... கமலினி" வாசலில் யாரோ கூப்பிட்டது கேட்டுத் திடுக்கிட்டு எழுந்த என்னை நோக்கி வந்தாள் ப்ரியா. "என்னடி.. இந்த நேரத்தில அப்படி ஆழமான சிந்தனை? எந்தக் கோட்டையைப் பிடிப்பதாக உத்தேசம்?" என்று கேட்டாள். அவளது கேள்வியைக் காதில் போட்டுக்கொள்ளாமல், எனது மனதிலெழுந்த ஒருவித ஆவலுடன் அவளைப் பார்த்து, "என்ன நடந்தது வகுப்பில்?" என்று கேட்டேன். உண்மையில் "என்னைப் பற்றி ஏதாவது கதைத்தார்களா?" எனக் கேட்க மனது



நினைத்தாலும், மானம் போய்விடும் என்ற காரணத்தினால் கேள்வியை மாற்றிக்கேட்டேன்.

எனது மனதைப் புரிந்தவள் போல் ப்ரியாவும், "முகுந்தன் இப்ப சரியான மோசமடி! இண்டைக்குப் பெடியங்கள் உன் பெயரைச் சொல்லி அவனைக் கேலி பண்ணிக்கொண்டிருக்க, அவன் பேசாமல் சிரித்துக்கொண்டிருக்கிறான்" எனக்கூற, நான் திடுக்கிட்டு, "சீச்சீ... அவன் அப்படியில்லை ப்ரியா. ஏன் தேவையில்லாமல் கதைத்து வதந்திகளை ஊக்குவிப்பான் என்றிருந்திருப்பான் போல." அவளுக்கு அப்படிச் சென்னேனே தவிர, மனது முழுவதும் ஏதோ இனம்புரியாத சந்தோஷம். ப்ரியா வகுப்பில் நடந்த பல விடயங்களைக் கதைத்துவிட்டுச் சென்றாள்.

ப்ரியா போனதிலிருந்து நான் முகுந்தனைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்தேன். முகுந்தன் மிகவும் அமைதியானவன். நன்றாகப் படிப்பான். ஏனைய மாணவர்கள் போல் கேலி பண்ணுவதில்லை. அவனை என் மனதிற்குப் பிடித்திருந்தாலும் என் நண்பிகளிடம் பிடிக்காதமாதிரியே சொல்லிக் கொண்டேன். என் மனம் முழுவதும் அவனிருந்தான். என் மனதை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லையே என்ற சஞ்சலத்தோடு கண்ணயர்ந்தேன்.

அடுத்த நாள் காலை நேரம் பிந்தியே எழும்பினேன். அவசரமாகக் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு பாடசாலைக்குக் கிளம்பினேன். வீதியில் போகும்போது ஒருவரைப் பார்த்தேன். நல்ல அழகு, அமைதி அவரை எனக்குப் பிடித்துக் கொண்டது. அப்போது முகுந்தனின் நினைப்பு கொஞ்சம்கூட வரவில்லை.

பாடசாலைவிட்டு வீடு திரும்பும் போது இன்னொரு அடக்கான, அமைதியான முகம், ஆண்பிள்ளையென்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என நினைத்தேன். வீடு செல்லும்வரை கடைசியாகப் பார்த்தவனே என் மனதிலிருந்தான். என்னறைக்குச் சென்று, கதிரையில் உட்கார்ந்துகொண்டு இதுவரை நடந்த சம்பவங்களைப் பற்றி யோசித்தேன். எனக்கே நானொரு புதிராகத் தோன்றினேன். எனக்கு என்னதான் ஆகிவிட்டது? கடந்த ஒரு வருடமாக வழியில் போறவன், வாறவன் எல்லோரையுமே விரும்பத் தொடங்கியிருந்தேனே. அனேகமாக ஒரு ஆணோ பெண்ணோ ஒருத்தியை அல்லது ஒருவனைத்தான் காதலிப்பர். ஆனால், நானோ ஒரேநாளில் எத்தனை பேரை விரும்புகின்றேன்? என் மனதிற்கு என்னதான் நடந்தது?

"கமலினி..." அம்மாவின் குரல் கேட்டுச் சிந்தனையிலிருந்து மீண்ட நான், அம்மாவிடம் சென்றேன்.

"கமலினி! உனக்கொரு விஷயம் தெரியுமா? அடுத்த தெருவிலுள்ள விமலா யாரோ ஒரு பையனோடு ஓடிவிட்டாளாம்"

"என்ன..? அவளுக்கும் என் வயதெல்லோ?" அதிர்ச்சியுடன் கேட்டேன்.

"ஆமாம் கமலினி! இந்த வயதில் வருவதெல்லாம் காதலென்று தப்பாகக் கணக்குப் போட்டுவிட்டாள். இது வெறும் சபலம்தான் என்பதை வெகு விரைவில் அவள் புரிந்துகொள்வாள்" எனக் கூறிவிட்டு அம்மா சமையலில் ஈடுபட்டாள்.

என் மனதில் ஏதோ தெளிவு ஏற்பட்டதுபோல் ஒருணர்வு ஏற்பட்டது. அறைக்குச் சென்று நிதானமாக யோசித்தேன். அம்மா கூறியதுதான் சரி. எனக்கு எல்லா ஆண்களைக் கண்டதும் பிடித்துப் போனதற்குக் காரணம் இதுவோ? நிச்சயம் இதுவாகத்தான் இருக்கும். ஒருவரை முன் பின் தெரியாது, அவரது குணங்களை அறியாது, வெளித் தோற்றத்தைக் கண்டு மனதில் சஞ்சலமேற்படுவது இந்த சபலபுத்தியால்தான். "கண்டதும் காதல்" என்பது கூடச் சபலம்தானோ? தகுந்த வயது வந்ததும் காதலிப்பது தான் காதலோ? என்னவாக இருந்தாலும் இவ்விளவயதில் என் மனதிலெழுந்த விருப்பங்கள் யாவுமே வெறும் சபலத்தால் வந்ததுதான். சிந்திக்கச் சிந்திக்க என் மனம் தெளிந்த நீரோடையைப்போலானது. மறுநாள் அதிகாலையே எழுந்து, பாடசாலைக்குப் புறப்பட்டேன்.

வீதியில் எத்தனையோ ஆண்களைக் கண்டேன். அனைவரும் என் சகோதரர்களாகவே மனதில் தோன்றினார்கள். என் மனதில் இதுநாள்வரையில்லாத சந்தோஷம். மாலையில் தமிழ் வகுப்பிற்குச் சென்றேன்.

அதே கேலிப் பேச்சுக்கள், பகிடிகள் ஆனால் என் மனமோ சகோதர பாசத்துடனும் நட்புணர்வோடும் கிரகித்துக்கொண்டது.

முன்பெல்லாம் மனதில் ஆசையை வளர்த்துக்கொண்டு, வெளியே வெறுப்பைக் காட்டிக்கொண்டிருந்தேன். அவர்கள் என்னைப் பற்றி என்ன பேசுகிறார்கள்? என்ன நினைக்கிறார்கள்? என்பது பற்றி என் மனம் கூர்ந்து கவனிக்கும். ஆனால், இப்போதெல்லாம், வகுப்பு ஆசிரியை கூறுவதைத் தவிர வேறெதுவும் என் காதுகளில் விழவேயில்லை. வகுப்பு முடிந்ததும், அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்ட என் மனதில் ஓர் இனம்புரியாத நிம்மதி! ஒரு தெளிவு! ஒரு திருப்தி! ஆம், நான் புரிந்துகொண்டேன், சபலம் காதலல்ல...

**அ.அ.ஜோதினி ~கண்டி**

# தேவை சம உரிமை!

"சாந்தி! ஏய் சாந்தி!! என்ன செய்யறே அங்க...?"

"இதோ வந்திட்டேங்க" குரல் கொடுத்துக்கொண்டு வந்து நின்றாள் சாந்தி.

"இந்தச் சட்டையில் பட்டன் அறுந்திடுச்சி, தச்சி வையின்னு நேற்றே சொன்னேனில்ல..."

"ஐயையோ... மறந்திட்டேங்க! இப்ப தச்சிக் கொடுக்கிறேன்" பயந்து கொண்டே சொன்னாள் சாந்தி.

"எதைத்தான் மறக்காம செய்யற? எப்ப பார்த்தாலும் மறந்து போச்சுப் புராணம்தான். சரி... சரி... சாப்பாடு வை. அர்ஜுனைப் பார்க்கப் போகணும்" கை,கால் கழுவிக்கொண்டு சாப்பிட உட்கார்ந்தான் சந்திரன்



சாந்தி பரிமாறினாள் அவனுக்குப் பிடித்த கருவாட்டுக் குழம்பு வாசம் "கமகம"வென்று வீசியது. ஒரு வாய் சாதம் அள்ளி வாயில் வைத்ததும், "தூ.. தூ.."வெனத் துப்பினான்.

"ஏண்டி உப்பை அள்ளிக் கொட்டி வைச்சிருக்கே? நான் சாப்பிடக் கூடாதுன்னே இப்படிச் செய்து வைச்சிருக்கே" கோபத்துடன் எழுந்து கை கழுவினான் சந்திரன். சட்டையைப் போட்டுக்கொண்டு வெளியே நடந்தான்.

"ச்சே... இன்னைக்கு ஞாயிற்றுக் கிழமையும் அதுவுமா ஒரே டென்ஷன்..." கால் போன போக்கில் நடந்தான். எதிரே நண்பன் அர்ஜுன் வந்தான்.

"சந்திரன்! பாட்ஷா படத்திற்கு ரெண்டு டிக்கெட் இருக்கு. வர்றியா?" அர்ஜுன் டிக்கெட்டைக் காட்டினான். 'கொஞ்ச நேரம் படம் பார்த்தாலும் டென்ஷன் குறையும்' என்ற எண்ணத்தில் அர்ஜுனுடன் போனான் சந்திரன்.

படம் முழுவதும் நன்றாக இருந்தது. தன்னை மறந்து சிரித்தான் சந்திரன். இப்போது மனம் இலேசாக இருந்தது. படம் முடிந்து வெளியே வந்ததும்தான் மனைவி நினைப்பே வந்தது.

"சே... மதியம் நான் அவ்வளவு கடுமையாகப் பேசியிருக்கக் கூடாது. பாவம் சாந்தி! நாள் முழுவதும் வீட்டில் அடைந்து கிடக்கிறாள். நமக்காக எவ்வளவு வேலை செய்கிறாள்! வீட்டிற்குப் போனதும் சமாதானம் செய்ய வேண்டும் எனப் பத்து ரூபாவுக்கு பூ வாங்கிக்கொண்டு பஸ் நிலையம் நோக்கி நடந்தான் சந்திரன்.

பஸ் நிலையமருகில் ஏதோ, மகளிர் கருத்தரங்கு நடைபெற்றுக்கொண்டிருந்தது. 'என்னதான் பேசுகிறார்கள்? ஒரு ஐந்து நிமிடம் பார்த்துவிட்டுத்தான் போவோமே' என்ற எண்ணத்தில் கூட்டத்தினுள்ளே நுழைந்தான்.

"பெண்களே! நாட்டிற்கும் வீட்டிற்கும் கண்கள். பத்து மாதம் சுமந்து அவஸ்தைப்பட்டுப் பிள்ளை பெறுவதும் பெண்கள்தான். குடும்ப நிர்வாகம் முழுவதும் பெண்ணுக்கு மட்டும்தானா? ஆணுக்கு அதில் பங்கில்லையா? ஒரு கணவனுக்கு மனைவி செய்யும் சேவைகளுக்கெல்லாம் சம்பளம் கொடுப்பதாகக் கணக்குப் போட்டுப் பார்த்தால் பல ஆயிரங்கள் கொடுக்க வேண்டியிருக்கும். குடும்பநிர்வாகம் முழுவதையும் சுமக்கும் பெண்கள்தான் ஆண்களின் கழுத்தில் தாலிகட்ட வேண்டும். ஆணாதிக்கத்தை அடக்குவோம்! எனவே பெண்ணுக்குச் சமவுரிமை வேண்டும். பெண்களே! பொங்கியெழுங்கள் பாரதி கண்ட புதுமைப் பெண்களாய்!" ஒலிபெருக்கியில் அனல் பறக்கப் பேசிக்கொண்டிருந்தாள் சாந்தி.

அந்த நிலையில் மனைவியைப் பார்த்த அதிர்ச்சியில் சிலையாக நின்றான் சந்திரன்.

**எஸ்.ரவி –மாத்தளை**

# கண்கள் பேசாவிடின்

ஒருமுறை அவளை நன்றாகப் பார்த்துக்கொண்டான். பெருமூச்சு விட்டபடியே சரணுடன் அவன் புறப்பட்டான். இது சுதர்ஷனின் வாழ்வில் வழமையாக நடப்பதாகும். இனம்புரியாத ஒரு உணர்வு அவன் மனதை வாரத்தின் திங்களும் செவ்வாயும் ஆட்கொள்ளும்.

அது வேறொன்றுமில்லை. பார்வையாலேயே காதலைப் பரிமாறிக் கொள்ளத் துடிக்கும் இரு இதயங்களின் ஏக்கம். சுதர்ஷனின் சங்கீத வகுப்புக்கு வருபவள் தர்சி. அழகி என்று வர்ணிக்க முடியாது. பொது நிறம், சுமாரான உயரம், பார்த்தவுடனேயே பற்றிக் கொள்ளத் தூண்டும் எந்த ஈர்ப்பும் அவளிடமில்லை. ஆயினும் அவள் கடைக்கண் பார்வை கூட அவன் உயிரைக் குடித்தது.

அன்று திங்கட்கிழமை. இனம்புரியா மகிழ்ச்சியுடன் கண்ணாடியைப் பல முறை பார்த்தும் திருப்தியடையாதவனாக சரண் வீட்டுக்குச் சென்றான்.

"டேய் சரண்! நேரமாச்சு வாடா போவம்."

"எங்க? ஓ! சுதர்ஷன் இன்றைக்கு நா வரல்லடா. ஸாரி மச்சான். நாளைக்கு தமிழ் பரீட்சைடா!"

முதலில் தனியாகச் செல்லத் தயங்கினான். ஆயினும் எப்படியோ தன்னைத் தானே சுதாகரித்துக் கொண்டு சங்கீத வகுப்பை நோக்கிப் புறப்பட்டான்.

அவனுக்காகவே காத்திருந்தவள், அவனைக் கண்டதும் தலைகுனிந்தாள். அந்த நாணம் மிகவும் கவர்ந்தது. அருகில் அவளது நண்பிகளும் தென்படவில்லை. தனியாக இருவரும் சந்திப்பது இதுவே முதல் தடவை. அருகில் சென்று உட்கார நினைத்தவன் ஏனோ தயங்கினான். அவளும் கபடக்காரி. சுற்றும் முற்றும் பார்ப்பது போல அவனையே பார்த்துக்கொண்டிருந்தாள். சூழவுள்ள அனைவரும் இருவருக்கும் Out of focus இலேயே தெரிந்தனர். சங்கீத சத்தமும் இவர்களின் கவனத்தைக் கலைக்கவில்லை. கைகள் புத்தகத்தில் கிறுக்கிய போதும் கண்களும் மனதும் அலைபாய்ந்துகொண்டிருந்தன. மனதார விரும்பிய இருவரும் கண்களாலேயே கத்திக் கதறி காதலை வெளிப்படுத்தினார்கள். கண்கள் வெட்கமிழந்து பேசிக்கொண்டிருந்தன.



ஆயினும், தொண்டைக் குழி அடைத்திருந்தது. வாயோ அசைவின்றி உணர்வுகளால் தைக்கப்பட்டிருந்தது. இது வெறும் வெட்கத்தால் உண்டான மௌனம் அல்ல. ஒரு விதமான கௌரவப் பிரச்சனை. அகங்காரத்தால் வார்த்தைகள் அடக்கப்பட்டிருந்தன.


நான் ஒரு பெண். எந்த விதத்திலும் என்னால் என் காதலை வெளிப்படுத்த முடியாது. ஆணாகவிருக்கும் அவனுக்கே இத்தனை திமிராக இருந்தால் எனக்கு எத்தனை இருக்கும்?

இந்தக் கோபத்துக்குக் காரணம் வேறொன்றுமில்லை. அவன் தனது ஆசை தீர உற்று உற்றுப் பார்க்கிறான். ஆயினும் இவள் அவன் பக்கம் திரும்பியவுடன் ஒன்றுமே அறியாத சிறுபிள்ளை போல மறுபக்கம் திரும்பிக் கொள்கிறான்.

இவையே தர்சி சுதர்ஷன் மீதும் சுதர்ஷன் தர்சி மீதும் சாட்டும் குற்றங்களாகும். இருவரும் இதனாலேயே மௌனத்தைத் தாய்மொழியாகக் கடைப்பிடிக்கின்றனர். பார்வையிலே ஆரம்பித்த காதல், பேசுவதற்கு வீணாகக் கண்களைப் பயன்படுத்த முயல்கின்றன. 'கண்களே! நீ பேசாவிடின் என் நாவும் புரளாது' என்று இருவரும் அர்த்தமற்ற பிடிவாதக்காரராக இருக்கின்றனர். பார்வை பாயும் தூரம் மட்டும் வாழும் இந்தக் காதல் வெடித்துச் சிதறி வெளிப்படுமா? பிடிவாதம், திமிர் எனும் போர்வைகளால் மூடி மறைக்கப்படுமா?

**அறிவி**

# ஒரு கைதியின் கதை



எழுதுவது **சுபா**

**வா**ர்டன், கம்பிகளில் தட்டிச் சப்தமெழுப்பினார்.

சந்திரமோகன் நிமிர்ந்தான்.

"வா" என்றார் வார்டன்.

சிறைக் கதவு ஓசையுடன் திறக்கப்பட்டது.

சந்திரமோகன் கல் தரையில் கையூன்றி எழுந்தான். சிறைக் காரிடோரில் அவர் பின்னே நடந்தான்.

சிறையதிகாரியின் அறையில் சிகரெட் வாசம் நிரம்பியிருந்தது. பழுப்புக் காகிதமொன்றை அவர் அவன் பக்கம் போட்டார்.

"உன்னை விடுவிக்கச் சொல்லிவிட்டார்கள்" என்றார்.

சந்திரமோகன் திடுக்கிட்டான்.

விடுதலையா? அதற்குள்ளாகவா? அவனுக்கா?

அவனுடைய நான்கு வருட சிறைவாசம் ஒரு முடிவுக்கு வரப்போகிறதா?

"இனிமேலாவது நல்லவனாக இரு... இங்கேயிருந்த நான்கு வருடத்தையும் மறந்துவிடாதே... மறுபடி கொலை செய்யக் கிளம்பிவிடாதே..."

குண்டூசியால் பல்லிடுக்குகளைச் சுத்தம் செய்தபடி அவர் பேசிய தொனியில் ஒரு கேலி இருந்தது.

கையசைத்து அவனை வெளியேறலாம் என்றார்.

சந்திரமோகன் அந்தப் பழுப்புக் காகிதத்தைப் பொறுக்கி எடுத்துக்கொண்டான்.

"செய்யாத குற்றத்திற்கு நான்கு வருடங்கள் சிறையில் அடைத்தீர்களே... இந்த நான்கு வருடங்களை எனக்கு யார் திருப்பித் தரப்போகிறீர்கள்?"

ஆத்திரத்துடன் கனல் பறக்கக் கேட்க வேண்டிய கேள்வியை அமைதியான, அழுத்தமான குரலில் கேட்டான்.

அவரை வணங்கிவிட்டு வெளியேறினான்.

★★

**கா**தம்பரியின் முத்தத்திலிருந்து தன்னை மீட்டுக்கொண்டபோது, பரமேஸ்வரின் மூச்சு இரைத்தது, "அப்பா" என்றார், நெஞ்சு ஏறியிறங்க.

"கின்னஸ் போட்டியிலா கலந்து கொள்ளப் போகிறோம்? "உன் வேகத்தை என்னால் சமாளிக்க முடியவில்லை..." என்றார், படுக்கையில் புரண்டு.

காதம்பரி கலகலவென்று சிரித்தாள்.

"அதுதான் இருபதுக்கும் ஐம்பதுக்கும் இருக்கும் வித்தியாசம்" என்று கண்களைச் சிமிட்டினாள்.

"உங்கள் மனைவியோடு இந்த மாதிரி அனுபவம் எல்லாம் கிடையாதா?"

"அவள் ஒரு பூசணிக்காய். அவளைப்பற்றி ஏன் ஞாபகப் படுத்துகிறாய்? அதற்காகச் சந்தடி சாக்கில் நீ இருபது, நான் ஐம்பது என்று சொல்லிவிட்டாயே!"

"நான் சொல்லவில்லை... உங்கள் நரை சொல்கிறது. ஐம்பதாக இருந்தாலென்ன? இருபத்தைந்து வயதுடைய இளைஞனின் ஆசை உங்களுக்குப் போகவில்லையே!" என்று அவள் பொங்கிச் சிரித்தாள்.

"நீ கெஸ்ட்ஹவுஸ் கேட்டவுடன் உனக்காக வாங்கிக் கொடுத்தேன் பார். அப்படித்தான் கேலி செய்வாய்"

"கேலியில்லை, டியர் ஐ லவ் யூ... ஐ லவ் யூ ஸோ மச்! ஆனால், காதலில் இந்த சீண்டல்கூட இல்லாவிட்டால் எப்படி?" என்று காதம்பரி அவர் மூக்கில் தன் மூக்கைத் தேய்த்தபோது-

பரமேஸ்வரின் செல்போன் சிணுங்கியது. அவளை நகர்த்தினார். போனை எடுத்தார். எண்ணைப் பார்த்தார்.

வீட்டிலிருந்து!

காதம்பரியை நிசப்தமாக இருக்கச் சொல்லிச் சைகை செய்தார். போனை இயக்கினார்.

"ஹலோ!"

"எங்கேயிருக்கிறீர்கள்?" என்றது அவர் மனைவியின் குரல்.

"க்ளையன்ட் வீட்டில்... இதோ புறப்பட்டுக் கொண்டேயிருக்கிறேன்."

போனை அணைத்தார், காதம்பரியையும்.

●●●

**கி**ருஷ்ணதாஸ் சுடு நீரில் குளித்துவிட்டு வேட்டியிலிருந்தார். பூஜை அறைக்குள் நுழைந்தார். மின் விளக்குகளின் உபயத்தில் சாமிப் படங்கள் பளீரிட்டன.

பூக்களை எடுத்தார். படங்களின் மீது போட்டார். கண்களை மூடினார்.

"கடவுளே... எனக்கு எல்லாம் நல்லதாக நடக்க வேண்டும்."

கற்பூரம் கொழுத்தினார். கண்களில் ஒற்றிக் கொண்டார். வெளிப்பட்டார்.

நிமிர்ந்து கடிகாரம் பார்த்தார். இரவு 9 மணி.

போனை எடுத்தார். எண்களைத் தட்டினார்.

"பரமேஸ்வர்... எங்கேயிருக்கிறீர்கள்?"

"காரில்..." என்று பதில் வந்தது. "வீட்டிற்குப் போய்க்கொண்டிருக்கிறேன்."

"ஒரு அவசர வேலை... இங்கே ஒரு பத்து நிமிடம் வந்துவிட்டுப் போகமுடியுமா?"

முடியாது என்று பரமேஸ்வரால் சொல்ல முடியாது என்று கிருஷ்ணதாஸுக்குத் தெரியும். நகரத்திலேயே மிகப் பெரிய கிரிமினல் அட்வகேட்டாக பரமேஸ்வர் கருதப்படலாம். ஆனால், கிருஷ்ணதாஸின் கம்பனியில் அவர் சட்டக்குழு ஆலோசகர், அதற்காக மிகப் பெரிய தொகை மாதா மாதம் அவருக்குப் போய்க் கொண்டிருக்கிறது.

"அவ்வளவு அவசரமென்றால் வருகிறேன்" என்றார் பரமேஸ்வர்.

"டின்னர் என் வீட்டில்..." என்று கிருஷ்ணதாஸ் தொடர்பைத் துண்டித்தார்.

டின்னர் முடிந்து, பிரம்பு ஊஞ்சலில் ஆடிக்கொண்டே கிருஷ்ணதாஸ் பேசினார்.

(கைதியின் கதை தொடரும்)

# அதுவொரு இன்பியல் சம்பவம்!

**வீ**ரப்பன் தன் சத்தியமங்கலம் காட்டுக்கு சர்வதேசப் பத்திரிகையாளர்களை அழைத்துப் பத்திரிகையாளர் மாநாடு நடத்தினால் எப்படியிருக்கும் என்று தமிழகத்திலிருந்து வெளிவரும் "குமுதம்" சஞ்சிகை வெளியிட்டிருந்த கற்பனை செவ்வியை நன்றியுடன் தருகிறோம்.

வீரப்பன் உர்ரென்று உட்கார்ந்திருந்தான். வலது பக்கம் ரங்கூன் ராஜசிங்கம் மைக்கை இழுத்துவைத்துக்கொண்டார். பாவம் உடம்பு சரியில்லை போலிருக்கிறது அவருக்கு. பார்த்தாலே தெரிந்தது. அரசு மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெற அனுமதி கேட்டிருந்தார்.

அரசாங்கத்திற்கு அதிர்ச்சி! நம்ம மருத்துவமனையில் சேரவும் ஒருவர் ஆசைப்படுகிறாரே! என்று.

வீரப்பனுக்கு இடது பக்கம் உடும்பு உலகநாதன் உட்கார்ந்திருந்தார். இவர் வீரப்பனுக்கு கடந்த 12 வருடங்களாக உடும்பக் கறி ஆக்கிப் போடுபவர்.

மேற்கு நோக்கிப் பார்த்தபடி அமர்ந்திருந்தவர் ஒரு பெண்மணி. வெள்ளை வெளேரென்று இருந்தார். கவுன் மாட்டியிருந்தார். சமாதானம் பேச வந்தபோது வீரப்பனிடம் மாட்டிக்கொண்டவர் அந்தப் பெண்மணி. கடைசியில் வீரப்பன் ஆளாகவே மாறிவிட்டார்.

இத்தனை பேர் இருந்தாலும் சேத்துக்குளி கோவிந்தன்மீதுதான் எல்லோர் பார்வையும் சென்றது. காரணம், அவன் கையில் இருந்த துப்பாக்கி. நிருபர்களுக்கு நேராகத் துப்பாக்கியைப் பிடித்துக்கொண்டிருந்த அவன், தன் விரல்களை அடிக்கடி சொறிந்துகொண்டிருந்தான். அப்படிச் சொறியும் நேரத்தில் எங்கே துப்பாக்கி வெடித்துவிடுமோ என்ற திகிலுடன் அவனை வெறித்துக்கொண்டிருந்தார்கள் நிருபர்கள்.

கறுப்பு கூலிங் கிளாஸ் போட்டபடி சபாரி டிரஸ்ஸில் வீரப்பனுக்குப் பின்னால் நின்றிருந்தான். அவன் முகத்தில் இனந் தெரியாத சோகம். காரணம்-ரங்கூன் ராஜசிங்கம், உடும்பு உலகநாதன் எல்லாம் தலைவர் பக்கத்தில் உட்கார்ந்திருக்க... தான் மட்டும் கால் கடுக்க நிற்கிறோமே என்று!

சுமார் 500 பேர் கொண்ட பத்திரிகையாளர் முன்னிலையில் ரங்கூன் ராஜசிங்கம் முதலில் பேச்சைத் தொடங்கினார்.

"உங்களையெல்லாம் சந்திப்பதில் தலைவருக்கு மகிழ்ச்சி. எனக்கும் மகிழ்ச்சி. எல்லாரும் ஒவ்வொருத்தரா கேள்வி கேளுங்க...தலைவர் பதில் சொல்லுவார். ஆனா, ஒரே நேரத்தில கேட்டீங்கன்னா, தலைவர் டென்ஷன் ஆகவும் வாய்ப்பிருக்கு... ஜாக்கிரதை!" ரங்கூன் ராஜசிங்கம் இந்த அறிவிப்பை வெளியிட்டுவிட்டு வீரப்பனிடம் மெதுவாகக் கேட்டார்.

"பேட்டியை ஆரம்பித்துவிடலாமா தலைவரே?"

"ஆரம்பிச்சிடலாம்... இவனுங்க எத்தனைபேர் வந்திருக்கானுங்க... எவ்ளோ கேள்வி கேப்பானுங்க... ஒரு ஐடியா புரியலியே எனக்கு!" மைக்கை அணைக்காமலேயே அவர்கள் ரகசியமாகப் பேசிக்கொண்டது சத்தமாய் வெளியே கேட்டது.

"500 பேர் வந்திருக்காங்க. வாஷிங்டன் போஸ்ட்லேருந்தும் வந்திருக்காங்க... வந்தவாசி டைம்ஸ்லேருந்தும் வந்திருக்காங்க... தொடங்கிடலாமா?"

"கோவாலு வர்லியா?"

"அவர் வரலே... அவங்க ஆளை அனுப்பி வைச்சிருக்கார்!"

"சரி கேள்வி கேக்கச் சொல்லு..."

**முதல் நிருபர்: மிஸ்டர் வீரப்பன் மொத்தம் உங்க கூட்டத்துல இந்த நாலுபேர் தான் இருக்கீங்களா?**

**ரங்கூன்:** நான்குகோடி மக்கள் எங்களுக்குப் பக்க பலமாக இருக்கிறார்கள்.

**நிருபர்: ஐயா, நாங்கள் கேள்வி கேட்டது வீரப்பனிடம்...**

**ரங்கூன்:** எங்கள் இருவரின் கருத்தும் ஒன்றுதான். இந்த ரங்கூன் ராஜசிங்கம் வாய்ஸ் ஒ஼்ப் வீரப்பன்! (வீரப்பன் சிரிக்கிறான்) கவலைப்படாதீர்கள்... அவரையும் ஏதாவது ஒருசில கேள்விகளுக்குப் பதிலளிக்கச் சொல்கிறேன்!

**நிருபர்: ஏன் சந்தனம் கடத்தினீங்க?**

*(இதற்கு வீரப்பனைப் பதிலளிக்கச் சொன்னார் ராஜசிங்கம்)*

**வீரப்பன்:** ஏன் சந்தனம் கடத்தினேன்? சொல்றேன் கேட்டுக்குங்க...

சின்ன வயசுல மார்கழி மாசம் எங்க ஊர் அனுமார் கோயில்ல பூஜை நடக்கும். நல்ல குளிர்ல பச்சைத் தண்ணியில குளிச்சிட்டு நெத்தியில விபூதி இட்டுக்கிட்டேன். அடுத்ததா சந்தனத்தைத் தேடினேன். வீட்ல இல்லை. பக்கத்து வீட்ல கேட்டேன். குங்குமம்தான் இருக்கு... சந்தனம் இல்லன்னு சொல்லிட்டாங்க... அந்த வெறிதான் பெரிய அளவில வெடிச்சது!

**நிருபர்: சரி, வீட்ல சந்தனம், குங்குமம் இரண்டும் இருந்து விபூதி இல்லேன்னா என்ன செஞ்சிருப்பீங்க?**

**ரங்கூன்:** விபூதி பெரிய விஷயமா வெடிச்சிருக்கும். தலைவர் சாம்பல் பள்ளத்தாக்கு கொள்ளைக்காரனா மாறியிருப்பார்!

**நிருபர்: சரி! வன அதிகாரி ராகவ் நந்தியைக் கொலை பண்ணினீங்களே... அது தப்பில்லையா?**

**வீரப்பன்:** அது ஒரு இன்பியல் சம்பவம்!

**நிருபர்: ஐயையோ! என்ன சொல்றீங்க? வார்த்தையை மாத்திச் சொல்லிட்டீங்களா?**

**ரங்கூன்:** இல்லே! தலைவர் கரெக்டாத்தான் சொல்றார். அந்த வன அதிகாரியை நாங்க காலி பண்ணலேன்னா இப்ப இந்த பிரஸ்மீட்டையே நாங்க கூட்டியிருக்க முடியாது. அவரு எங்களைக் காலிபண்ணியிருப்பாரு. நாங்க இன்பியலா இருக்கவே அந்தக் காரியத்தைச் செய்தோம்!

**நிருபர்: எங்களை இங்கு எதற்காக அழைத்தீர்கள்? சமாதானமாகப் போகப் போகிறீர்களா? சரண்டர் ஆகப்போகிறீர்களா?**



**வீரப்பன்:** பல வருஷங்கள் கழித்து உங்களைச் சந்திக்கிறேன்... சமாதானம், சரண்டர் என்றெல்லாம் பேசி என்னைக் கடுப்பேத்தாதீங்க!

**நிருபர்: பின்னே எதுக்குத்தான் எங்களைக் கூப்பிட்டீங்க?**

**ரங்கூன்:** நான் சொல்றேன்... தலைவருக்கு ஒரு மாறுதல் தேவைப்பட்டது. இங்கு ரொம்பப் பேர் அடிக்கிறது உடும்பு, ஒணான், காட்டெருமை, யானை இதெல்லாம் தான் கண்களுக்குத் தெரிகிறது. ஒரு வித்தியாசத்துக்காக வாஷிங்டன் போஸ்ட், வந்தவாசி டைம்ஸ் போன்ற பத்திரிகையாளர்களைச் சந்திக்க நினைத்தார். அது தப்பா? இனிமேல் அடிக்கடி இந்தச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்வோம். நீங்கள் தவறாமல் வந்துவிட வேண்டும்.

**நிருபர்: நாங்க வர்றது இருக்கட்டும்... நீங்க எப்ப சிட்டிக்குள்ள வரப்போறீங்க? பொது மன்னிப்பு, பாவ மன்னிப்புன்னு ஏதாவது கேட்டு அங்க வந்துடறதுதானே?**

**வீரப்பன்:** அங்கே வந்து நான் என்ன செய்யறது? ஏதாவது கம்பெனில கிளார்க் வேலையில சேர்ந்தா பொழப்பு நடத்த முடியும். அப்படியே கிளார்க் வேலைல சேர்ந்தாலும், ஆபீஸுக்கு இன்னிக்கு ஏன் லேட்டு?ன்னு மனேஜர் கேட்டா, அவனை அங்கேயே பேஜார் பண்ணிடுவேனே!

(பிரஸ் மீட்டிங் நடந்துகொண்டிருக்கும் போதே வீரப்பன் ஆள் ஒருவன் நான்கு ஆடியோ காஸெட்களை அவனிடம் நீட்டுகிறான். இதை அவர் கேட்டாச்சு இதையும் அவர் கேட்டாச்சு... இதை வேணும்னா அவருக்கு அனுப்பு" என்று உத்தரவிடுகிறான் வீரப்பன். நிருபர்கள் முகத்தில் வியப்பு)

**நிருபர்: யாருக்கு அனுப்பறீங்க இந்த காஸெட்டை...?**

**வீரப்பன்:** விடுதலைப் புலி தலைவர் பிரபாகரனுக்கு.

**நிருபர்: கருணாநிதி, ஜெயலலிதா, கர்நாடக முதல்வர்... இவர்களுக்குத்தானே வழக்கமா காஸெட் அனுப்புவீங்க? இந்த முறை என்ன இப்படி?**

**வீரப்பன்:** நீங்க நினைக்கிற மாதிரி இல்ல. இது பி.சுசீலா, பி.பி.சீனிவாஸ் பாடிய டூயட் பாடல் காஸெட்.

பாவம் அந்த மனுஷனும் காட்டுல இருக்கார். நானும் காட்டுல இருக்கேன். ஒருத்தருக்கொருத்தர் ஹெல்ப் பண்ணிக்க வேணாமா? அவர் கிட்ட சீர்காழி கோவிந்தராஜன் காஸெட் ஒண்ணு இருக்கு. இதைக் குடுத்திட்டு அதை எடுத்துகிட்டு வருவான் தூதன்.

**நிருபர்: தமிழ் தீவிரவாதிகள் உங்ககூட இருந்தாங்களாமே..?**

**வீரப்பன்:** ஆமா, மூணு மாசம் இருந்தாங்க... போயிட்டாங்க. இப்ப இந்தித் தீவிரவாதிகள் பத்துப்பேர் இருக்காங்க. உடும்புக் கறி, வௌவால் ஊறுகாய், காட்டெருமை கட்லெட் இதெல்லாம் சமைச்சுப் போட்டா யார்தான் வரமாட்டாங்க? இன்னிக்குக்கூட ஒரிஸா தீவிரவாதிகள் வயர்லெஸ்ல பேசினாங்க. ஒணான் சட்னியும், ஒட்டகக் குருமாவும் எனக்குச் செஞ்சுகொண்டு வர்றாங்களாம். எல்லோரும் வரட்டும்... சந்தோஷமா இருக்கலாம். நீங்க கூட இங்கேயே தங்கிடலாம். உங்களுக்கெல்லாம் யானை தந்தத்துல செஞ்ச பேனா தரேன்! அதுல எழுதுங்க... என்ன... தாறுமாறாக எழுதினீங்கன்னா உங்க 32 தந்தங்களையும் உடைச்சுடுவேன்!

(ஒருவித மிரட்சியுடன் பிரஸ்மீட் முடிந்தது)

# அட, மலையகத்துக்கும் தேசியத் தலைவங்களா?

**ஆ**மா, நம்ம தலைவருங்க பேசற பேச்சுக்களில இப்போ ஒரு புதுப் பாணி அடிக்குதுங்களே, கவனிச்சீங்களாங்க?

அதுபாருங்க, தாங்கதா மலையகத் தமிழங்களோட தேசியத் தலைவருண்னு ஒரு சொடக்காப் பேசறாங்களே, இதென்ன வடக்கு கெழக்கில புடிச்சிருக்கற காச்சலு இவனுங்களுக்கும் தொத்திக் கித்திப் பூட்டுதாங்க?

இதுவாட்டிக்கு, மக்களுதா மகேசனுன்னு நம்ப காலைப்புடிச்சே நம்பளைக் கவுத்துக்கினு வந்தவுங்க இப்ப தங்களத் தாங்களே தான் மகேசனுங்கன்னு பொலம்பிக்கிட்டு ஸ்ரெயிட்டாவே நம்ம தலை மேல எறி ஒக்காந்துப்புட்டானுக.

என்னங்க இது கோமாளித்தனமாயிருக்கு! நம்ம சனங்களுக்கு நீங்களேதா தேசியத் தலைவருண்னு யாரு சொன்னாகன்னு கேட்டா, பிரபாகரனு சொன்னாரு எங்கறாங்க!

என்னடா இது வம்பாப் போயிடிச்சி? அவரு எப்ப சொன்னாரு, எங்க சொன்னாரு? செவனுக்கு முருகப்பெருமா சொன்னாப்போல வன்னியில வைச்சு ஒங்க காதுக்க சொன்னாரா? அத அவரு எங்களுக்கெல்ல சொல்லனும்?

அவரு சொன்னாப்போல நாமல்ல அத ஏத்துக்கனும்?

அதுசரி, இவரு ஏன் பெயர மறந்த ஈ குதிரைகிட்ட போயி ஏம் பெயரென்னான்னு கேட்டாப்போல அவருகிட்டபோயி, தான் யாருண்னு கேட்டுத் தெரிஞ்சிகிட்டு வந்திருக்காரு?

நம்மகிட்ட கேக்கறதுதானே? நாம சொல்லாம யாரு சொல்லியும் இவரு தலைவராயிட முடியுங்களா?

என்ன எழவோ, அதென்னா, தேசியமு? புதுப் பெயரொண்னு கொண்ணர்ராரு. மொதல்ல, தோட்டத் தொழிலாளிங்கன்னாங்க, பெறவு நாடற்றவங்கன்னாங்க, பின்னாடி மலையகத் தமிழன்னாங்க, அடுத்தாப்புல இந்திய வம்சாவழின்னு சொல்லிகிறதுதா மெத்த நல்லதுன்னாங்க, எல்லாம் முடிஞ்சி இப்ப தேசியமுன்னு வேற காவிகிட்டு வாறானுங்களா?

மலையகத் தமிழங்களுக்கு துண்டு நெலங்கூட சொந்தமுன்னு இல்லாத வள்ளீசில நாம எந்தத் தேசத்தை நமக்குன்னு மார்தட்டி தேசியமுன்னு பெயர் சூட்டிக்கறது?

எனக்கு என்னா குழப்பமுன்னா, எதுக்கிப்ப இந்த எடுப்பல்லாம் நமக்கு?

நாம நம்ம சொந்தப் பிரச்சினைங்களுக்கே உருப்படியா இன்னும் ஒண்ணும் பண்ணக் காணோம். அதுக்குள்ள நாம ஏன் அவுங்க, வடக்கு கெழக்கில எடுக்கிற எடுப்புக்கு இங்க நிண்னு இடுப்ப ஒடிக்கனும்?

அவுங்க பொங்கு தமிழ நடத்தட்டுக்கும். நல்லதுன்னு நாம நாலு வார்த்தை வாழ்த்திப்புட்டு நம்ம பிரச்சினைங்களுக்குண்டான போராட்டங் கிராட்டங்கள உருப்படியா நடத்தற வழியப் பாப்போமே!

அவுங்க மாதிரியே இங்க ஆடப் போனாக்க கவுந்து கொட்டுண்டுப் புட மாட்டோமாங்க?

இப்ப அவுங்க செயலலிதா அம்மாவோட கொடும்பாவிய எரிக்கிறாங்க. எங்க நம்ப தலைவங்க எரிப்பாங்களா இங்க? எரிச்சிபுட்டு தமிழ்நாட்டுப் பக்கோம் இவுங்க மாசா மாசம் பவனி வர முடியுங்களா பின்னாடி?

அதுதா சொல்லறே இந்த ஈயடிச்சான் கொப்பி வேலையை வுட்டுடுங்கடான்னு.

அங்க பிரச்சனை வேற. இங்க பிரச்சனை வேற. அங்க வெயிலு, இங்க கூதலு. அங்க பனை வெளயுது இங்க தேயில வெளயுது. அங்க மர அட்டைன்னா இங்க லீச்சட்டை. அங்க ஆயுதப் போராட்டம் இங்க தொழிற்சங்கப் போராட்டம். ஏங்க, எங்க தோட்டத்துப் பிரச்சனைய அவுங்களால எடுக்க முடியுங்களா? அப்ப நாம ஏனு அவுங்க பிரச்சினைய இங்க வெதைக்கனும்?

ஏவூட்டு பயமின்னான்னா, நம்ம தலைவனுங்க, ஏதோ அவுங்ககிட்ட நல்லபெயரு வாங்கறதுக்காக நம்ம மலையகத்திலயும் நாலு வீர வசனங்கள உணர்ச்சிததும்ப மேடையில பேசியெறிஞ்சுபுட்டு தாங்க ஏர்கெண்டிசன் ரூமுகளுக்க சுருண்டு படுத்துப்புடுவானுங்க.



அப்புறம் படிப்புமில்ல, ஒழைப்புமில்லைன்னு நிக்கிற நம்ம இளவட்டப் பொடியனுங்க ஒருபக்கத்தால கெளம்பி அங்கால கனெக்‌ஷன் வைச்சானுங்கன்னு வையுங்க. சமாதானம் போற வரைக்கும் ஒன்னுமில்லை. ஆனா சண்டையின்னு ஒண்னு மறுகாத் தொடங்கிப்புட்டுண்னா, இங்க மலையகத்திலயுந் தான் குண்டுங்க வெடிக்கும், பாலங்க செதறும்!

அவங்க என்ன நம்ம தலைவங்க கொன்ரோலுக்கைங்களா காலைச் சுத்திக்கிண்னு நிக்கப் போறாங்க?

அப்புறம் வடக்கு கெழக்காட்டம் இங்கயும் ஆமிக்காரனுங்க சுத்தி வளைச்சு காம்படிச்சு செக்கிங்கு கிக்கிங்கு, தேடுதல் வேட்டைன்னு இறங்கி நம்ப ஐரென்ரிகாட்டில்லாத பொடியனுங்க பொட்டைங்களப் புடிச்சு பயங்கரவாதச் சட்டத்துக்க அடைச்சானுங்கன்னா, யாரு இதுங்களுக்கு பொறுப்பெடுக்கப் போறாங்க? நாம என்ன சண்டைன்னு எறங்கிறதா சரண்டராகிறதா?

நம்ம சமுதாயம் வடக்கு கெழக்குப் போக்கில ஆயுதப் போராட்டம் நடத்திற நெலமையிலயா இருக்கு? நடத்தி நம்மாள தாக்காட்ட முடியுமான்னு நெதானமா சிந்திக்கனுமில்லியா? குளத்தைக் கலக்கிப் பருந்துகிட்ட குடுத்தாப்போல, நம்ம உயிர் நாடியா இருக்கற தொழிலாளர் பலத்தை செதைச்சு ராணுவ அடக்கு முறைக்கு வழிதேடுற வேலையாயிடுமில்லையா இது?

அதுதா சொல்லிப்புடுறே, வெளையாட்டு வெளையாட்டா, ஒங்க ரெண்னு கோஷ்டிக்கும் எடையிலயான தலைமைப் போட்டியில ஒருத்தரை முந்தி ஒருத்தரு ஓடப் போயி என்ன ஏது செய்யிறமுண்னு தலைகால் புரியாம இங்கயும் கொழப்பத்தக் கெழப்பிப்புடாதேங்க.

நா அவுங்க போராட்டத்தை கொறை சொல்ல வரல்லீங்க, அவுங்கள வாழ்த்துங்க, மெச்சுங்க, அதோட வுட்டுடுங்க. அதில தொத்தி இங்க ஒங்க போட்டியாளுங்களுக்கு மேலால எகிறிப் பாஞ்சுபுடலாமுன்னு தெண்டிக்காதீங்க.

அவுங்க பிரச்சினைங்கள அவுங்க பாத்துப்பாங்க. நீங்க போயி புதிசா என்னாத்தப் பொளக்கப் போறீங்க அங்க. இங்க நமக்கு ஒரு ஊரிப்பட்ட சோலி இருக்குல்ல. நம்ம பிரச்சினைங்களக் கவனியுங்க.

அப்புறமென்ன? கொஞ்சம் புளி கரைச்சு வாத்தாப்போல பளிச்சுண்னு சொல்லிப்புட்டேன்னு மொறைப்பாப் பாக்காதிங்க. இதுங்கள அப்புடி அப்புடியே சொல்லி வைக்கலைன்னா பின்னாடி அந்தரிக்க வேணுன்னு ஆயுடுங்க.

**மலையூரான்**

இதுபாருங்க, ஏதோ ஒரு உள்ளுணர்வுல மனசில உறுத்தினத அப்புடியே சொன்னதுங்க. நாம மலையில சுத்துறப்ப மேகங் கருக்கட்டிச்சுண்னா மழைவரப்போகுதாக்குமின்னு நமக்கு உள்ளுணர்வு சுட்டுந்தாங்களே? அதுவாப்போல நம்ம சாதி சனங்களுங்கு ஏதும் ஆபத்து வந்துடுங்களான்னு நம்ம மனசுல தட்டுப்படுறத வாயால கக்கிப் புட்டனுங்க.

இதுவுங்கூட தப்பாத் தவறா இருக்கலாங்க. அப்புடிப் பட்டுதுன்னா மனசு மறைக்காம நியாயந் நீதியோட நீங்களும் சொல்லுங்க. நாலு பேரு நாலு விதமா சிந்திச்சா விவாதிச்சாத்தா சரிபுழைங்கள ஒரசிப் பாக்கலாங்க. சிந்தியுங்க. மறுவா சந்திக்கத்தானே போறோம்?

# இதயங்களைக் கனக்க வைக்கும்

## மலையகத் தமிழரின் வரலாற்றுத் துயர்!

*அன்புள்ள தினமுரசுக்கு,*

மலையகம் வாழ் தமிழ் மக்களின் பிரச்சினைகளை எடுத்துச் சொல்லும் வகையில் தொடங்கியிருக்கும் முயற்சியை நாம் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம். உங்கள் முரசிலும்கூட தமிழ் மக்களின் பிரச்சினையென்றால் அது வடக்கு கிழக்குத் தமிழ் மக்களின் பிரச்சினை மட்டும்தான் என்ற வகையிலேயே இனப்பிரச்சினை சம்பந்தப்பட்ட விடயங்கள் நோக்கப்பட்டு வந்தன. மலையகத்தில் வாழும் ஒரு தமிழ்ச் சமூகம் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை இலங்கையின் சகல ஏடுகளும் புறந்தள்ளி வைத்துவிட்டு வடக்கு கிழக்குப் பிரச்சினையை மட்டுமே உயர்த்திப் பிடித்ததுபோல் தினமுரசுவும் நடந்து வந்தது வேதனைக்குரியது.

இதேவேளை மலையகத் தமிழர்கள் அனேகர் தினமுரசுவின் அபிமான வாசகர்களாவர். அவர்கள் அதில் வெறும் சினிமாப் பக்கங்கள், சிறுகதைகள் போன்றவற்றை மட்டும் ரசித்ததைத் தவிர தமது பிரச்சினைகளுக்கு அதில் எத்தகைய பக்க பலத்தையும் அரசியல் வழிகாட்டலையும் பெரிதாகப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. தினமுரசில் வெளிவந்த அரசியல் பகுதிகள், அது எக்ஸ்ரே ரிப்போட்டாக இருந்தாலும் சரி, ராஜதந்திரியின் அலசலாக இருந்தாலும் சரி, இல்லையேல் அதிரடி ஐயாத்துரையும்கூட சுற்றிச் சுற்றி வடக்கு கிழக்குப் பிரச்சினைகள் பற்றிய விடயங்களையே அலசிக்கொண்டு இருக்கின்றன. மலையகத் தமிழருக்கும் ஒரு அரசியல் உண்டு, அதில் தீர்க்கப்படவேண்டிய பல பிரச்சினைகள் உண்டு, அவை வடக்கு கிழக்குப் பிரச்சினைகளை விட வேறுபட்ட, அதேவேளை சம முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் என்பதை எமது பத்திரிகை உலகில் எவருமே உணர்ந்ததாகத் தெரியவில்லை.

இந்த நிலையில் தற்போது முரசில் ஒரு புதிய மாற்றத்தை நாம் காண்கிறோம். மலையக மக்களின் வேதனைமிக்க வரலாற்றுத் துயரை முரசு கரிசனையோடு வெளிப்படுத்த ஆரம்பித்திருப்பதைக்கண்டு மகிழ்ச்சியடைகிறோம். உண்மையில் அத் துயரினூடு எழும்பிய ஆதங்கம் மிக்க கேள்விகள் எம் இதயத்தை கனக்க வைத்தன.

சிலருக்கு இப்படி ஒரு பக்கத்தை ஒதுக்கி முரசு மலையக மக்கள் பற்றிய சோகங்களை புலம்பித் தள்ளுவது வீண் விரயமெனவும், அவ்விடத்தில் எத்தனையோ சுவையான விடயங்களை வழங்கலாமெனவும் சலிப்புத் தட்டக் கூடும். நாளை இப் பகுதியை மாற்றும்படி பல வாசகர் கடிதங்கள் கோரவும் கூடும்.

ஆனால் மலையகத் தமிழ் மக்கள் தொடர்பாக முன்னெடுத்துள்ள இப் பணி ஒரு சமூகப் பணி. மலையகத் தமிழருக்கு இழைக்கப்பட்ட வரலாற்றுத் துரோகங்களை அம்பலப்படுத்தவும் அவர்களின் அரசியல் மற்றும் தொழிற்சங்கப் பிரச்சினைகளை வெளிக்கொணர்ந்து முதன்மைப் படுத்தவும், அவர்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தி ஒரு சரியான அரசியல் வழிகாட்டலுக்கான களத்தை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கவும் முரசு தொடர்ந்தும் இவ்வாறே பங்காற்றி வரவேண்டுமென்பது எங்கள் தாழ்மையான வேண்டுகோள்.

எமக்குத் தெரியும், இத்தகைய ஒரு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுவதைத் தடுக்க எத்தகைய அரசியல் செல்வாக்குகள் முரசின்மீது செலுத்தப்படுமென்பது. முரசு ஒரு ஜனரஞ்சகப் பத்திரிகை என்பதை நாமறிவோம். அது ஒரு சிற்றிதழுக்குரிய வகையில் விடயதானங்களை வழங்க முடியாததென்பதையும் உணர்ந்து கொள்கிறோம். ஆயினும் இவற்றை ஈடுசெய்து, மலையகத் தமிழ் மக்கள் தொடர்பான ஒரு காத்திரமான பங்களிப்பை நாம் முரசிடம் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

ஏதோ ஒரு ஆதங்கத்தில் நான் சற்று நீளமாக எழுதிவிட்ட இம் மடலைத் தாங்கள் வாசகர் சாலைப் பகுதியில் பிரசுரிக்க முடியாவிடினும் இவற்றிலுள்ள கருத்துக்களை தாங்கள் பத்திரிகைக் குழுவின் கவனத்திற்குக் கொண்டு வரத்தவறவேண்டாமெனத் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறேன்.

நன்றியுடன்,

*பெயர் குறிப்பிட விரும்பாத*
*ஒரு மலையகப் பட்டதாரி*

வாசகர்களே!

**ஆற்றுப்படுத்தல் (Counselling) என்ற உளவியல் சார்ந்த தலைப்பில், புதிய உண்மைத் தொடர் விரைவில் ஆரம்பமாகிறது.**

# ஆறுமனமே ஆறு!

சங்க காலத்திலிருந்து தமிழர்கள் மத்தியில் 'ஆற்றுப்படுத்தல்' என்ற பதம் பயன்படுத்தப்படுகிறது. ஆனாலும், அதன் அவசியமும், பலனும் உணரப்படவில்லை என்றே கூற வேண்டும். தற்போது உடல் வைத்தியத்தைவிட உள வைத்தியம் மேலை நாடுகளில் தொழில் ரீதியாகப் பிரபல்யம் அடைந்துள்ளது.

சிவபெருமானிடம் பிரச்சனையை வளர்த்துக்கொண்ட முருகப் பெருமான் பழனி மலையில் வந்து தங்கியிருக்கும்போது, ஔவை ஆற்றுப்படுத்துனராக வந்து முருகப் பெருமானை ஆசுவாசப்படுத்தி-ஆற்றுப்படுத்திப் பிரச்சனையைத் தீர்த்து வைக்கின்றார்.

பிரச்சனையில் உளரீதியாகப் பாதிக்கப்பட்டிருந்த முருகனுக்கு ஆலோசனைகளையும் நடைமுறைகளையும் கூறி அவர் உள்ளத்தை வளமாக்கிய ஔவை கூறியவைதான் 'திருமுருகாற்றுப்படை' என்று இலக்கியத்தில் உள்ளது. இத்தோடு பொருணர் ஆற்றுப்படை, பெரிப்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை போன்ற நூல்களும் பலதரப்பட்ட ஆற்றுப்படுத்தல் முறைகளை விளக்குகின்றன.

ஈழ மக்களை வேரோடு பிடுங்கியெறிந்த 'ஈழப் போராட்டம்' தமிழர் தம் விழுமியங்களை எவ்வளவு மோசமாக - ஆழமாகச் சீரழித்துவிட்டது என்பதை நாம் அனைவரும் அறிவோம். மன அழுத்தம், அதிர்ச்சி, மனச் சோர்வு, பிரிவு இவற்றால் ஏற்பட்ட கலாசாரச் சீரழிவுகள், தற்கொலைகள், பாலியல் வன்முறைகள், இளவயதுத் திருமணம், திருமணமாகாது குழந்தை பெறல், போதைக்கு அடிமையாதல் போன்ற பல பிரச்சனைகளுக்கும் எம் மக்கள் முகம் கொடுத்திருக்கும் இவ்வேளையில் ஆற்றுப்படுத்தலின் அவசியம் உணரப்பட்டுள்ளது.

### ஆற்றுப்படுத்தலின் நோக்கம்

சொந்த முயற்சியால் தனது பிரச்சனைகளுக்குத் தீர்வு காண முடியாத நிலையிலுள்ள ஒருவருக்கு உதவுவதே ஆற்றுப்படுத்தலின் நோக்கமாகும். ஆற்றுப்படுத்தலைப் பெறும் நபர் வழமையாக வேறொருவரில் சார்ந்திருப்பவர்கள் மனப் பாதிப்புக்கு ஆளானவர்கள் அல்லது பாதிக்கப்பட்டவர்களாக இருப்பர் (Client).

### பிரச்சனைகள்

மனப் பாதிப்புக்கும், மன அதிர்ச்சிக்கும் உட்பட்டவர்கள் பல பிரச்சனைகளுடன் வாழ்கின்றனர். கடினமான முடிவெடுப்பதில் பிரச்சனை, உடல்ரீதியான பிரச்சனைகள், கொடூரமான அனுபவங்களுக்குப் பின்னர் ஏற்படும் பிரச்சனைகள், தீர்வு ஒன்றைக் காண முடியாத பிரச்சனைகள் ஆகியவை முக்கியமானவைகளாக அமைகின்றன.

### ஆற்றுப்படுத்தலின் செயல் முறை

மேற்கூறிய பிரச்சனைகளில் ஒன்றைச் சந்தித்துக் கொண்டிருக்கும் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு கொஞ்ச நேரத்திற்கு தனது மூளையைக் கொடுத்து உதவுவது போன்றதே ஆற்றுப்படுத்தலாகும். பாதிக்கப்பட்டவருடைய மூளையும் ஆற்றுப்படுத்துனருடைய மூளையுமாக இரண்டு மூளைகளும் சேர்ந்து ஆழமாகச் சிந்தித்துப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் வழிமுறைகளைத் தேடிக் கொள்வதும், பாதிக்கப்பட்டவர் தன் முயற்சியிலேயே தன் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண உந்து சக்தியாக ஆற்றுப்படுத்துனர் செயற்படுவதும் உரிய பலனைத் தரும்.

"ஆற்றுப்படுத்துனர் மருத்துவிச்சி போன்றவர். குழந்தையைத் தாய்தான் பெற்றெடுக்க வேண்டும். உதவியும், ஆலோசனையும் தான் மருத்துவிச்சியால் கொடுக்க முடியும்."

**தொடரும்.....**

(இத்தொடரை வழங்கும் எஸ்.பி.லெம்பேட் என்பவர் சென்னையிலுள்ள ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்தின் மனிதவள மேம்பாட்டுத்துறையிலும், கம்போடியா, நாம்பென் றோயல் பல்கலைக்கழக உளவியல் பேராசிரியர். சேர் கூஸ் வான் டேர்வியன் என்பவரிடமும் ஆற்றுப்படுத்தல் பயிற்சியைப் பெற்றவர். இவர் தனது ஆற்றுப்படுத்தல் அனுபவத்தைப் பகிர்ந்துகொள்ளும்போது மக்களின் உளவியல் பிரச்சனைகளுக்கும் தீர்வ கிட்டுமென எதிர்பார்க்கலாம். ◘

# ஸ்போர்ட்ஸ்

## மன உளைச்சலில் பிளெமிங்

### பதவி விலகும் எண்ணம்!

வெற்றி, தோல்விகளால் பாதிக்கப்படாத மனத்துணிவைப் பெற்றுக்கொள்வதே விளையாட்டின் அடிநாதமாக விளங்குகின்றது. ஆனால், எத்தனை வீரர்கள் இதனை உள்வாங்கி விளையாட்டை விளையாட்டாகவே கருதுகிறார்கள் என்பது கேள்விக்குறியே! அந்த வகையில் நான்கு வருடத்திற்கும் அதிகமாக நியூசிலாந்து கிரிக்கெட் அணியை வழிநடாத்திச் சென்ற அணித் தலைவர் ஸ்டீவன் பிளெமிங் தனது தலைமைப் பதவியை இராஜினாமா செய்ய முடிவெடுத்துள்ளார்.

அவருடைய வழிநடத்தலில் வினைத்திறன் குறைந்தது என்று யாரும் வெளிப்படையாக இதுவரை விமர்சனம் செய்யாதபோதிலும், அணியின் வீரர்கள் சிலரின் அதிருப்தியான கருத்துக்களாலும், உறுதியற்ற ஆட்டத்தன்மையாலும் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகியிருக்கும் பிளெமிங், தலைமைப் பதவி தன் தோள்களில் மிகுந்த பளுவை ஏற்படுத்துவதாகக் கருதி அதிலிருந்து விலகிச் சாதாரண வீரராக இன்னும் சில காலம் அணியில் இருக்க விரும்புவதாகத் தெரிவித்துள்ளார்.

எனினும், பிளெமிங்கின் முடிவினால் அதிர்ச்சியடைந்துள்ள நியூசிலாந்து கிரிக்கெட் சபை அவரின் மன உளைச்சலை நீக்கி அவரை ஆற்றுப்படுத்தும் முயற்சியில் இறங்கியுள்ளது. உலகக் கிண்ணப் போட்டிக்கு இன்னும் சில மாதங்களே எஞ்சியுள்ள நிலையில் பிளெமிங்கின் முடிவு அவ்வணிக்கு மிகுந்த தாக்கத்தைக் கொடுக்கத்தானே செய்யும்!

## மூன்றாவது டெஸ்ட்டைக் கோட்டைவிட்டது இந்தியா

### மே.இ.தீவுகளின் இலகுவான வெற்றி!



எதிர்பார்க்க வைத்துவிட்டு ஏமாற்றிக் கழுத்தறுப்பவர்கள் காதலிகள் மட்டுமல்ல, இந்திய கிரிக்கெட் அணியும்தான் என்பதை மீண்டுமொரு முறை வெகு 'கூலாக' நிரூபித்திருக்கிறார்கள் இந்திய அணியினர்.

மே.இ.திவுகள் அணியை இரண்டாவது போட்டியிலே அதன் சொந்த மண்ணிலேயே வைத்து 37 ஓட்டங்களினால் வரலாற்று வெற்றி கண்டவர்கள். அடுத்த போட்டியின்போது மண் கௌவாத குறையாக இனிங்ஸ் தோல்வியிலிருந்து மயிரிழையில் தப்பி 10 விக்கெட்டுக்களால் தோல்வியடைந்திருக்கின்றனர்.

கிரிக்கெட்டின் ஜாம்பவான் எனக் கருதப்பட்ட பிரட்மனின் சாதனையை முன்னைய போட்டியிலே தான் பெற்றுக்கொண்ட 29வது சதத்தின் மூலம் சமப்படுத்திய சச்சின், அதற்கடுத்த மூன்று போட்டிகளிலும் இரட்டைத் தானத்தைக்கூடப் பெறமுடியாத நிலையிலே ஆட்டமிழந்தது அணியின் தோல்விக்கு முக்கிய காரணங்களில் ஒன்றாகும். ஆனாலும், மே.இ.தீவுகளின் அணித் தலைவர் கார்ல் ஹூப்பரினதும்(115), சந்தர்போலினதும்(101)அபாரமான துடுப்பாட்டமும் அவர்களின் வெற்றிக்குக் காரணமாகின்றது.

முதல் இனிங்ஸில் 102 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்த இந்திய அணி, இரண்டாவது இனிங்ஸில் இனிங்ஸ் தோல்வியைத் தவிர்ப்பதற்காக 292 ஓட்டங்களைப் பெற வேண்டியிருந்த நிலையில் அணித் தலைவர் சௌரவ் கங்குலி மிகுந்த பிராயத்தனத்தின் மத்தியில் 141 பந்துகளில் தனது அரைச்சதத்தைப் பூர்த்திசெய்து இனிங்ஸ் தோல்வியிலிருந்து அணியைக் காப்பாற்றினார். 45 பந்து வீச்சுக்களில் 46 ஓட்டங்களை அதிரடியாய் குவித்த ஷாகீர்கானின் துடுப்பாட்டம் அணிக்குப் பெரிதும் உதவியதெனலாம். 5 போட்டிகள் கொண்ட தொடரிலே இரு அணிகளும் 1-1 என்ற சமநிலையில் உள்ளன.

உலகின் சிறந்த துடுப்பாட்ட வீரர் லாராவா? சச்சினா? என்ற வாதம் மீண்டும் எழுந்த நிலையில் எஞ்சியுள்ள இரு போட்டிகளும் இருவருக்கும் மிக முக்கியமானதாக இருக்கப் போகின்றன. ஏன்? அணிகளுக்கும் கூடத்தான்! மே.இ.தீவினர் இறுதியாக விளையாடிய ஒன்பது டெஸ்ட்களில் முதலாவது வெற்றி இதுவாகும். நான்காவது போட்டி எதிர்வரும் 10ம் திகதி ஆரம்பமாகும்.

# துன்பங்களிற் பெரியது...

இலக்கிய நயம் தருவது முழடில்யன்

அகிலா புத்தகத்தை மூடி எறிந்தாள்.

ஒரு வரியைக் கூட வாசிக்க முடியவில்லை.

வெளியில் வெயில் வேறு சுட்டெரித்துக்கொண்டிருந்தது.

அவள் உள்ளத்தை எரிப்பது எதுவென்று தெரியவில்லை. வெளி உடலைவிட உள்ளமே சூளைக்குள் அகப்பட்டுக்கொண்டுவிட்ட கோழிக்குஞ்சுபோல வெந்து சாம்பியது.

உள்ளம் கருகிய வாசனையை அவளது நாசி உணர்ந்தது.

என்ன இது? அறிவுக்கு அடங்காத அவஸ்தை!

இருக்கவும் முடியாமல் படுக்கவும் முடியாமல்...

எதிலும் மனதை நிலைப்படுத்திக்கொள்ள முடியாமல்...

கேட்ட பொம்மையையே வாங்கித் தரச் சொல்லி அடம்பிடித்து அலறும் குழந்தையைப் போல...

ஏன் இப்படி ஒரே புள்ளியில் விழுந்து மாய்கிறது மனம்?

துடைக்கத்துடைக்க நீர்ப் படலமாகிவிடுகிற மழைநேரக் கண்ணாடி போல-

இது என்ன அழிச்சாட்டியம்?

அகிலா அறைக்குள் குறுக்கும் நெடுக்குமாக நடந்தாள்.

உடலைக் களைக்கச் செய்வது எண்ணத்தைத் திசைதிருப்ப உகந்தவழி என்று அவள் அறிந்திருந்தாள்.

நடையில் வேகத்தைக் கூட்டினாள்.

மூச்சிரைத்தது.

கண்ணாடி முன் நின்று முகத்தில் அரும்பியிருந்த வியர்வைத் துளிகளைப் புடவைத் தலைப்பால் ஒற்றினாள்.

கண்ணாடியில் அவள் புடவைத் தலைப்பு ரமணனின் உதடுகளாகத் தெரிந்தன.

"உன் வியர்வையில் மட்டும் ஏன் உப்பில்லை?"

"ச்சீ விடுங்கள், வியர்வையைத் துடைத்துவிடுகிறேன்" என்றாள் அகிலா.

அவள் எதுவோ பேசுகிறாள் என்பதையே புரிந்து கொள்ள முடியாதவன் போல அரைக்கண் மூடிய நிலையில், "உன் எச்சிலைப் போலவே இதுவும் இனிக்கிறது" என்று முனகலுடன் உதடுகளைக் கன்னங்களில் ஓடவிட்டான்.

அவள், "என்ன இது ச்சீ..." என்று சிணுங்கி நின்றாள்.

"இந்த வியர்வைத் துளிகள் காய்ந்துவிடுவதற்குள் முழுவதையும் குடித்து முடித்துவிடப் போகிறேன்... அசையாமல் நில் அகிலா..." ரமணன் கொஞ்சும் குரலில் வேண்டினான்.

சொன்னதோடு நிற்காமல் அவளை அசைய முடியாதவாறு மார்புடன் சேர்த்து இறுக அணைத்துக்கொண்டான். முதுகுப் புறமாக வளைத்துக்கொண்ட கரங்களால் அவளை மேலும் நெருக்கிப் பிழிந்தான்.

அந்நிலையில் அவள் முகத்தை எவ்வளவு பின்னுக்கு இழுத்துக்கொண்ட போதும். அவன் உதடுகள் உரசும் தூரத்திலேயே இருந்தன.

கைகளை இறுக்கிப் பின்னுக்கு இழுத்தபடி முகத்தை முன்னோக்கிக்கொண்டு சென்ற ரமணன் உதடுகளை அவள் கன்னத்தில் மிக அழுத்தமாகப் புதைத்தான்.



அவளிடமிருந்து முக்கலும், முனகலும் திணறலுமாகப் பல விநோத சப்தங்கள் வெளிப்பட்டன.

அவை அவனை மேலும் ஆக்ரோசமடைய வைத்தன.

அவன் கைகள் வளைந்திருந்த இடுப்பிலிருந்து அவள் பின்புறமாக நிலம் நோக்கி வளையுமளவுக்கு முகத்தை முகம் இடித்த நிலையில் அவன் முன் சரிந்தான்.

திக்குமுக்காடிய நிலையில் அவள் தலையசைத்தாள்.

இவன் உதடுகளைக் கன்னத்திலிருந்து எடுக்காதபடி அவளது மறுகன்னத்துக்கு நகர்த்தினான்.

இடுப்பிலிருந்து கைகளை மேலெடுத்த அவன், அவளது பிடரியைப் பற்றிக்கொண்டான். அவளது கைகள் அவன் தோள்களுக்கு மேலால் தொய்ந்திருந்தன. கால்கள் நிலத்தில் பிடிப்பற்று ஊசலாடின.

முழுவதுமாக அவன் கரங்களுக்குள் சிறைப்பட்டாள். வேறெந்தப் பிடிப்புமற்று அவன் கைகளுக்குள் ஒரு பூமாலையென அடங்கிவிட்ட அவளை அவன் உதடுகளால் நனைத்து மூச்சுமுட்டித் திணறினான்.

அவளுக்கு உலகின் நினைவு அடியோடு அழிந்தது.

"அகிலா" என்ற அலறல் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டு விழித்தாள்.

கண்ணாடியில் கன்னம் உராய்ந்தபடி துவண்டு கீழே விழுந்திருப்பதை உணர்ந்தாள்.

திரும்பிப் பார்த்தாள்.

தோழி வீணா ஓடி வந்துகொண்டிருந்தாள்.

அவள் அருகே வருவதற்குள் சுதாரித்து எழுந்து கொண்டவள், அவளை நேர் நோக்க முடியாத வெட்கத்தோடு தள்ளாடி நடந்து சென்று கட்டிலில் அமர்ந்து கொண்டாள்.

வீணா அருகே வந்தமர்ந்து, அவளை ஆதரவாக அணைத்துக்கொண்டாள்.

"என்ன, மயக்கம் போட்டுவிட்டாயா?"

"ம்..." என்றபடி தலையை மட்டும் ஆட்டிவிட்டுக் குனிந்திருந்தாள்.

"சாதாரண மயக்கமா, ரமணன் மயக்கமா?"

வீணாவின் விழிகளை நிமிர்ந்து பார்த்தவள் பதில் எதுவும் சொல்லாது, மெல்ல அவள் மடியில் தலையை வைத்துப் படுத்துக்கொண்டாள்.

"உடம்பெல்லாம் இப்படி நடுங்குகிறதே, என்ன மயக்கமடி?"

படுத்திருந்தபடியே அகிலா பதில் சொன்னாள்: "காமன் மயக்கம்!"

"அது யார், ரமணனைவிட வேறொருவன்?" என்று சிரித்தாள் வீணா.

"ம்... ரமணனை விடவும் இவன்தான் பெரியவன், கொடியவன். என்னுடலை வாட்டி எடுத்துவிடுகிறான்."

"ரமணன் உன்னுடலைப் போட்டுப் புரட்டியெடுப்பதை விடவா?"

"ஆமாம்... அவருக்காவது என்னை அளவுக்கு மீறித் துன்புறுத்திவிடக் கூடாதென்ற கருணை கொஞ்சமிருக்கும். அவரில்லாத நேரத்தில் வந்து எனக்குள் புகுந்துவிடுகிற இந்தக் காமமோ கொஞ்சமும் கருணையில்லாதது, இரக்கமில்லாதது, என்னை அணுவணுவாகச் சித்திரவதை செய்வது... எல்லா நோய்களிலும் துன்பங்களிலும் இதுதான் பெரியது தோழி!"

**கைவளை நெகிழ்தலும்,**
**மெய் பசப்பு ஊர்தலும்,**
**மை படு சிலம்பின்**
**ஐவனம் வித்தி**
**அருவியின் விளைக்கும்**
**நாடனொடு**
**மருவேன்; தோழி அது,**
**காமமோ பெரிதே!**

(குறுந்தோகை: 371)

## சிந்தியா பதில்கள்

**★ சிந்தியா, இலங்கையில் வெளிவரும் பத்திரிகைகளில் அரசியல் பக்கச் சார்பின்றி செய்திகளை வெளியிடும் தினசரிப் பத்திரிகை எதுவெனக் கூறுவீர்களா?**

ஆ.க.சூரியம், மகிழூர்முனை.

பக்கச் சார்பில்லாமல் ஒரு வரி கூட எழுத முடியாது;பத்திரிகை வருவதெப்படி?

ஒரு செய்தியை எழுதும் வரிசைக் கிரமத்திலும், முக்கியமில்லாதது எனத் தவிர்த்துவிடும் அம்சத்திலும், பயன்படுத்தும் சொற்களிலும் அதை எழுதுபவரின் சார்பு இருக்கிறது. நடந்த ஒரு நிகழ்ச்சியைப் பார்த்துக்கொண்டிருந்த ஒவ்வொருவரிடமும் கேட்டுப் பாருங்கள் விபரிப்பு வேறுவேறாகத்தானிருக்கும். அதிகம் ஏன்? "அவன் இறந்தான்" என்று ஒரு வரி எழுதப்பட்டால் கூட, "அவர் இறந்தார்" என்று ஏன் அது எழுதப்படவில்லை என்பதில் ஒரு சார்பும் அரசியலும் இருக்கிறது. "பக்கச் சார்பற்ற எழுத்து", "நடுநிலை எழுத்து" என்று யாராவது சொன்னால் ஒருமுறை சிரித்துவிட்டு, அதில் எழுதாமல் விடப்பட்டவை என்னவாக இருக்கும் என்று யோசித்துப் பாருங்கள்.

❋❋❋

**★ சிந்தியா! ஆனந்த விகடனில் கரிகாலன் என்பவர் எழுதிய கவிதை கடந்தவார முரசில் பிரசுரமாகியிருந்தது. கடைசி வரிகளில் தவறு நேர்ந்துள்ளதே?**

ஆம். தவறுக்கு வருந்துகிறோம். இதுதான் கவிதையின் சரியான வடிவம்.

அவரது வீட்டின் சுவர்கள்
இடிக்கப்படுகின்றபோது
அவரது பிள்ளைகள் உயிரோடு
கொளுத்தப்படுகிறபோது
அவரது கருணை
நிராகரிக்கப்படுகிறபோது
அவரது இருப்பிடம் ஒப்பாரிகளால்
நிறைக்கப்படுகிறபோது
ஞாபகம் கொள்ள வேண்டும்
நாம் அகதியாக்கிக்
கொண்டிருக்கிறோம் கடவுளை!

❋❋❋

**★ சாமுராய் என்பவர் யார்?**

எஸ்.ரோகிணி, கோணக்கலை.

யப்பானிய தற்கொலைப் போராளி.

❋❋❋

**★ விதவை என்பது பெண்பால் அதற்கு ஆண்பால் என்ன?**

அனுஷா பவரெத்தினம், வல்வெட்டித்துறை.

தபுதாரன்.

❋❋❋



★ 'தமிழ்', 'தமிழன்', 'ஜெமினி' எப்படி?

இ.தனேந்திரன், மன்னார்.

'ஜெமினி'-டெக்னிக்கல் அடிதடி, 'தமிழன்'- சட்டத்தின் பிரம்படி, 'தமிழ்'- சண்டைக்கு மகன் தாயின் சொற்படி.

எல்லோரும் வன்முறையைக் களிப்பூட்டும் அம்சமாக மாற்றித் தந்து கொண்டிருக்கிறார்கள் என்பதே நம் வருத்தம்யா.

❋❋❋

**★ இளைய தலைமுறை நடிகர்களில் சகல விதத்திலும் முன்னணியில் இருப்பவர் யார்?**

ஜெஸ்மின், கண்டி.

அஜித்துக்கு நகைச்சுவை வராது, விக்ரமுக்கு ஆட்டம் வராது, விஜய்க்கு அழுகை வராது, பிரசாந்துக்கு நடிப்பு வராது, பிரபுதேவாவுக்கு கம்பீரம் வராது... சகலகலா வல்லவன் ஒருவர் இருக்கிறார். அவர் இளையவர்களுக்குள் வரமாட்டார்.

❋❋❋

**★ தங்களைத் தாங்களே புகழ்பவர்கள் பற்றி?**

சி.கிஷ்யந்தன், காரைதீவு-01.

இவர்களைக் கூடத் தாங்கிக் கொள்ளலாம். "புகழ்ச்சியே விரும்பாத நான் எவ்வளவு அடக்கமானவன் தெரியுமா?" என்று காட்டிக்கொள்ள முற்படுபவர்களைத்தான் தாங்கிக் கொள்ள முடிவதில்லை. அது சரி, உங்கள் பெயரே இதுதானா? அல்லது கலைவாணரின் கிந்தனார் கதையைப் போலவா?

❋❋❋

# மன்னாதி மன்னன்

103

**நா**ன்காவது நாள் மாலையிலும் மகாசூரன் வீணையை மீட்டியதும் ரூபகன்னிகை வந்து சேர்ந்துவிட்டாள். வழக்கம்போல் இருவரும் பூஞ்சோலைக்குள் சென்றனர். அங்கே ஒரு முரட்டு மந்திரவாதி தென்பட்டான். ரூபகன்னிகையைக் கண்டதும் பயங்கரமாக அவளை உற்றுப்பார்த்துக் கொண்டு அவளருகில் வந்தான்.

"பெண்ணே இந்த அற்பனை விட்டு விட்டு என்னுடன் வந்துவிடு" என்று சொன்னான். அவள், "நான் இவருடைய சொத்து. அவர் விரும்பினாலன்றி நான் உன்னுடன் வர முடியாது,"என்று கூறி விட்டு மகாசூரனின் பின்புறமாகப் போய் ஒதுங்கிக்கொண்டாள்.

மகாசூரனை ஏறிட்டுப் பார்த்த மந்திரவாதி "ஏ சிறுவனே! இப்பெண்ணை என்னிடம் ஒப்படைப்பாயானால் என்னுடைய மந்திரக்கோலை உனக்குத் தந்துவிடுவேன். இந்த மந்திரக் கோலால் இறந்துபோன எந்தச் சடலத்தைத் தொட்டாலும் அது உயிர் பெற்றெழுந்துவிடும்" என்று கூறினான்.

"எங்கே அந்த மந்திரக் கோலை என்னிடம் தா பார்க்கலாம்" என்று மகாசூரன் கேட்டதும் அந்த மந்திரவாதி அக் கோலைக் கொடுத்துவிட்டான்.

தன்னுடைய வஜ்ஜிர வாளை எடுத்து முரட்டு மந்திரவாதியை மகாசூரன் கொன்று விட்டான். மந்திரக் கோலையும் மகாசூரன் தன் வசமாக்கிக் கொண்டான்.

திருமால்புரியின் இளைய இளவரசரான மகாசூரன் தேவகன்னிகையான ரூபகன்னிகையுடன் இரவு முழுவதும் மகிழ்ச்சியாக இருந்து வந்தான். பூஞ்சோலையில் அவர்களிருவரும் உல்லாசமாக இருக்கும் பொழுது ஒவ்வொரு நாளும் வெவ்வேறு தபசிகள் வந்தார்கள். ரூபகன்னிகையை அவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்குத் தந்துவிடும்படி கேட்டு வந்தனர். அவர்களிடமிருந்து வஜ்ஜிரவாள், மந்திரப் பை, மிதியடி மற்றும் மந்திரக் கோல் ஆகியவற்றைத் தந்திரமாகப் பெற்றுக்கொண்ட மகாசூரன் அவர்களைக் கொன்றான்.

இதன்பின்னர் ரூபகன்னிகையும் மகாசூரனும் எந்த இடையூறுமில்லாது சில நாட்கள் இரவு வேளைகளை மகிழ்ச்சியாகக் கழித்தனர். ரூபகன்னிகை இளவரசனிடம் வீணையைக் கொடுக்கும்போது, "இதனை வேறெவரும் தொடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்" என்று எச்சரிக்கை செய்திருந்தாள். அதன்படி அந்த வீணையையும் தபசிகளிடமிருந்து பெற்ற பொருட்களையும் தனது அரண்மனையில் உள்ள அறையொன்றில் வைத்துப் பூட்டி வைத்திருந்தான்.

ஒருநாள் எதேச்சையாக அந்த அறையை மகாசூரன் பூட்ட மறந்து விட்டான். அந்த வேளையில் அவனுடைய தங்கையான அமிர்தகிரணக்கலை பூட்டாமல் கிடந்த அந்த அறைக்குள் புகுந்தாள். முதலில் அவளுடைய கண்களில் மந்திரப்பை தென்பட்டது, அதற்குள் விலையுயர்ந்த இரத்தினங்கள் இருக்கலாமென்று எண்ணியபடி அந்தப் பையினுள் கையை விட்டுத்துளாவினாள். அவள் எண்ணியபடியே அவள் கைநிரம்ப இரத்தினக் கற்கள் அகப்பட்டன.

## மகாசூரனின் மதியூகம்

அவற்றை எடுத்துக்கொண்டு தன்னிருப்பிடம் செல்லலாம் என்று எண்ணியவளுக்கு இரு பாதணிகள் தென்பட்டன. அவற்றில் தனது கால்களைப் புகுத்திக் கொண்டு அண்ணன் வருமுன்னர் அந்தப்புரம் சென்றுவிடலாம்" என்று நினைத்தாள். உடனடியாகவே அவள் தன்னுடைய அந்தப்புரத்திலிருக்கக் காணப்பட்டாள்.

இத்தகைய சந்தர்ப்பங்களினால் அச்சமுற்ற அவள் இரத்தினக்கற்களையும், பாதணியையும் அவை இருந்த இடத்திலேயே கொண்டுபோய் வைத்துவிடக் கருதியதும், அதேகணத்தில் அந்த அறையில் இருந்தாள். அங்கிருந்த மற்றொரு பொருளான வஜ்ஜிரவாளைக் கண்டாள். அதனைக் கையிலெடுத்தாள். அதே சமயத்தில் அந்த அறைக்குள் எலியொன்று ஓடியது. அதனை நோக்கி வஜ்ஜிர வாளை வீசினாள். அந்த எலியை இரண்டு துண்டுகளாக வாள் வெட்டி விட்டு மீண்டும் அதன் உறையினுள் புகுந்துகொண்டது.

அந்த அறையினுள் இருந்த கோலை எடுத்து துண்டாடப்பட்டுக்கிடந்த எலியின் உடலை அக் கோலால் தட்டி அறைக்கு வெளியே வீசிவிட முயன்றாள். ஆனால், அக்கோல் பட்டதும் எலி உயிர்பெற்றெழுந்து ஓடி மறைந்தது.

அமிர்தகிரணக்கலைக்கு ஒன்றன் பின் ஒன்றாக நிகழ்ந்த இச்சம்பவங்கள் வியப்பை அளித்தன. இதேவேளை அங்கிருந்த வீணையும் அவளுடைய கண்களில் பட்டது. அதனையும் எடுத்து வைத்துக் கொண்டு மீட்டத் தொடங்கினாள். அப்போது அவள் முன்னே பேரழகியான ஒரு பெண் தோன்றினாள். அப்பெண்ணின் முகத்தில் ஏமாற்றமும் கோபமும் ஒன்றாகக் கொப்பளித்தன.

இளவரசியின் மடியிலிருந்து வீணையைப் பிடுங்கிய ரூபகன்னிகையான அந்தப் பெண் தரையில் வீசி உடைத்தெறிந்தாள். இதைக் கண்டு வெகுவாகப் பயந்துபோன அமிர்தகிரணக்கலை தன் அந்தப்புரத்திற்கு ஓடிச்சென்றுவிட்டாள்.

அன்று மாலையில் ரூபகன்னிகையை அழைத்து முன்போல் உல்லாசமாய் இருக்க எண்ணிய மகாசூரன் அந்த அறைக்கு வந்து பார்த்த போது வீணை உடைந்து கிடப்பதைக் கண்டு ஏதோ விபதரீதம் நடந்துவிட்டதாக எண்ணிப் பெரும் வேதனையடைந்தான். வீணையை இனி மீட்டவும் முடியாது; ரூபகன்னிகையை மீண்டும் காணவும் முடியாது என்ற எண்ணம் அவனைப் பித்துப் பிடித்தவன் போலாக்கிவிட்டது.

மகாசூரனால் ரூபகன்னிகையை மறக்கமுடியவில்லை. எப்படியாவது



## இராஜகுமாரன்

அவளைக் கண்டுபிடித்தேயாக வேண்டும் என்று கருதித் தேவலோகம் செல்ல ஆயத்தமானான்.

பலவித முயற்சிகளைச் செய்து மகாசூரன் தேவலோகம் சென்றான். இந்திரனுடைய அவையை நாடி ஒரு மானிடன் வருவதைக் கண்ட தேவர்கள் மகாசூரனைத் தடுத்துத் துரத்தினார்கள். ஆனால், அவன் அசையாமல் அங்கேயே நின்றான்.

ஒரு மானிடன் இந்திரசபைக்கு வந்திருப்பதை அறிந்த இந்திரன் தன்னிடம் அழைத்துவரும்படி காவலர்களிடம் கூறியதும்,அவர்கள் மகாசூரனை அழைத்துச் சென்று இந்திரன் முன்னிலையில் நிறுத்தினர்.

**(மன்னன் வருவான்...)**

# காதில பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்று மில்லை *-காதில பூ கந்தசாமி-*

*இம் மாதம் 3ம் திகதி பத்திரிகையாளர்கள் தினம் அனுஷ்டிக்கப்பட்டதையிட்டு நானும் உங்களுக்குச் சில புத்திமதிகளைச் சொல்லலாமென்று நினைக்கிறேன்.*

*பத்திரிகா தர்மம் காக்கப்பட வேணும். பத்திரிகையில் எழுதப்பட்ட விடயம் சாகாவரம் பெற்றது. ஆதலால் நாம் எழுதுகின்றபோது, எழுதப்படும் விடயம் சரியானதா என்று உறுதிப்படுத்திக்கொண்டே எழுத வேண்டும். செய்தியென்பது புனிதமானது.அது பிற சேர்க்கையற்றதாக தகவலை மட்டும் வழங்க வேண்டும். முடிவுளை எடுப்பதற்கு வாசகர்களிடமே விட்டுவிட வேண்டும்.....*

*இப்படிப் பல உபதேசங்களைச் செய்து உங்களை எழுதவே பயப்பிடுற தொடை நடுங்கிகளாக்கிப்போட்டாங்கள் எங்கட வித்துவான்கள். நீங்கள் முன்னுக்கு வரவேணுமெண்டால் அதுக்குச் சில குறுக்கு வழிகள் தெரிஞ்சிருக்க வேணும்.*

*முதலில, பத்திரிகை எண்டது வியாபாரம் கண்டியளோ ஒரு வியாபாரிக்கு என்ன முக்கியமோ, அது போல ஒரு பத்திரிகை நிறுவனத்துக்கும் லாபந்தான் முக்கியம். பத்திரிகைக்கு நல்ல செய்தியெண்டால் எது தெரியுமோ? சனத்துக்கு எது கெட்ட செய்தியோ அதுதான் அதுக்கு நல்ல செய்தி! ஒரு குண்டு வெடிச்சால், ஒரு தாக்குதல் நடந்து நிறையப்பேர் செத்தால், ஒரு முக்கிய தலைவர் கொலைசெய்யப்பட்டால் அண்டைக்குப் பத்திரிகை எக்கச்சக்கமா வில்படும். ஒருவரைப்பற்றின நல்ல விஷயங்கள எழுதிறதை விட கெட்ட கிசுகிசுக்களை எழுதினாத்தான் அதிகம்பேர் ஆவலா வாசிப்பினம்.*

*ஆனபடியால, நீங்கள் இப்படியான செய்திகள எப்படித் தேடிப் பொறுக்கிறது, பொறுக்கினது ஒரு துரும்பாயிருந்தாலும் அதை ஒரு பெரிய தூணாய்க்காட்ட எப்படி அதுக்கு இட்டுக்கதை கட்டுக்கதையெல்லாத்தையும் சேத்து சப்பை கட்டிப் பெருக்கிறது எண்ட வித்தையைப் பழகி வைக்க வேண்டியது முதல் விஷயம்.*

*வீட்டுக்குள்ள ஒரு பெண் செத்துக் கிடந்தாளெண்டு வையுங்கோ. எப்பிடித் தலைப்புப் போடுவியள்? "வீட்டினுள் பெண் மரணம்" எண்டுதான் போட நினைப்பியள். அதுதான் பிழை. "பூட்டிய வீட்டினுள் அழகி படுகொலை" எண்டு விறுவிறுப்பாத் துணிஞ்சு போடுங்கோ. பெண் என்ன பெண். அழகி எண்டு போட்டால்தான் அதில மர்மமேதும் இருக்கெண்ட தொனி பிறக்கும். மரணமெண்டு உப்புச் சப்பிலாமல் போடாமல், "படுகொலை?" எண்டு சந்தேகக் குறியோட போட்டால்தான் விறுவிறுப்பாயிருக்கும். சந்தேகக் குறி போட்டதால உங்களில பிழை பிடிக்கவும் ஏலாது. வெறும் வீடெண்டு போடாமல் பூட்டின வீடெண்டு துணிஞ்சு போடுங்கோ, சந்தேகக் குறி அதுக்கும் சேர்த்துத்தான், புரிஞ்சுதோ?*

*பத்திரிகா தர்மமெண்டு புலம்புகினமே, அப்பிடி எந்தத் தர்மத்தையும் யாரும் எழுதி வைக்கயில்லை, உந்த பைபிள், குர்ஆன் மாதிரி. கண்ணதாசன் எழுதினானே மேலும் கீழும் கோடுகள் போட்டால் அதுதான் ஓவியம், நீ சொன்னால் காவியமெண்டு. அதப்போல நீ என்னத்தைக் கிறுக்கிறியோ அதுதான் எழுத்து. அதை யாரும் படிச்சால் கருத்து - போ, இதுதான் பத்திரிகா தர்மம்! சாகாவரம் பெற்ற எழுத்தெண்டு இங்க எதுவுமே இல்லை. இண்டைக்குப் பகல் எழுதினத, இரவே தலைகீழா மாத்தி எழுதலாம். ரணில இண்டைக்குச் சமாதானத்தின் தலைவன் எண்டு பாராட்டினால், நாளைக்கே ஒரு கொடுங்கோலனெண்டு தலைகீழா மாத்தி எழுதிறது பத்திரிகைக்குப் பெரிய கஷ்டமில்லை.*

*மற்றது உங்களுக்கு ஆங்கிள் எடுக்கத் தெரிய வேணும். அதாவது செய்திக் கோணம். உங்களுக்குச் சாதகமாச் செய்திய மாத்திற வித்தைதான் அது. ஒரு தம்பதி டிவோஸ் எடுத்துப் பிரிஞ்சு போனால், நீங்கள் மனைவியின்ர பக்கமெண்டால், குடிகாரக் கணவன்ரை ஆய்க்கினை பொறுக்காமல் அப்பாவி மனைவி விவாகரத்து எண்டு எழுத வேணும். புருஷனின்ர பக்கமாயிருந்தால், வாயாடி மனைவியின் தொல்லை தாங்காமல் எண்டு எழுதலாம். அதுக்குமேல மனைவிக்குக் கள்ளத் தொடர்பு அது இதெண்டும் வேணுமானபடி சேர்த்து எழுதிவிடலாம்.*

*இன்னொரு கலை உங்களுக்குக் கட்டாயம் தெரிஞ்சிருக்க வேணும். ட்டோன் டவுண் பண்ணுறதும் இருட்டடிப்புச் செய்யிறதும்தான் அது. ட்டோன் டவுண் எண்டால் காரம் குறைச்சு எழுதிறது. உங்களுக்கு வேண்டிய தரப்பப்பற்றி ஒரு கூடாத செய்தி வெளிவந்துட்டுதெண்டால் அந்தச் செய்திய மெதுவா யாருக்கும் தெரியாமல் அமுக்கி மறைச்சிட வேணும். அத வெளியிடத்தான் வேண்டி வந்திட்டுதெண்டால், அதின்ர காரத்தைக் குறைச்சு இதெல்லாம் பெரிய பிழையில்லையெண்டு தொனிக்கும் விதமா எழுத வேணும். இருட்டடிப்புச் செய்யிறதெண்டது மற்ற விதம். அதாவது, உங்களுக்கு வேண்டாத தரப்பப்பற்றி நல்ல செய்திகள் வந்திட்டுதெண்டால் அதை மெதுவா மூடி மறைச்சுப் போடுற வித்தைதான் இருட்டடிப்பு. இப்பிடிப் பத்திரிகைத் துறையில படிக்கிறதுக்கு நிறை விஷயமிருக்கு. நாளுக்காகச் சிலதுகளச் சொல்லித் தந்திருக்கிறன். சொன்னதுகள முதல் பழகிக்கொள்ளுங்கோ. பிறகு மீதி.*

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்தவாரம் உங்கள் பலன்

12.05.2002 தொடங்கி 18.05.2002வரை

## சோதிட மாமணி தில்லை

### கிரக நிலை

**மேடம்** - சூரியன், **மிதுனம்** - வியாழன் **விருட்சிகம்** - கேது

**இடபம்** - வெள்ளி, புதன், செவ்வாய், சனி, இராகு

சந்திரன் மேடம், இடபம், மிதுனம், கடகம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம்**

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) தொழில் மேன்மை, காரியானுகூலம், பொருள் வரவு, பெரியோர் உதவியுண்டு. உத்தியோகத்தில் இருந்து வந்த தொல்லைகள் மறையும். மாணவர்கள் கல்வியில் உயர்ச்சி பெறுவர். விவசாயிகள், வியாபாரிகள் உரிய இலாபமடைவர்.

அதிஸ்ட நாள்: செவ்வாய்,

அதிஸ்ட இல.: 1.

**இடபம்**

(கார்த்திகை பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) வெளியிட வாழ்க்கை, பொருள் விரயம், அந்நியரால் உதவியுண்டு. உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புக்களுக்கு இடமுண்டாகும். மாணவர்களுக்குக் கல்வி சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.

அதிஸ்ட நாள்: புதன்,

அதிஸ்ட இல.: 5.

**மிதுனம்**

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்) தொழில் சிறப்பு, பெரியோர் பகை, பணவரவு தடை, உயர்ந்த வாழ்க்கை உண்டாகும். உத்தியோகத்தில் முன்னேற்றம் ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் இருந்துவந்த தடைகள் நீங்கும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.

அதிஸ்ட நாள்: திங்கள்,

அதிஸ்ட இல.: 4.

**கர்க்கடகம்**

(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்) தொழிலில் மந்த நிலை, பணவரவில் தடை, பெரியோர் உதவி, வீண் மனக்கவலை உண்டு. உத்தியோகத்தில் நன்னிலை காட்டும். மாணவர்களுக்குக் கல்வியில் உயர்ச்சி உண்டு. விவசாயிகள், வியாபாரிகள் திட்டமிட்டுக் கருமங்கள் ஆற்றுவது சிறப்பைத் தரும்.

அதிஸ்ட நாள்: வெள்ளி,

அதிஸ்ட இல.: 2.

**சிங்கம்**

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) முயற்சி பலிதம், பெரியோர் நட்பு, பணவரவு, தொழிலில் சிறப்பு உண்டு. உத்தியோகரீதியான பிரச்சனைகள் தீரும். மாணவர்களுக்குக் கல்வியில் ஏற்பட்டிருந்த தடைகள் விலகும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.

அதிஸ்ட நாள்: செவ்வாய்,

அதிஸ்ட இல.: 7.

**கன்னி**

(உத்தரத்து பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) பெரியோர் உதவி, தொழிற்பேறு, கௌரவம், பணவரவு உண்டு. உத்தியோக ரீதியாக முன்னேற்றம் கிடைக்கும். மாணவர்களுக்குக் கல்வியில் உயர்ச்சி உண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் பெறுவர்.

அதிஸ்ட நாள்: புதன்.

அதிஸ்ட இல.: 2.

**துலாம்**

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்) தொழில் உயர்ச்சியும், பொருள் வரவும் உண்டு. எதிர்பார்த்த கருமங்களில் வெற்றி கிடைக்கும். உத்தியோகத்தில் கஷ்டங்கள் குறைவடையும். மாணவர்களுக்குக் கல்விச் சிறப்புண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.

அதிஸ்ட நாள்: வெள்ளி.

அதிஸ்ட இல.: 6.

**விருட்சிகம்**

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) தொழிலில் உயர்ச்சி, பணவரவு, குடும்ப மகிழ்ச்சி, பிள்ளைகளால் நன்மை ஏற்படும். உத்தியோக ரீதியாக ஏற்பட்டிருந்த தடைகள் விலகும். மாணவர்களுக்குக் கல்விச் சிறப்புண்டு. விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.

அதிஸ்ட நாள்: வியாழன்.

அதிஸ்ட இல.: 5.

**தனு**

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) தொழிலில் மந்த நிலை, பணவரவு தடை, பெரியோர் சகவாசம், மறைமுக எதிர்ப்புண்டாகும். உத்தியோகத்தில் சிறிது பிரச்சனை தோன்றி மறையும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் பெறுவர். விவசாயிகள், வியாபாரிகள் முதலீடுகளில் கவனமாக இருக்கவும்.

அதிஸ்ட நாள்: திங்கள்.

அதிஸ்ட இல.: 1.

**மகரம்**

(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) தொழிலில் மறைமுக எதிர்ப்பு, பணவிரயம், குடும்பத்தில் மனக் கவலை, உத்தியோகத்தில் மேலதிகாரிகளால் தொல்லை, மாணவர்களுக்குக் கல்வியில் மந்தநிலை, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.

அதிஸ்ட நாள்: புதன்.

அதிஸ்ட இல.: 3.

**கும்பம்**

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்) முயற்சி பலிதம். காரியானுகூலம், வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நட்பு ஏற்படும். உத்தியோக ரீதியாக நன்மைகள் சேரும். மாணவர்களுக்குக் கல்வி மேன்மையுண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.

அதிஸ்ட நாள்: செவ்வாய்.

அதிஸ்ட இல.: 4.

**மீனம்**

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) முயற்சிகளில் தடை, குடும்ப கலகம், பணவரவு குன்றும், கடன்படல் ஏற்படும். உத்தியோக ரீதியாகப் பிரச்சனைகள் தோன்றி மறையும். மாணவர்களுக்குக் கல்வி முன்னேற்றம் ஏற்படும். விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம் பெறுவர்.

அதிஸ்ட நாள்: திங்கள்.

அதிஸ்ட இல.: 1.




# பில்லியன் டொலர் பில் கேட்ஸ்



→ பணம் இருந்தாலும் மனம் இருக்கவேண்டும் என்று சொல்லுவார்கள். இங்கே படத்தில் இருப்பவர் உலகில் மிகப் பெரிய பணக்காரர்.

அமெரிக்க கம்பியூட்டர் கம்பனி சொந்தக்காரரான பில்கேட்ஸ், மைக்ரோ சொப்ட் நிறுவனத்தை அமைத்து பல ஆயிரக்கணக்கான கோடி டொலர்களைச் சம்பாதித்துக் குவித்தவர்.

இவர் தனது மைக்ரோ சொப்ட் உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதற்காக வேறு பல சிறிய நிறுவனங்களைத் திட்டமிட்டு அழித்ததாகவும், பல கம்பியூட்டர் நிபுணர்களை அடியோடு அழித்ததாகவும் எல்லாம் கதைகள் உண்டு. எப்படி இருந்தாலும் உலகில் மிகப் பெரிய கணனி மென் பொருள் உற்பத்தி நிறுவனத்திற்கு அதிபதியாகி தனது முயற்சியால் சம்பாதித்த கோடிக்கணக்கான பணத்தை இப்போது பல நல்ல வழிகளில் செலவிட்டு வருகிறார் பில்கேட்ஸ்.

இவர் சுயமாக ஆரம்பித்திருக்கும் தர்ம நிதியத்துக்கு 6 பில்லியன் டொலர் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார். ஆபிரிக்காவில் செயற்படும் நெல்சன் மண்டேலா எயிட்ஸ் நிதியத்துக்கு 25 மில்லியன் டொலர்கள் வழங்கித் தனது சேவை மனப்பான்மையை உலகுக்கு உணர்த்தியிருக்கிறார் பில்கேட்ஸ்.

உலகின் மிகப் பெரிய பணக்காரர் இவர்தானா என்ற வாதம் ஒருபுறம் இருக்கின்றபோதிலும் ஒரு தனி நபர் என்ற வகையில் பெருவாரியான நிதியை சமூக சேவைக்காக வழங்கியவர் என்ற பெருமை இவரையே சாருகிறது.

அமெரிக்காவில் மாத்திரமன்றி தற்போது மைக்ரோ சொப்ட் நிறுவனம் உலகின் பல நாடுகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக இந்தியாவில் அந்நிறுவனத்தின் பல கிளைகளை பில்கேட்ஸ் அமைத்து வருகிறார். இதற்கென அடிக்கடி இந்தியா வந்து செல்லும் இவர் அங்குள்ள பல்வேறு மனிதநேய அமைப்புக்களுக்கும் பொருளாதார உதவிகளை வழங்கியுள்ளார்.




---

↓ பிரிட்டிஷ் அரச குடும்பத்திற்கும் சதாரண பொது மக்களுக்கும் இடையிலான இடைவெளி தொன்று தொட்டே பெரிதாக இருந்துவருவது வழக்கமானது.

பிரிட்டிஷ் மகாராணிகள் எப்பொழுதும் சாதாரண பொதுமக்களை எட்டத்தில் வைத்துப் பழகுவதையே கௌரவமாகக் கருதினர். தாங்கள் அரச வம்சம் என்ற தேவலோக வரத்தைப் பெற்றவர்கள் போலவும், ஏனையவர்கள் தீண்டத் தகாதவர்கள் என்ற சிந்தனையுமே அரச குடும்பத்தின் பலருக்கும் இருந்து வந்தது.

உலக மக்களின் பேரன்பைப் பெற்ற இளவரசி டயானா அந்த அரச சம்பிரதாயங்களைத் தாண்டி சாதாரண பொதுமக்களுடன், எயிட்ஸ் நோயாளிகளுடன் கூட மிகவும் அந்நியோன்னியமாகப் பழக ஆரம்பித்தார். அரச குடும்பத்தை விட்டு டயானா தூரமானதற்கு இதுவும் ஒரு காரணமாக சுட்டிக் காட்டப்பட்டது. இப்போது அவரது மகன் வில்லியமும் தாய் வழியைப் பின்பற்றி சாதாரண பொதுமக்களுடன் சாதாரணமாகப் பழகுகிறார்.

அண்மையில் பிரேசிலில் நடைபெற்ற சர்வதேச இளைஞர் மாநாடொன்றில் பங்குபற்றிய வில்லியம் அங்கு வந்திருந்த மூன்றாம் உலக நாடுகளின் ஏழைச் சிறுவர்களுடன் இயல்பாகப் பழகியதுடன் தான் பிரிட்டிஷ் இளவரசர் என்ற மமதையை ஒதுக்கிவிட்டு ஏனையவர்களைப்போல கடினமான வேலைகளைச் செய்தும், தனது இருப்பிடங்களை தானே கூட்டிப் பெருக்கிச் சுத்தம் செய்தும் முன்னுதாரணமாகச் செயற்பட்டார். பல ஆபிரிக்க நாடுகளில் இருந்து வந்திருந்த இளைஞர்கள் வில்லியத்தை ஆசையுடன் காண அவரது அறைக்குச் சென்றபோது அங்கு தனது அன்றாடப் பணிகளை அவர் சுயமாக மேற்கொண்டிருந்ததைக் கண்டு வியப்படைந்தனர். வில்லியத்தின் இந்தப் போக்கு அரச குடும்பத்தினரை குறிப்பாக பாட்டி எலிஸபெத் மகாராணியை கவலை கொள்ள வைத்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.



# தாய் வழி

↓ மழையில் நனைந்தால் எஜமானுக்கு மட்டுந்தான் காய்ச்சல் வருமா என்ன?

கொட்டும் மழையில் துணைக்கு அழைத்துக்கொண்டுபோகும் தனது செல்லப் பிராணியான நாய்க்குட்டிக்கும் தனது குடையின் நிறத்திலேயே அழகானதொரு ஜேர்க்கினை அணிவித்து மழையில் இருந்து காப்பாற்றிக் கூட்டிச் செல்கிறார் இந்த எஜமான். ஐரோப்பிய நாடுகளில் மனிதர்களுக்குப் போலவே குளிர்கால உடைகளும் மழைக் கவசங்களும் செல்லப் பிராணிகளுக்காகவும் சந்தையில் விற்பனையாகின்றது.



## 1வது பிறந்தநாள் வாழ்த்து 07.05.2002



### செல்வன் கசிகன் — செல்வி கசிகா

[illegible]



[illegible] வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 18A ஆம் இலக்கத்தில் டி.டி. எண்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் பொரளைகமுவவில் உள்ள சி.பி.டி. அச்சகத்தில் மே 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.